நிமிர்வோம்
தடைகளைத் தகர்த்து...

திராவிடர் விடுதலைக் கழக மாத இதழ்
மே 2018 / ரூ.20
www.dvkperiyar.com
nimirvomdvk@gmail.com

ஆசிரியர் குழு
கொளத்தூர் மணி
விடுதலை இராசேந்திரன்

அலுவலக நிர்வாகம்
சூலூர் பன்னீர்செல்வம்
இரா.செந்தில்
ந. அய்யனார்

இதழ் வடிவமைப்பு
வெல்கின் கணினி

அட்டை வடிவமைப்பு
க. பகலவன்

அலுவலக முகவரி
95, டாக்டர் நடேசன் சாலை
அம்பேத்கர் பாலம்
மயிலாப்பூர், சென்னை 600 004
தொலைபேசி எண்:
044-24980745

அனைத்துத் தொடர்புகளுக்கும்
இரா. உமாபதி
72992 30363

# சுயமரியாதையும்–பொதுவுடைமையும்

காரல்மார்க்ஸ் 200ஆவது பிறந்த நாள் ஆண்டு இது. மார்க்சியம் குறித்த விவாதங்கள், மறு வாசிப்புகள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. தமிழ்நாட்டில் பெரியாரின் சுயமரியாதை இயக்கத்துக்கும் பொதுவுடைமை இயக்கத்துக்குமிடையே வரலாற்று ரீதியான உறவுகள் உண்டு. பெரியார் சோவியத் நாட்டுக்குப் பயணம் மேற்கொள்வதற்கு முன்பே சமதர்ம கருத்துகளில் ஈடுபாடு கொண்டிருந்ததை அவரது பேச்சு, எழுத்துக்கள் வெளிப்படுத்துகின்றன. பெரியார் அய்ரோப்பிய சுற்றுப் பயணம் முடித்துத் திரும்பியவுடன், பொதுவுடைமை – சுயமரியாதைக் கொள்கை களில் உறுதியுடன் இருந்த தோழர் சிங்காரவேலர் தயாரித்து, பிறகு விவாதங்கள், திருத்தங்கள் செய்யப்பட்ட சுயமரியாதை சமதர்மத் திட்டத்தை 1933இல் பெரியார் வெளியிட்டதோடு சுயமரியாதை இயக்கத்தில் ‘சமதர்மப்’ பிரிவு ஒன்றைத் தொடங்கி நாடு முழுதும் சுயமரியாதை சமதர்ம சங்கங்களை தோற்றுவித்தார்.

‘சமதர்மத் திட்டத்தை’ பெரியார் கையில் எடுத்த நிலையில் அன்றைய பிரிட்டிஷ் ஆட்சி சுயமரியாதை இயக்கத்தின் மீது கடும் ஒடுக்குமுறைகளைத் தொடங்கிவிட்டது. சமதர்மத் திட்டத்தை ஒத்தி வைத்து சுயமரியாதை இயக்கத்தைத் தொடர்ந்து முன்னெடுக்க பெரியார் முடிவெடுத்தபோது சிங்காரவேலர், ஜீவானந்தம் போன்றவர்கள் பெரியாரைக் கடுமையாக விமர்சித்து, பெரியார் இயக்கத்தை விட்டு வெளியேறினார்கள். அந்தக் காலகட்டத்தில் பெரியார் ‘குடிஅரசு’ இதழில் எழுதிய கட்டுரைகளை இந்த இதழில் வெளியிட்டிருக்கிறோம். எப்போதுமே ஒளிவு மறைவில்லாது வெளிப்படைத் தன்மைகளோடு சுய விமர்சனங்களையும் தவிர்க்காமல் தனது கருத்துக்களை வெளிப்படுத்தும் நேர்மையாளர் பெரியார். இந்தக் கட்டுரைகளைப் படித்தாலே இந்த உண்மையை உணர முடியும்.

ஒரு இயக்கத்தைப் பற்றிய மதிப்பீட்டை அந்த இயக்கம் செயல்பட்ட வரலாற்றுச் சூழலோடு தொடர்புபடுத்தியும் அந்தச் சூழலுக்குள் பொருத்தியும் பார்க்கும்போதே அந்த இயக்கம் குறித்த மதிப்பீடு முழுமை பெறும்.

‘பிரிட்டிஷ் எதிர்ப்பு – தேச பக்தி’ என்ற வட்டத்துக்குள் அரசியல் முடங்கிப் போயிருந்த சூழலில் அதிலிருந்து வெளியே வந்து ஜாதிய சமூகத்தின் அடிப்படையான முரண்பாடுகளைக் கண்டறிந்து ஒடுக்கப்பட்டோர் உரிமை இயக்கத்தை முன்னெடுத்தவர் பெரியார். இதற்காக தன்னை ‘தேச விரோதி’யாக சித்தரித்த ‘தேச பக்தர்களின்’ விமர்சனங்களை அவர் புறந்தள்ளினார்.

சுயமரியாதை சமதர்ம அமைப்புகளைத் தொடங்கியபோதும் பார்ப்பனிய ஒழிப்பு, தீண்டாமை ஒழிப்பு, தாழ்த்தப்பட்டோர் விடுதலைக்கான கொள்கைகளை முன்னெடுக்கும் அவசியத்தை உணர்ந்து கட்சி வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு பரந்துபட்ட ‘வரலாற்று அணி’யை உருவாக்கவும் செய்தார்.

சமதர்மப் பிரச்சாரத்தை தள்ளி வைப்பதாக அறிவித்த அதே ஆண்டில் தான் மே தினக் கொண்டாட்டங்களை நடத்துமாறு வேண்டுகோள் விடுத்தார். அவரது வேண்டுகேளும் ‘மே’ தின உரையும் இந்த இதழில் வெளியிடப்பட்டிருக்கிறது.

‘உலகமயமாக்கல்’ என்ற கொள்கையை முதலாளித்துவம் கையில் எடுத்த பிறகு பன்னாட்டு நிறுவனங்களுடன் பார்ப்பன அதிகாரவர்க்கம் தன்னை இணைத்துக் கொண்டு சமூகத்திலும் பொருளாதாரத்திலும் ஒடுக்கப்பட்ட மக்களை சுரண்டவும் பார்ப்பனிய மேலாண்மையை உறுதிப்படுத்தவும் முனைந்து செயலாற்றுகிறது.

இந்த வரலாற்றுச் சூழல் ‘பெரியாரியம் – அம்பேத்கரியம் – மார்க்சிய’ இயக்கங்களிடையே சமூகப் புரிதலையும் ஒன்றுபட்ட போராட்டங்களையும் நடத்த வேண்டிய நிலையை உருவாக்கியிருக்கிறது.

இளைய தலைமுறைக்கு இந்த வரலாற்றுச் செய்திகளைக் கொண்டு செல்லும் நோக்கத்தோடு ‘நிமிர்வோம்’ இதழ் அது தொடர்பான பெரியார் கட்டுரைகளைப் பதிவு செய்திருக்கிறது.







# நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்படும் காவி பயங்கரவாதிகள்

● செ.கார்கி

*இந்திய நீதித்துறைக்கு இது இருண்ட காலம். குஜராத் கலவரத்தில் இருந்து தொடங்கி கொலை வெறியாட்டம் நடத்திய காவி பயங்கரவாதிகள் அனைவருக்கும், மோடி பதவியேற்றதில் இருந்து, விடுதலை அளிக்கும் பணி வெகு விரைவாக நீதிமன்றத்தின் துணையுடன் நடந்து வருகின்றது.*

முன்னதாக குஜராத் கலவரத்தில் மோடிக்கு உள்ள தொடர்பு பற்றிய உண்மைகளை மோடி அரசில் வருவாய்த் துறை இணை அமைச்சராக இருந்த ஹரேன் பண்டியா ‘ மக்கள் நீதி மன்றம்’ என்ற அமைப்பு நடத்திய விசாரணையில் ஒப்புக்கொண்டதால் அவர் சோராபுதீன் என்ற ரவுடி மூலம் படுகொலை செய்யப்பட்டார். இந்த உண்மை வெளியே கசியவே மோடி சோராபுதீனை போலி மோதல் மூலம் கொல்ல வன்சாரா என்ற அதிகாரியை நியமித்தார். வன்சாரா சோராபுதீனையும் அவனது அடியாளாக இருந்த துளசி ராம் பிரஜாபதியையும் போலி மோதலில் கொன்றது மட்டும் அல்லாமல் சோராபுதீனின் மனைவி கவுசர் பீ யையும் விச ஊசி போட்டுக் கொன்றார். இவ்வளவு கொலைகளும் நரேந்திர மோடி என்ற ஒற்றை நபரை குஜராத் கலவர வழக்கில் இருந்து காப்பாற்றுவதற்காகவே செய்யப்பட்டன. வன்சாரா என்ற காவல்துறை அதிகாரி சோராபுதீன் போலி என்கவுன்டர் வழக்கில் மட்டும் அல்லாமல் இஷ்ரத் ஜகான், ஜாவேத் ஷேக் என்ற பிரானேஷ் பிள்ளை, அம்ஜத் அலி, ஜிஷன் ஜோஹர் அப்துல் கனி ஆகிய நான்கு பேர்களை லஷ்கர் இ தொய்பா அமைப்பைச் சார்ந்தவர்கள் என்றும் அவர்கள் மோடியை கொல்வதற்காக குஜராத்துக்கு வந்ததாகவும் பொய்யான குற்றம் சாட்டி போலி என்கவுன்டர் செய்த வழக்கிலும் முக்கிய குற்றவாளியாவார்.

வன்சாரா சிறையில் இருந்த போது குஜராத் அரசுக்கு 10 பக்க ராஜினாமா கடிதத்தை அனுப்பி இருந்தார் அந்தக் கடிதத்தில் வன்சாரா, தான் நடத்திய அனைத்து போலி என்கவுன்ட்டர் கொலைகளும் மோடிக்காக நடத்தப்பட்டது என்பதையும் மோடி எப்படி காவல்துறையைத் தன்னுடைய சுயநலத்திற்காக பயன்படுத்திக் கொண்டார் என்பதையும் வெளிப்படுத்தி இருந்தார்.அது மட்டும் அல்லாமல் ‘குஜராத் தலைநகர் காந்திநகரில் செயல்பட்டுவரும் மோடியின் அரசை சபர்மதி மத்திய சிறைக்கு மாற்றவேண்டும்’ என்று வன்சாரா வெளிப் படையாக கோரிக்கை வைத்தார். ஆனால்

மோடியின் கூலிப்படையான சிபிஐ திட்டமிட்டு வன்சாராவை விடுவிக்கும் நோக்கத்தோடே செயல்பட்டது. இதனால் மும்பை சிபிஐ சிறப்பு நீதிமன்றம் வன்சாராவை கடந்த ஆண்டு விடுவித்தது.

மேலும் போலி என்கவுன்டர் வழக்கில் முக்கிய குற்றவாளியாக சேர்க்கப்பட்ட அப்போதைய குஜராத் மாநில உள்துறை அமைச்சராக இருந்த அமித்ஷா 2014 ஆம் ஆண்டு அவர் மீதான அனைத்து வழக்குகளில் இருந்தும் விடுவிக்கப்பட்டார். குஜராத்தில் வழக்கு நடந்தால் நியாயம் கிடைக்காது என்பதால் இந்த வழக்கு குஜராத்தில் இருந்து மும்பைக்கு மாற்றப்பட்டது. மும்பை சி.பி.ஐ நீதிமன்றத்தில் முதலில் இந்த வழக்கை விசாரித்து வந்த ஜே.டி. உத்பத், அமித்ஷா வழக்கில் ஆஜராகாமல் ஏமாற்றுவதை தொடர்ச்சியாக கண்டித்ததால் காரணம் ஏதுமின்றியே 2014 ஜூன் 26 ஆம் தேதி பூனா நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டார். அவருக்கு அடுத்து இந்த வழக்கில் நியமிக்கப்பட்ட நீதிபதி லோயா அவர்களும் அமித்ஷா மும்பையிலேயே இருந்துகொண்டு வழக்கில் ஆஜராகாமல் ஏமாற்றுவதைக் கண்டித்தார். அமித்ஷாவுக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கக்கோரி அவர் கடுமையாக நிர்பந்திக்கப்பட்டார். மும்பை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியான மோகித்ஷா மூலம் 100 கோடி ரூபாய் பேரமும் பேசப்பட்டது. ஆனால் வழக்கில் நேர்மையாக நடந்து கொண்டதால் அமித்ஷாவின் விருப்பப்படி 2014 டிசம்பர் ஒன்றாம் தேதி நாக்பூரில் மர்மமான முறையில் உயிரிழந்தார். லோயாவுக்கு அடுத்து இந்த வழக்கில் ஆஜரான எம்.வி. கோசாவி பொறுப்பேற்ற பதினைந்தே நாளில் அமித்ஷாவை விடுவித்து அவரை உத்தமர் ஆக்கினார்.

மகாராஷ்டிராவை சேர்ந்த பத்திரிக்கை யாளர் லோனே என்பவர் நீதிபதி லோயா மரணம் தொடர்பாக சுதந்திரமான விசாரணை நடத்தி உண்மையை வெளிக் கொண்டு வர வேண்டும் என்று உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கு உச்சநீதிமன்றத்தின் 10 வது அமர்வுக்கு மூத்த நீதிபதிகள் அருண் மிஸ்ரா மற்றும் எம்.எம். சந்திரகௌடரிடம் ஒதுக்கப்பட்டது. திட்டமிட்டே வழக்கை முடித்துக்கட்டுவதற்காக இந்த வழக்கு 10 வது அமர்வுக்கு தலைமை நீதிபதி தீபக் மிஸ்ராவால் ஒதுக்கப்பட்டது என குற்றச்சாட்டு எழுந்தது. இதனால்தான் மிக முக்கியமான வழக்குகளை தலைமை நீதிபதி அடங்கிய அமர்வு மட்டுமே விசாரிக்கின்றது; அவை மற்ற மூத்த நீதிபதிகள் அமர்வுக்கு ஒதுக்கப்படுவதில்லை; வழக்குகளை ஒதுக்குவதில் பாரபட்சம் காட்டப்படுகின்றது; அவர் தனக்கு விருப்பமான அமர்வுக்கே வழக்குகளை ஒதுக்குகின்றார் என்று உச்சநீதிமன்ற மூத்த நீதிபதிகள் செலமேஸ்வர், ரஞ்சன் கோகோய், எம்.பி.லோகுர், குரியன் ஜோசப் ஆகிய நான்கு நீதிபதிகளும் தலைமை நீதிபதி தீபக்மிஸ்ராவுக்கு எதிராக போர்க்கொடி உயர்த்தினார்கள். இறுதியாக நீதிபதி லோயா இயற்கையாகவே மரணமடைந்தார் என உச்சநீதிமன்றம் அருள்வாய் மலர்ந்தது.

அதே போல குஜராத் மாநிலம் நரோடா பாட்டியாவில் இந்துமத வெறியர்களால் 97 பேர் படுகொலை செய்யப்பட்டனர். இந்த வழக்கில் முக்கிய குற்றவாளியான மாயா கோட்னானிக்கு விசாரணை நீதிமன்றம் 2012 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28 ஆண்டுகள் சிறைதண்டனை விதித்து. ஆனால் சென்ற மாதம் குஜராத் உயர் நீதிமன்றம் இந்த வழக்கில் இருந்து மாயா கோட்னானியை விடுவித்து தீர்ப்பளித்தது.

இந்த வழக்குகள் மட்டும் அல்லாமல் காவி பயங்கரவாதிகள் தொடர்புடைய குண்டு வெடிப்பு வழக்குகளிலும் நீதிமன்றங்கள் இதே போக்கையே கடைபிடித்தன. மெக்கா மசூதி குண்டுவெடிப்பு வழக்கில் இருந்து ஆசிமானந்தா உட்பட 5 பேரை விடுவித்து ஹைதராபாத்தில் உள்ள நாம்பல்லி என்.ஐ.ஏ சிறப்பு நீதிமன்றம் சென்ற மாதம் உத்திரவிட்டது. நிச்சயம் இந்த வழக்கில் இருந்து ஆசிமானந்தா விடுவிக்கப் படுவார் என்பது அனைவரும் எதிர்பார்த்தது தான். ஒருவேளை நீதிபதி நேர்மையாக நடந்து ஆசிமானந்தாவுக்கு தண்டனை வழங்கி இருந்தால் நிச்சயம் அவர் மர்மமான முறையில் உயிரிழக்க நேர்ந்திருக்கும். காவிபயங்கரவாதிகள் சம்மந்தப்பட்ட வழக்கை விசாரிக்கும் ஒவ்வொரு நீதிபதியும் நீதியை காப்பாற்ற போராடு கின்றார்களோ இல்லையோ தன்னுடைய

**குண்டு வெடிப்புகள் அனைத்தும் மோகன் பகவத்தின் ஒப்புதலோடு செய்யப்பட்டது என்பதை கேரவன் ஆங்கில இதழுக்கு அளித்த தன்னுடைய பேட்டியில் ஆசிமானந்தா கூறியிருக்கின்றார்.**

உயிரை காப்பாற்றிக்கொள்ள போராடவேண்டி இருக்கின்றது. ஆசிமானந்தாவை மெக்கா மசூதி குண்டுவெடிப்பு வழக்கில் இருந்து விடுவித்த என்ஐஏ நீதிமன்ற சிறப்பு நீதிபதி ரவீந்திரா ரெட்டி தீர்ப்பு கொடுத்த சில மணி நேரங்களில் தன்னுடைய ராஜினாமா கடிதத்தை கொடுத்துள்ளார். அதுவும் தன்னுடைய ராஜினாமாவுக்கும் தான் கொடுத்த தீர்ப்புக்கும் எந்தச் சம்மந்தமும் இல்லை என்று குறிப்பிட்டுள்ளார். இதில் இருந்தே இந்தத் தீர்ப்பு மிரட்டி வாங்கப்பட்டிருப்பதற்கான வாய்ப்பு மிக அதிகமாக உள்ளதை நாம் உணர்ந்து கொள்ளலாம். மனசாட்சிக்கு விரோதமாக ஒரு பயங்கரவாதியை விடுவித்த தன்னுடைய இழி நிலையை எண்ணி மேற்படி நீதிபதி அவர்கள் குற்ற உணர்வின் காரணமாகவே தன்னுடைய பதவியை ராஜினாமா செய்திருக்கின்றார்.

நீதிபதிகளை காவி பயங்கரவாதிகள் நேரடியாக மிரட்டி தங்களுக்குச் சாதகமாக தீர்ப்புகளை வாங்குவது மட்டுமின்றி தன்னுடைய 'ஏவல்'படையாக உள்ள சிபிஐ, என்.ஐ.ஏ போன்றவற்றின் மூலமும் மிரட்டி நீதியை வாங்குகின்றார்கள். மாலேகான் குண்டு வெடிப்பு வழக்கில் முக்கிய குற்றவாளியான ராணுவ அதிகாரி கர்னல் புரோகித்துக்கு எதிராக அரசு தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் ரோகினி சாலியன் தன்னிடம் இந்த வழக்கில் மென்மையான போக்கை கையாளுமாறு தேசிய புலனாய்வு சிறப்பு விசாரணை (N.I.A.) அதிகாரி வேண்டுகோள் வைத்தாக குற்றம்சாட்டினார். இதனால் இந்த வழக்கில் இருந்து அவர் நீக்கப்பட்டார். ஆனால் புரோகித்துக்கு உச்ச நீதிமன்றம் பிணை வழங்கியது.

காவி பயங்கரவாதிகள் மீது தேசிய புலனாய்வு சிறப்பு விசாரணை (N.I.A.) நீதிமன்றங்களில் நடந்த அனைத்து வழக்குகளிலும் இருந்தும் அவர்கள் விடுவிக்கப்பட்டிருக்கின்றார்கள் என்பதுதான் கடந்தகால வரலாறாக உள்ளது. 2007 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் ராஜஸ்தானில் உள்ள ஆஜ்மீர் தர்காவில் குண்டு வெடித்து மூன்று பேர் கொல்லப்பட்டனர்,17 பேர் படுகாயம் அடைந்தனர். இந்த வழக்கு சம்மந்தமாக ஆசிமானந்தா உட்பட 13 பேர்மீது குற்றம் சாட்டப்பட்டது. இந்த வழக்கில் இருந்தும் ஆசிமானந்தா உட்பட 7 பேரை ஜெய்பூர் என்.ஐ.ஏ சிறப்பு நீதிமன்றம் விடுவித்தது. மூன்று பேர் மீது குற்றம் உறுதி செய்யப்பட்டது. இன்னும் வழக்கில் சம்மந்தப்பட்ட மூன்று பேரை பத்துவருடங்களாக என்.ஐ.ஏ தேடிக் கொண்டே இருக்கின்றது. இதுதான் என்.ஐ.ஏ நீதிமன்றங்களின் நிலை. ஆசிமானந்தாவுக்கு மட்டும் அல்லாமல் பெண் சாமியார் பிரக்யா சிங் தாக்கூர் வழக்கிலும் என்.ஐ.ஏ இதே போலத்தான் நடந்துகொண்டது.

மாலேகான் குண்டுவெடிப்பு வழக்கை விசாரித்துவந்த தேசிய புலனாய்வு விசாரணை அமைப்பு (என்.ஐ.ஏ) தனது இறுதி அறிக்கையை மும்பை சிறப்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த போது இந்த வழக்கில் முக்கிய குற்றவாளியாக சேர்க்கப்பட்டிருந்த பெண் சாமியார் பிரக்யா சிங் தாக்கூர் உட்பட ஆறுபேர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை திரும்பப் பெற்றது. பிரக்யா சிங் தாக்கூர் மீதான குற்றச்சாட்டை என்.ஐ.ஏ கைவிட்டது முதல் முறையல்ல ஏற்கெனவே இது நடந்துள்ளது. ஆர்.எஸ்.எஸ் அமைப்பைச் சேர்ந்த சுனில் ஜோஷி என்பவன் 2007 ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட்டான். இந்த வழக்கில் குற்றவாளியாக சேர்க்கப்பட்டிருந்த பிரக்யா சிங் தாக்கூர் பின்னர் இந்த வழக்கில் இருந்து என்.ஐ.ஏ வால் விடுவிக்கப்பட்டார். சுனில் ஜோசியும் காவிபயங்கரவாதிகள் நடத்திய பல குண்டு வெடிப்பு வழக்குகளில் முக்கிய குற்றவாளி யாவான். இவன் பிரக்யா சிங் தாக்கூரிடம் தவறாக நடக்க முயன்றதால்தான் கொல்லப் பட்டதாக என்.ஐ.ஏ தரப்பில் தெரிவிக்கப் பட்டிருந்தது

மேலும் மாலேகான் குண்டுவெடிப்பு வழக்கு சம்மந்தமாக குற்றம் சாட்டப்பட்ட 11 பேர் மீது மகாராஷ்டிரா, திட்டமிட்ட குற்றத் தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டதை நாசிக் நீதிமன்றம் ரத்து செய்தது. இதற்கு நாசிக் நீதிமன்றம் சொன்ன காரணம், மகாராஷ்டிரா குற்றத்தடுப்புச் சட்டத்தின் கீழ் ஒருவர் மீது குற்றச்சாட்டு பதிவு செய்யப்படவேண்டும் என்றால் அந்த நபர் ஏற்கெனவே இரு முக்கிய குற்றச்செயல்களில் ஈடுபட்டிருக்கவேண்டும். ஆனால் பிரக்யா சிங் தாக்கூர் மீது அப்படி எந்தக் குற்றச்சாட்டுகளும் இல்லாததால் அவரை மகாராஷ்டிரா திட்டமிட்ட குற்றத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்தது செல்லாது என நாசிக் தனி நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

2008 ஆம் ஆண்டு நடந்த மாலேகான் குண்டுவெடிப்பு வழக்கில் மட்டுமே பிரக்யா சிங் தாக்கூர் குற்றவாளியாக சேர்க்கப்பட்டார். ஆனால் அதற்குமுன் 2006 ஆம் ஆண்டு மாலேகானில் நடந்த குண்டுவெடிப்பு வழக்கில் ஏறக்குறைய 37 பேர் கொல்லப்பட்டனர். முதலில் இந்தக் குண்டுவெடிப்பு தடைசெய்யப்பட்ட சிமி இயக்கத்தால் நடத்தப்பட்டது என கூறி அப்பாவி முஸ்லீம்கள் 9 பேர் கைது செய்யப் பட்டனர். ஆர்.எஸ்.எஸ் அமைப்பை சேர்ந்த ஆசிமானந்தா கைது செய்யப்பட்ட போதுதான் காவிபயங்கரவாதிகள் எவ்வளவு அபாயகர மானவர்கள் என வெளி உலகத்திற்குத் தெரியவந்தது. ஆசிமானந்தா தனது ஒப்புதல் வாக்குமூலத்தில் 2006 ஆம் ஆண்டு நடந்த மாலேகான் குண்டுவெடிப்பு மட்டும் அல்லாமல் 2007 ஆம் ஆண்டு நடந்த சம்ஜவ்தா எக்ஸ்பிரஸ் ரயில் குண்டுவெடிப்பு, ஆஜ்மீர் தர்கா குண்டு வெடிப்பு, மெக்கா மசூதி குண்டுவெடிப்பு போன்றவையும் காவிக்கூட்டத்தால் திட்டமிட்டே நடத்தப்பட்டதை ஒப்புக் கொண்டான்.

இதற்குப் பின்தான் மாலேகான் குண்டு வெடிப்பு வழக்கில் கைது செய்யப்பட்ட அப்பாவி முஸ்லீம்கள் ஜாமினில் விடுவிக்கப் பட்டனர். இது தொடர்பாக அப்போது கருத்து தெரிவித்த ராவின் முன்னாள் தலைவர் பி.ராமன், “2006 ஆம் ஆண்டு முதல் நடந்த அனைத்துத்



**அப்சல் குருவுக்கும், யாக்கூப் மேமனுக்கு ஒரு சட்ட புத்தகத்தை யும், மோடி, அமித்ஷா, அசீமானந்தா போன்றவர்களுக்கு மனுவின் சட்ட புத்தகத்தையும் வைத்துத் தீர்ப்பு வழங்குகின்றன, நீதிமன்றங்கள்!**

தீவிரவாத தாக்குதல் தொடர்பான வழக்கு விசாரணைகளிலும் மதவாதமும், அரசியலும் புகுந்து விசாரணையை ஸ்தம்பிக்க வைத்து வருகின்றன. தவறான குற்றச்சாட்டின் பேரில்தான் பலரும் கைது செய்யப்பட் டுள்ளார்கள். அவர்கள் முஸ்லீமாக இருந்தாலும் சரி, இந்துவாக இருந்தாலும் சரி முறையான உருப்படியான ஆதாரம் எதையும் விசாரணை அமைப்புகள் வைத்திருக்கவில்லை. மாறாக இந்தக் கைதுகளை அரசியல் மயமாக்கி அதன் மூலம் லாபம் அடையும் முயற்சிகள் தான் நடந்து வருகின்றன” என உண்மையைப் போட்டு உடைத்தார்.

மெக்கா மசூதி குண்டுவெடிப்பு வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்ட ஆசிமானந்தா ஆர்.எஸ்.எஸ் அமைப்பில் மிக முக்கியமான நபர் அவர். முஸ்லிம்களுக்கு எதிரான ஆர்.எஸ்.எஸ் தான் கொண்டிருக்கும் கொலைவெறியை இவர் மூலமாகவே தீர்த்துக் கொண்டது. அதனால் தான் நீதித் துறையை மிரட்டி பணிய வைத்து அவரை விடுவித்திருக்கின்றது மோடி அரசு.

இந்தக் குண்டுவெடிப்புகள் அனைத்தும் ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத்தின் ஒப்புதலோடு செய்யப்பட்டது என்பதை கேரவன் ஆங்கில இதழுக்கு அளித்த தன்னுடைய பேட்டியில் ஆசிமானந்தா கூறியிருக்கின்றார். மோகன் பகவத் தன்னை சந்தித்து, “ நீங்கள் இதைச் செய்தால் நாங்கள் சற்று இளைப்பாறுவோம். எந்தத் தவறும் அதன் பின் நடக்காது. அது கிரிமினல் வழக்காக மாறாது. இதை நீங்கள் செய்தால் அதன்பின் “ஒரு குற்றத்திற்காகவே நாம் இந்தக் குற்றத்தைச் செய்தோம் என்று மக்கள் கூற மாட்டார்கள். இது நமது தத்துவத்தோடு இணைக்கப்பட்டது. இது இந்துக்களுக்கு மிகவும் முக்கியமானது. தயவு செய்து இதைச் செய்யுங்கள். உங்களுக்கு எங்கள் ஆசீர் வாதங்கள் உண்டு” என்று தன்னிடம் கூறியதாக ஆசிமானந்தா தெரிவித்தார். ஆர்.எஸ்.எஸ்.இன் ஆசியுடன் நடத்தப்படும் கலவரங்களும் குண்டு வெடிப்புகளும் ஒரு நாளும் சட்டப்படி தண்டிக்க முடியாதவை என்பதைத்தான் ஆசிமானந்தவின் விடுதலை காட்டுகின்றது. எப்படி மோடி குஜராத் கலவர வழக்கில் இருந்து பல அசைக்க முடியாத ஆதாரங்கள் இருந்தும் மோசடியான முறையில் விடுவிக்கப்பட்டாரோ அதே போலத்தான் தற்போது ஆசிமானந்தாவும் விடுவிக்கப் பட்டுள்ளார்.

இந்திய நீதிமன்றங்களைப் பொறுத்தவரை ஆர்.எஸ்.எஸ். கும்பலைத் தண்டிப்பதற்கு ஒரு அளவுகோலையும், மற்ற இஸ்லாமியர்களைத் தண்டிப்பதற்கு ஒரு அளவுகோலையுமே எப்போதும் பயன்படுத்திவருகின்றன. அப்சல் குருவுக்கும், யாக்கூப் மேமனுக்கும் ஒரு சட்ட புத்தகத்தையும், மோடி, அமித்ஷா, அசீமானந்தா போன்றவர்களுக்கு மனுவின் சட்ட புத்தகத்தையும் வைத்துத் தீர்ப்பு வழங்குகின்றன. இந்திய சமூகத்தின் பொது மனசாட்சி எப்போதும் முஸ்லிம்களின் உயிரையும், தலித்துகளின் உயிரையும் மட்டும் தான் காவு கேட்கின்றது. அது மோடி, அமித்ஷா, அசீமானந்தா போன்றவர்களைக் கடவுளுக்கு நிகராக பார்க்க பழக்கப் படுத்தப்பட்டுவிட்டது.

இந்திய நீதிமன்றங்கள் அனைத்தும் இந்து நீதிமன்றங்களாக மாறிவிட்டன. அவை சாமானிய இந்திய குடிமகனிடம் இருந்து நீதியை பறித்து அதை ஒரு விற்பனைச் சரக்காக மாற்றிவிட்டன. இப்போது நடப்பது அப்பட்டமான நீதித்துறை பாசிசம். அது தனக்குள்ள வரம்பற்ற அதிகாரத்தால் நாட்டு மக்களின் மீது வெளிப்படையாகவே போர் தொடுத்துள்ளது. தலைமை நீதிபதி தீபக் மிஸ்ராவை பதவி நீக்கவேண்டும் என்று எதிர்க்கட்சிகள் போர்க்கொடி உயர்த்தின. ஆனால் தீபக் மிஸ்ரா போன்ற ஒரு நல்ல அடிமையை விட்டால் திரும்ப கிடைக்க மாட்டார் என்பதால் நம்பிக்கை இல்லா தீர்மானம் கொண்டுவர துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடு மறுத்துவிட்டார்.

இதற்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் காங்கிரஸ் தொடுத்த வழக்கில் தலைமை நீதிபதியே தன் மீதான வழக்கை விசாரிக்க வழக்கை 5 நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன அமர்வுக்கு மாற்றினார். அவர்கள் தலைமை நீதிபதிக்கு எதிரான மனுவை விசாரணைக்கு ஏற்க முடியாது என மறுத்துவிட்டதால் காங்கிரஸ் அந்த மனுவை திரும்ப பெற்றுக் கொண்டது.

இனி நாம் யாரிடம் செல்ல முடியும்? காவல்துறை, சி.பி.ஐ, என்.ஐ.ஏ, நீதிமன்றங்கள் என அனைத்தும் காவி பயங்கரவாதத்தின் கொடும் நிழலில் மீளா உறக்கத்தில் ஆழ்ந்து கிடக்கின்றன. சட்ட ரீதியான வழமையான போராட்டங்களால் இந்த உறக்கத்தை நிச்சயம் கலைக்க முடியாது. இருக்கும் கொஞ்ச நஞ்ச ஜனநாயகத்தையும் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணமிருக்கும் ஒவ்வொருவரும் வீதிக்கு வந்து அமைப்பாக திரண்டு இந்தப் பயங்கரவாத அரசுக்கு எதிராக போர்குணம் கொண்ட போராட்டத்தை நடத்தவில்லை என்றால் ஒட்டுமொத்த நாடும் பார்ப்பன பயங்கரவாதத்தின் பிடியில் வீழ்ந்து அழிந்து நாசமாய் போவதைத் தடுக்க முடியாமல் போய்விடும். ●



# தமிழகத்தில் வைகுண்ட சுவாமிகள் நடத்திய வைதீக எதிர்ப்பு இயக்கம்

● பேராசிரியர் அருணன்

*ஜாதி தீண்டாமை பார்ப்பனிய எதிர்ப்புடன் தமிழ்நாட்டில் பெரியாருக்கு முன்பே 1833இல் இயக்கம் தொடங்கியவர் வைகுண்டசாமி. அவரது இயக்கத்தின் வழி வந்தவர்களுக்கு தலைமை தாங்கும் பால பிரஜாதிபதி அடிகளார் 'அய்யா' வைகுண்டசாமி வழி வந்தவர்களை தனி மதமாக அறிவிக்க வேண்டும்; அவர்கள் 'இந்துக்கள்' அல்லர் என்று வலியுறுத்தி வருகிறார் கருநாடகத்தில் 'லிங்காயத்து'க்களை தனி மதமாக அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவர் முன் வைத்த கோரிக்கைக்காக ஆர்.எஸ்.எஸ்.சின் எதிர்ப்புகளை சந்தித்து வருகிறார். வைகுண்ட சாமிகளின் வரலாற்றை சுருக்கமாக அறிமுகப் படுத்துகிறது இக்கட்டுரை.*

கன்னியாகுமரிக்கு அருகேயுள்ள பூவண்டன் தோப்பு (சாஸ்தான் கோவில்விளை என்றும் சாமிதோப்பு என்றும் கூறுவர்) எனும் கிராமத்தில் ஓர் ஏழை நாடார் குடும்பத்தில் 1809ஆம் ஆண்டில் பிறந்தவர் வைகுண்ட சுவாமிகள். இவருக்கு பெற்றோர்கள் வைத்த பெயர் முடிசூடும் பெருமாள் என்பது. அந்தக் காலத்தில் மன்னர்கள் அல்லது உயர்சாதியினர் வைத்துக் கொள்ளும் பெயர்களை தாழ்ந்த சாதியினர் வைத்துக் கொள்ளக் கூடாது என்றிருந்தது. எனவே இப்படிப் பெயர் வைத்ததற்காக உயர்சாதியினர் அரசு அதிகாரிகளிடம் போய்ப் புகார் செய்தனர். அவர்களும் பெயரை மாற்றுமாறு உத்தரவு போட்டனர். வேறு வழியின்றி முத்துக்குட்டி என்று பெயர் வைத்தனர் பெற்றோர்.

எவர் மத்தியிலிருந்து பிறந்தாரோ அந்த அடித்தட்டு மக்கள் உய்ய வழிகாட்டுவது என்று முடிவெடுத்த முத்துக்குட்டி, 1833 முதல் பொது வாழ்வில் இறங்கினார். விஷ்ணு பக்தராய் இருந்த இவர் திருச்செந்தூர் கடலில் குளிக்கப் போய் அலையில் சிக்கி மூன்று நாட்கள் கழித்து மீண்டு

வந்ததாககவும், அப்பொழுது நாராயணன் லட்சுமி தரிசனம் பெற்றதாகவும், அவர்கள் தம்மை மகவாக - வைகுண்டராக - திருப்பி யனுப்பியதாகவும் மக்கள் மத்தியில் கூறத் துவங்கினார்.

1833இல் துவங்கி நான்கு ஆண்டுகள் தவமிருந்தார். தங்கள் மத்தியிலிருந்து ஒரு சாமியார் கிளம்பியதும் அப்பகுதி மக்கள் நோய் தீர்க்கச் சொல்லி அவரிடம் வரத் துவங்கினர். அச்சமயம் சில போதனைகளையும் செய்யத் துவங்கினார்.

அவர் வாழ்ந்த குமரிப் பகுதி அன்றைக்கு திருவிதாங்கூர் இராஜ்யத்திலிருந்தது. அதனை அப்பொழுது ஆண்டு வந்தவர் சுவாதித் திருநாள் மகாராஜா, சங்கீத விற்பன்னர்கள் இன்றளவும் போற்றிப் புகழுகிற இந்த மன்னரின் ஆட்சியில் நாடார் சமூகத்தவர் உள்ளிட்ட அடித்தட்டு மக்கள் பெரும் துன்பத்திற்கு ஆளாயினர். சமூகரீதியிலும், பொருளாதார ரீதியிலும் கொடூரமான அடக்குமுறை நிலவியது. சாதிய அமைப்பைக் கட்டிக்காத்து வந்த மன்னர் அநியாய வரி விதித்தும், மக்களைக் கசக்கிப் பிழிந்தும் வந்தார். தமது மக்கள் நலன் நாடி அந்த மன்னரையே துணிச்சலோடு எதிர்த்தார் சுவாமிகள். இதன் விளைவாக கைது செய்யப் பட்டவர் அடித்து, இழுத்துச் செல்லப்பட்டு 110 நாட்கள் சிறையில் அடைக்கப்பட்டார். அப்பொழுதும் உறுதி தளராதிருந்த அவர் 1838 மார்ச் திங்களில் விடுதலை செய்யப்பட்டார். அதன் பின்னும் தனது வாழ்நாள் முழுக்க மக்கள் சேவையில், சமூக சீர்திருத்தத்தில் விடாது ஈடுபட்டார். 1851இல் அவர் இந்த மண்ணை விட்டு மறைந்தார்.

இவரைப் பற்றிய தகவல்கள் கிடைக்கக் கூடிய மூல நூல்கள் இரண்டு. ஒன்று 'அகிலத் திரட்டு அம்மானை' என்பது. இது சுவாமிகளின் சீடர்களில் ஒருவரான சகாதேவன் என்பவரால் எழுதப்பட்டதாகக் கூறப்படுகிறது. இதில் சுவாமிகள் வாழ்க்கை வரலாறும், அவரது பணிகளும் விளக்கப்பட்டுள்ளன. திருவிதாங்கூர் மன்னர் ஆட்சியில் அடித்தட்டு மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள் விவரிக்கப்பட்டு, அவை ஒழிக்கப்பட்டாக வேண்டும் என்கிறது.

**பேய், பிசாசு, மாந்திரீகம் என்று ஏமாந்து போவதைத் தடுக்கவும் முயன்றார். உயர் சாதியினரின் ஆலயங்களுக்குள் நுழைய முடியாத நிலையில் பேய் பிசாசுகள் மீதான நம்பிக்கை கொழுந்துவிட்டு எரிந்தது.**

இரண்டாவது, 'அருள் நூல்' என்பது. இது அம்மானையில் கூறப்படும் சில செய்திகளை உறுதிப்படுத்துவதுடன், சுவாமிகள் வாழ்வில் நடைபெற்ற நிகழ்ச்சிகளைத் தொகுத்து தருகிறது. அதோடு சுவாமிகளைப் பின்பற்று வோர் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்க நெறிகளையும், சுவாமிகளின் அறிவுரைகளையும் கொண்டுள்ளது.

அன்றைக்குப் பெரிதும் பனையேறி கள் இறக்கும் தொழிலில் ஈடுபட்டிருந்த நாடார் சமூகத்தினர் சாணார் என்று அழைக்கப் பட்டனர். இவர்களையும் தீண்டத்தகாதவர் களாகத்தான் உயர்சாதியினர் பாவித்து வந்தனர். தீண்டாமையின் காரணமாய் சந்திப்பு தூரங்கள் கூட வரையறுக்கப்பட்டிருந்தன. ஒரு நாடார், நம்பூதிரி பார்ப்பனரிடமிருந்து 36 அடி தூரத்திலும், நாயரிடமிருந்து 12 அடி தூரத்திலும் நின்றுதான் சந்திக்க வேண்டும். பொதுச் சாலைகளிலே செல்ல முடியாது. பொதுக் கிணறுகளிலே நீர் எடுக்க முடியாது. உயர் சாதியினர் வாழும் தெருக்களில்கூடப் போக முடியாது. பிறகு அவர்களது கோவில் களைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. கொடுமை என்னவென்றால் இந்தக் கோவில் களுக்கு அருகேயே பள்ளிகளும், அரசு அலுவலகங்களும் இருந்ததால் அங்கேயும் போக முடியாது. அதிகாரிகள் வெளியே வரும்போது பார்த்தால்தான் உண்டு. அது மட்டுமல்ல குடை பிடிக்கவோ, செருப்பு போடவோ முடியாது. ஓடு வேய்ந்த வீடு கட்டக் கூடாது. பொன் நகை அணியக் கூடாது. பெண்கள் இடுப்பில் தண்ணீர்

குடம் எடுத்துச் செல்ல முடியாது. தோள் சேலை (மாராப்பு) அணிய முடியாது.

நாடார்களில் ஒரு சிறு பகுதியினர் நிலவுடைமையாளர்களாக இருந்தனர். பெரும் பகுதியினராயிருந்த கள் இறக்கும் தொழி லாளர்களை இவர்கள் மதிப்பதும் கிடையாது; பாதுகாப்பதும் கிடையாது. உயர்சாதியினரோ இவர்கள் அனைவரையுமே தீண்டத்தகாதவர் களாகப் பாவித்தனர். திருவிதாங்கூர் அரசும் இதைத்தான் அமுல்படுத்தி வந்தது.

இந்த நிலையில் களத்தில் இறங்கிய சுவாமிகள் இந்த மக்கள் மத்தியில் ஒற்றுமையை ஏற்படுத்திட சமத்துவ சங்கம் என்ற அமைப்பினைத் துவக்கினார் இதில் ஆயிரக் கணக்கான மக்கள் உறுப்பினராயினர். ஆடவர் மட்டுமல்லாது மாதரும் பங்கேற்றனர். தன்னைக் கண்ணபிரானாகப் பாவித்துக் கொண்ட சுவாமிகள் பஞ்ச பாண்டவர்கள் என்று ஐந்து பேரைத் தனது பிரதமர் சீடர்களாக ஆக்கினார். ஊர் ஊராகச் சென்று தனது சமத்துவக் கொள் கையைப் பரப்புமாறு கேட்டுக் கொண்டார். தானும் அவ்வாறே பயணம் மேற் கொண்டார்.

ஒற்றுமை உணர்வினை வளர்த்திடவும், தன்னுடைய போதனைகளைப் பரப்பிடவும் ‘நிழல் தாங்கல்’ என்பதைப் பல ஊர்களில் அமைத்தார். இது வழிபாட்டுத் தலமாகவும், கல்வி நிலையமாகவும், சுவாமிகளின் போதனைகளைப் பரப்பும் பிரச்சார மையமாகவும் விளங்கியது. சமத்துவச் சங்கத்தின் கிளைகள் போலச் செயல்பட்ட இவற்றில் வழிபாடு நடந்தாலும் விக்ரக ஆராதனை கிடையாது. விக்ரகம் என்றால் பூசாரி வந்து விடுவார். பூசாரி என்றால் சாதியப் பாகுபாடு புகுந்துவிடும் என்று அதனைத் தவிர்த்திருக் கிறார். அதே நேரத்தில் அதற்கு சித்தாந்த விளக்கமும் தந்தார்.

*“மறையினிலடங்கா இறையினிலடங்கா*
*வணங்கிலுமடங்கா*
*பலவகையிலுமடங்கா துறையினிலடங்கா*
*தொல்புவியிலடங்கா*
*சுருதியிலடங்கா சகயினிலடங்கா உறவினிலடங்கா*
*மொழியிலுமடங்கா யுகத்திலுமடங்கா ஒரு*
*விதத்திலுமடங்கா”*

- என்று ‘இறைவனை’ வருணித்த அவர், அவனை எந்த விக்ரகத்திற்குள்ளும் அடைக்க முடியாது என்றார். சுவாமிகளின் இந்த நிலைப்பாடு அவரைப் பின்பற்றுவோரை சித்தாந்த ரீதியிலும் உயர்த்துவதாக அமைந்தது. உருவம் மூலம் தரிசிப்பதைவிட உள்ளொளி மூலம் தரிசிப்பது உயர்நிலை என்றே இந்துமதம் கூறிக் கொள் கிறது. இப்படிச் சொல்லிக் கொண்டாலும் சனாதனிகள் இதனைக் கடைப்பிடிப்பதில்லை. கடைப்பிடித்தால் புரோகிதத் தொழில் பறி போய்விடும். உருவமற்ற வழிபாட்டு முறையை நடைமுறைப்படுத்தினார் சுவாமிகள்.

விக்ரக ஆராதனையை நிராகரித்தது ஆடு, கோழி பலியிடுதல் என்பதை நிறுத்த அவருக்கு உதவியது.

“ஆடுகிடாய் கோழி பன்றி ஆயனுக்கு
வேண்டாங் காண்
மேளதாளம் குரவை தொனி
வேண்டாங் காண் ஈசனுக்கு”

- என்று கூறியதன் மூலம் ஆரவாரமான வழி பாட்டை அவர் விரும்பியதில்லை என்பது தெளிவாகிறது.

அதிகம் படித்திராத - அனுபவ ஞானத்திலேயே - தமது மக்களுக்கு எது நல்லது என்பதை உணர்ந்திருந்த சுவாமிகள், பேய், பிசாசு, மாந்திரீகம் என்று ஏமாந்து போவதைத் தடுக்கவும் முயன்றார். உயர்சாதியினரின் ஆலயங்களுக்குள் நுழைய முடியாத நிலையில் பேய் பிசாசுகள் மீதான நம்பிக்கை கொழுந்து விட்டு எரிந்தது.

*“ பொய்யில்லை பிசாசுயில்லை*
*பில்லியின் வினைகளில்லை*
*நொய்யில்லை நோவுமில்லை*
*நொன்பலத் துன்பமுமில்லை*
*தொய்யில்லை இறைகளில்லை*
*கறுபடுமா ஞாலமுமில்லை*
*மையில்லை உலகத்தோரே*
*வாழுமோர் நினைவால்”*

- என்றார் சுவாமிகள். ஆனாலும் மக்கள் நம்ப வேண்டுமே? விஷ்ணுவின் மகனாகிய தான் மாந்திரீகர்களிடமிருந்து மந்திரங்களைப் பறித்துவிட்டதாகவும் இனிமேல் அவர்களிடம் போக வேண்டாமென்றும் மக்களை தைரியப் படுத்தினார்.

**அனைத்து சாதியினரும் ஒரே கிணற்றில் நீரெடுத்து சமைத்து சமபந்தி போஜனம் செய்ய வைத்தார் சுவாமிகள்.**

ஆலயங்களுக்குள் நாடார்கள் உள்ளிட்ட அடித்தட்டு மக்கள் நுழைய முடியாத நிலையிலும் அவர்களது காணிக்கைகள் மட்டும் புரோகிதர்களுக்கு தேவைப்பட்டது. எனவே, தொலைவில் நின்று காணிக்கைகளை இவர்கள் எறிய, புரோகிதர்கள் பதிலுக்குத் தூக்கியெறியும் இலைக்கட்டுப் பிரசாதத்தைப் பெற்று மகிழ்வர். ஏற்கெனவே வறுமையில் வாடிய இந்த மக்ககள் பக்தி மேலீட்டால் சுயமரியாதையையும் இழந்து கைப்பொருளையும் இழந்தனர். இதனால் சுவாமிகள் -

“காணிக்கையிடாதுங்கோ காவடி
தூக்காதுங்கோ
வீணுக்குத் தேடுமுதல் விருதாவில்
போடாதுங்கோ”

- என்றார். உயர்சாதியினர் கோவிலுக்கு காணிக்கையிடுகிற வேலையை ‘விருதா’ வேலை என்று பாமரத் தமிழில் போதித்திருக்கிறார் சுவாமிகள். அதே நேரத்தில் ஏழைகளுக்கு தர்மம் செய்வதை வலியுறுத்தினார். “பயந்து தர்மமிட்டு அந்தப் பரம்பொருளைத் தேடிடுங்கோ” என்றார்.

சாதிய ஒடுக்குமுறை எதிர்ப்பு என்பது இப்படிச் சமய சீர்திருத்தத்தோடே ஒட்டிப் பிறந்தது. அதே நேரத்தில், சமூகத்தில் தலை நிமிர்ந்து நடக்க அவர்களுக்கு சுயமரியாதை உணர்வை ஊட்ட வேண்டியிருந்தது. சமூக அவமரியாதைகளில் சிலவற்றையாகிலும் ஒழிக்க வேண்டியிருந்தது. அச்சத்தைப் போக்கி எதிர்த்து நிற்கும் தைரியத்தைக் கொடுக்க வேண்டியிருந்தது.

ஆதிநாளில் ஒரு நாடார் சமூக இளைஞனுக்கு அவனது 16ஆவது வயதில் தலையில் தலைப்பாகைக் கட்டி கையில் பிச்சுவா கத்தி கொடுப்பார்கள் - அவர் பெரிய மனிதன் ஆகிவிட்டதன் அடையாளமாக, பல இடைத் தட்டு சாதிகளில் இந்த வழக்கம் இன்றைக்கும் உண்டு. குடும்பத் தலைவர் இறந்ததும் அவரது மகன்களுக்கு இப்படி தலைப்பாகை கட்டுவார்கள். இதற்கு “உறுமால் கட்டு” என்று பெயர். இந்தப் பழக்கம் இடைக்காலத்தில் நாடார் சமூகத்தைப் பொறுத்தவரை உயர்சாதியினரால் தடுக்கப்பட்டிருக்கிறது. சுமை தூக்கக் கூட தலைப்பாகை அணிய அனுமதிக்கவில்லை. ‘சுருமாடு’ என்று பெயரில் வைக்கோலை மட்டும் தலையில் வைக்க அனுமதிக்கப் பட்டனர். இந்த அநியாயக் கட்டுப்பாட்டை மீறச் சொன்னார் சுவாமிகள். தன்னைக் காண வந்த மக்களிடம் தலைப்பாகை அணிந்து வருமாறு வற்புறுத்தினார். வழிபாட்டின்போது அவரது அன்பர்கள் இப்பொழுதும் தலைப் பாகை அணிவதைக் காணலாம்.

இதே பாணியில் வீடு கட்டுவதிலும் மாறுதலை புகுத்தினார் சுவாமிகள். மாடி வீடு, ஓடு போட்ட வீடு ஆகியவற்றை அன்றைக்கு தாழ்ந்த சாதி மக்கள் கட்டிவிட முடியாது. அவர்களது வீடுகள் ஒழுங்கற்று ஆங்காங்கே சிதறிக் கிடந்தன. இதற்குப் பதிலாக பல அறைகளுடைய ஒரே திசையில் முன் கதவு வைத்த வீடுகளை அடுத்தடுத்து கட்டுமாறு கூறினார் சுவாமிகள். இது மக்களிடையே நெருக்கத்தையும், ஒருமைப்பாட்டையும் ஏற்படுத்தும் என்று அவர் எதிர்பார்த்தார். மாதிரியாக முட்டப் பகுதியில் சுவாமிகள் ஒரு ‘சமதர்மக் காலனி’ அமைத்தார்.

இத்தோடு தனது சொந்த ஊரில் கிணறு ஒன்றை ஏற்படுத்தி அனைத்து மக்களும் அதனைப் பயன்படுத்தலாம் என்றார். அதனை ‘முத்திரிக் கிணறு’ (புனிதக் கிணறு) என்று சுவாமிகள் அழைத்தார். சுவாமிகளைக் காண வந்த மக்ககள் அக்கிணற்று நீரைக் கொண்டு குளித்து, உண்டி சமைத்து உண்டு மகிழ்ந்தனர். அனைத்து சாதியினரும் இப்படி ஒரே கிணற்றில் நீரெடுத்து சமைத்து சமபந்தி போஜனம் செய்ய வைத்தார் சுவாமிகள்.

தனது சீடர்களைப் பல்வேறு ஊர்களுக்கு அனுப்பி அங்குள்ள தாழ்த்தப்பட்ட சாதியினரின் வீடுகளில் உணவருந்துமாறு கட்டளையிட்டார். சுவாமிகள் ஒரு முறை இப்படியாகத் தனது சீடர்கள் இருவரை பிச்சம்மாள் என்கிற சலவைத் தொழிலாளி வீட்டில் சாப்பிட்டு வருமாறு சொல்ல, அவர்கள்

அங்கு சென்றும் சாப்பிட மனமில்லாமல் திரும்பி வந்துவிட்டனர். இதை அறிந்த சுவாமிகள் இருவரையும் கடுமையாகக் கண்டித்து மீண்டும் அந்த இல்லம் சென்று உணவருந்தி வருமாறு செய்தார். இப்படியொரு வாய்மொழிச் செய்தி உள்ளது. இதுவெல்லாம் அந்தக் காலத்தில் சாதாரணமான விஷயமல்ல.

தாழ்த்தப்பட்ட மக்கள் சுத்தமின்றி இருக்கின்றனர், புலால் உணவு உண்கின்றனர், அதனால் தான் தீண்டாமை கடைப்பிடிக்கப்படு கிறது என்று உயர்சாதியினர் சொல்லிக் கொண்டனர். இதுவொரு சாக்குதான் எனினும், இந்த வாதத்தையும் உடைக்க முயன்றார் சுவாமிகள்.

*"மூன்று நேரந் துவைத்து உச்சியொரு*
*நேரமதாய்*
*வேணும் பச்சரிசி வெற்றிச் சிறுமணியும்*
*வேகவைத்து நன்றாய் விரைவாய் மணலிலிட்டு*
*தாகமில்லாமல் தவசிருக்க வேணுமென்று"*

- மக்களுக்கு போதித்தார். மீன் உணவை விரும்பிச் சாப்பிடும் குமரி பகுதி மக்களுக்கு இப்படி சைவ உணவைப் பரிந்துரைத்தார். இன்றைக்கும் இவரைப் பின்பற்றுவோர் புலால் உணவை தவிர்த்தவர்களாக உள்ளனர். அல்லது குறைந்தபட்ச ஞாயிறு, செவ்வாய், வெள்ளி ஆகிய தினங்களில் அதனை உண்ணாதவர்களாக உள்ளனர். உயர்சாதியினருடன் ஒவ்வொரு விஷயத்திலும் தங்களால் போட்டி போட முடியுமென்று காட்டுகிற வேகத்திலேதான் இப்படி 'தவசி' (தவம்) இருக்கச் சொல்லி யிருக்கிறார்.

வெறும் போதனை மட்டும் பயன் தராது என்று நினைத்து ஒரு முகாம் நடத்தி அதற்கு மக்களை அழைத்து பயிற்சி கொடுத்தார் சுவாமிகள். இதற்கு 'துவையல் பந்தி' என்று பெயர். இங்கே மூன்று வேளை நன்றாகக் குளித்து, துவைத்து, நண்பகல் ஒரு வேளை பச்சரிசி, பாசிப் பயிறு வேகவைத்து கஞ்சியாக்கி உண்டு ஒரு வகையான தவ வாழ்க்கை மேற் கொள்ளச் செய்தார். கிட்டத்தட்ட 700 குடும்பங்கள் இதில் கலந்து கொண்டதாக ஒரு கணக்கு உள்ளது. இந்த முகாமில் சுவாமிகள் கற்பித்த போதனைகளை அதில் பங்கேற்றோர் ஊர்தோறும் சென்று மக்களிடையே பரப்பி வந்தனர்.

சங்கம் வைத்தவர், முகாம் நடத்தியவர், தனது இயக்கத்திற்காகக் கொடி ஒன்றையும் கண்டார். அரசியல் கட்சி என்றால் என்னவென்றே தெரியாத அந்தக் காலத்தில் அதன் கூறுகளையெல்லாம் கொண்டிருந்தது சுவாமிகளின் இயக்கம். காவி நிறத்தில் வெள்ளை தீபச் சுடரைத் தாங்கிய அந்தக் கொடியை 'அன்புக் கொடி' என்றழைத்தார் சுவாமிகள். தன்னை பின்பற்றுவோரை 'அன்புக் கொடி மக்கள்' என அழைத்தார். இன்றும் சுவாமி களைப் பின்பற்றுவோர் நிழல்தாங்கல்களில் இக்கொடியை ஏற்றி வணக்கம் செலுத்தி வருகின்றனர். இவரின் பிறந்த தினத்தன்று நடக்கும் ஊர்வலத்தின்போது இக்கொடியை ஏந்தி வருகின்றனர் அவரின் அன்பர்கள்.

சமூக சீர்திருத்தவாதியுமான இவர் ஒரே நேரத்தில் மன்னர், பார்ப்பனியம் மற்றும் அந்நிய ஆட்சியாளர்கள் - மதபோதகர்களின் எதிர்ப்பை சம்பாதித்துக் கொண்டது வரலாற்றிலேயே ஒரு அபூர்வமான விஷயம். அதீத வரி போட்டு நாடார் வீட்டுக் குடும்பங்களை கொடுமைப் படுத்துவது கண்டு கொதித்தெழுந்த சுவாமிகள்,

*"குஞ்சரமும் உன்னுடைய கொத்தளமும்*
*தானிடத்து*
*வஞ்சகமாய் உந்தனுக்கு வலியகர்மம் சுற்றுமடா*
*கர்ம வியாதிகளாய் கண்ட மாலையுடனே*
*வறுவை வந்து சிக்குமடா மானீசா நீ கேளு*
*தெய்வச் சாணாத்தி தினமுனை*
*நிந்தித்துண்டால்,*
*பொய் வகையால் கர்ம போகத்தால் நீ*
*மடிவாய்"*

- என்று அரசருக்கு சாபமிட்டார். இதற்கு உச்சமாய் "அவன் பட்டத்தைப் பறித்திடுவேன் கொட்டிக் குலைத்திடுவேன்" என்றுகூட சூளுரைத்தார்.

மறுபுறம் சமூகத் துறையில் ஆதிக்க சக்தியாக இருந்த பார்ப்பனியத்தையும் வெளிப்படையாக எதிர்க்கத் துணிந்தார் சுவாமிகள். "பிராமணர்களைப் பயம் காட்ட நாம் வருவோம்" என்று அடித்தட்டு சாதி மக்களுக்கு தைரியம் ஊட்டினார். அதுமட்டுமா, "பிராமண வேசம் போட பக்தன்மாரே நீங்கள் உண்டு" என்றும் கூறினார். புரோகிதம் என்பதை 'வேசம்' என்று அவர் கூறியது அந்தக் காலத்தில் வேறு

எவரும் சொல்லத் துணியாதது என்றால் அந்த 'வேச'த்தை தாழ்த்தப்பட்ட சாதியினரும் போடலாம் என்பது சமூக நீதியின் புதிய பரிமாணம், 'பிராமணியம்' எனும் ஏகபோகத் தன்மையைக் கருவறுக்கிற வேலை.

இப்படித் திருவிதாங்கூர் ராஜாவையும், பார்ப்பனியத்தையும் எதிர்த்து நின்றவர் தனது செயல்பாட்டின் காரணமாக ஒரு தனி சமயப் பிரிவினை உருவாக்கி அதன் மூலம் உயர்சாதிய அவமரியாதைகளிலிருந்து விடுதலைப் பெற முடியும் என்று காட்டிவிட்டதால் குமரிப் பகுதியில் நாடார் சமூகத்தவரிடையே விரைந்து பரவி வந்த கிறிஸ்தவ மதம் தடைப்பட்டு நின்றது. இதனால் கிறிஸ்தவ போதகர்கள் மற்றும் பிரிட்டிஷாரின் வெறுப்புக்கு ஆளானார் சுவாமிகள். சுவாதித் திருநாள் மன்னரால் அவர் கைது செய்யப்பட்டதற்கும்கூட சென்னையிலிருந்த கிழக்கிந்திய கம்பெனி ஆட்சியாளர்கள் மன்னரைத் தூண்டிவிட்டதுதான் காரணம் என்று கூட ஒரு செய்தி உள்ளது. சுவாமிகள் உயிரோடு இருந்த காலத்தில் மட்டுமல்ல அதற்குப் பிறகும்கூட அவர் கண்ட இயக்கம் தங்களது மத மாற்றத்திற்கு இடையூறாக இருந்ததாகக் கருதினர். 1874இல் அவர்கள் தயாரித்த ஆண்டு அறிக்கையில் 'முத்துக்குட்டியிசத்தை எதிர்த்து விடாது போராட வேண்டியுள்ளது' என்று குறிப்பிட்டுள்ளனர். ஆக, ஒரே நேரத்தில் இரண்டு வேலைகளைச் செய்திருக்கிறது சுவாமிகள் இயக்கம். ஒரு புறம் இது இந்து மதத்திற்குள்ளிருந்த உயர்சாதி வெறியை எதிர்த்துப் போராடியது; மறுபுறம் கிறிஸ்தவ மதமாற்றத்தைத் தடுத்து நிறுத்தியது. இந்த இரண்டாவது பணி அவர் திட்டமிட்டுச் செய்ததாகத் தெரியவில்லை. இந்து மதத்தின் உயர்சாதி வெறியை எதிர்த்துப் போராடிய போது அதன் உபவிளைவாக இது நிகழ்ந்திருக்கிறது. சமயப் பூசல்களை அடியோடு வெறுத்தார் சுவாமிகள். "நீ பெரிது நான் பெரிது நிச்சயங்கள் பார்ப்போமென்ற வான்பெருதறியாமல் மாள்வார் வீண் வேத முள்ளோர்" என்று கூறியுள்ளார் சுவாமிகள்.

அடித்தட்டு வகுப்பு பெண்களின் உரிமைகளுக்காகவும் குரல் கொடுத்தார் சுவாமிகள். தாழ்த்தப்பட்ட வகுப்புப் பெண்களைத் தைரியமாக தோள்சேலை அணியுமாறு அவர் கேட்டுக் கொண்டார். சுவாமிகளின் காலத்தில் கிறிஸ்தவ போதகர்களின் வழிகாட்டுதலில் கிறிஸ்தவ நாடார்களினால் துவக்கப்பட்ட இந்தத் தோள்சேலை அணியும் போராட்டம் சுவாமிகளின் மறைவுக்குப் பிறகு, கிறிஸ்தவ நாடார்கள் - இந்து நாடார்கள் இருவரும் இணைந்து நின்று போராடியதால் வெற்றி கிட்டியது. 1859இல் நாடார் பெண்களுக்கு தோள் சேலை அணிகிற உரிமையை திருவிதாங்கூர் அரசு வழங்கியது. தொடர்ந்து போராட்டங்கள் நடந்த காரணத்தால் 1865இல் இதர அடித்தட்டு சாதிப் பெண்களுக்கும் அந்த உரிமை தரப்பட்டது.

தனது மக்கள் சேவையின் காரணமாய் 'அய்யா' என்று அன்போடு அழைக்கப்பட்ட சுவாமிகளின் சமாதி சாமித் தோப்பில் உள்ளது. அங்கே ஏற்றி வைக்கப்பட்டுள்ள குத்துவிளக்கு ஒளியை மக்கள் கும்பிடுகிறார்கள். இவர் வழி வந்தவர்கள் இறந்தோரை எரிப்பதில்லை; புதைக்கவே செய்கிறார்கள். அதோடு கருமாதி, திதி போன்ற சடங்குகளில் விருப்பமில்லாதவர்களாகவே உள்ளனர்.

தொகுத்துப் பார்க்கும்போது - நவீன தமிழகத்தில் தோன்றிய முதல் சமூக சீர்திருத்தவாதியான வைகுண்ட சுவாமிகள் ஒரு புதிய சமய நெறியை உருவாக்கி அதன் மூலம் சமூக சீர்திருத்தம் செய்தவர். அந்தப் புதிய நெறியில் கிறிஸ்தவத்தின் தாக்கம் தெரிகிறது. (ஆரம்பத்தில் சிறிது காலம் நாகர்கோவில் மிஷனில் கிறிஸ்தவ போதனையின் கீழ் இருந்தவர் என்றுகூட ஒரு செய்தி உள்ளது) தென் தமிழகத்தில் நாடார் சமூகத்தினரிடையே இந்த இயக்கத்திற்கு நல்ல வரவேற்பு இருந்திருக்கிறது. உயர்சாதி வெறியை எதிர்த்ததோடு உள்ளூர் மன்னரையும் எதிர்த்து நின்றவர். அடித்தட்டு குடும்பப் பெண்களின் உரிமைக்காகவும் குரல் கொடுத்தார். ஆனால், இன்றைக்கு அவரது இயக்கம் சமூக சீர்திருத்தம் என்கிற அதன் சாரத்தை இழந்து இந்து சமயத்தின் ஓர் உபபிரிவு என்கிற தோற்றத்தை மட்டும் தக்க வைத்துக் கொண்டுள்ளது. சுவாமிகளின் சீடர்கள் அவரை கடவுள் அவதாரமாகப் பார்க்கிறார்களே தவிர சமூக சீர்திருத்தவாதியாக நோக்குவதில்லை.

**('தமிழகத்தில் சமூக சீர்திருத்தம் இருநூற்றாண்டு வரலாறு' நூலிலிருந்து)**

# ஜாதி – மதப் பண்பாட்டை எதிர்க்காமல் ஆணாதிக்க எதிர்ப்பு மட்டும் சமத்துவத்தை உறுதி செய்யாது



- ஜெயராணி

*கல்வி, பொருளாதார, அரசியல் தளங்களில் பெண்கள் தமக்கான இடத்தைச் சம அளவில் பெறுவதென்பது அவர்களுக்குச் சுதந்திரத்தை உறுதி செய்து தரும். அவ்வாறே தந்து கொண்டிருக்கிறது. ஆனால் சமத்துவத்தை? இம்மூன்று நிலைகளிலும் அடைந்த விழிப் புணர்வும் முன்னேற்றமும் பெண் களுக்குச் சமத்துவத்தை உறுதி செய்து தர முடியவில்லை. அது சமூகப் புரட்சியால் மட்டுமே சாத்தியப்படும்.*

நவீன இந்தியாவின் பெண்கள், முன்னேற்றத்தின் படிகளில் வேகமாக ஏறிக் கொண்டிருக்கும் காலமிது. கடந்த தலைமுறைகளைவிட பெண்கள் அதிக அளவில் கற்றறிந்தவர்களாக இருக்கின்றனர். தம் தாய், தாயின் தாயைவிடப் பரவலாகப் பொருளாதார சுதந்திரம் கிடைக்கப் பெற்றிருக்கிறது. அன்றிருந்ததைப்போல வீடுகளுக்குள் முடங்கி இல்லாமல் சுதந்திரமாக வலம்வர முடிகிறது. தம் தேவைகளை, பிரச்னைகளை, கருத்துக்களை உரக்கச் சொல்லும் உரிமைகள் சாத்தியப்பட் டிருக்கின்றன. ஆனால் பண்பாட்டு ரீதியாகப் பெண் மீது கட்டமைக்கப்பட்ட பிம்பம் மாறியிருக்கிறதா என்றால் இல்லவே இல்லை என்பதே கசப்பான பதில்.

இத்தனை முன்னேறிய காலத்திலும் பெண் என்பவர், அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்ற நான்கு குணங்களோடு இருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. ஆணை விஞ்சிவிடாத அடக்க ஒடுக்கத்தோடு இயங்க வலியுறுத்தப்படுகிறது. வன்முறைகளாலும், பாலியல் சீண்டல் களாலும் கட்டுப்படுத்தி வைக்க வேண்டும் எனக் கற்பிக்கப்படுகிறது.

சுதந்திரமான பெண்கள் ஆபத்தான வர்கள். அவர்கள் ஆணை அவனது அரியணை யிலிருந்து வலுக்கட்டாயமாக இறங்குவதைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளதாக அச்சுறுத்தல் செய்யப்படுகிறது. அதன் வழியாகவே இந்த முன்னேறிய காலம், பழங்காலப் பிற்போக்குத் தனங்களை மீட்டுருவாக்கமும் மறு உற்பத்தியும் செய்து பெண்களை மேலும் சிறைபடுத்த விழைகிறது.

இந்த ஆபத்தை முன்னேறிய / நவீன காலத்தின் பெண்கள், எவ்வாறு எதிர்கொள்ளப்

போகின்றனர்? இக்கேள்விக்கான பதிலைக் கண்டறியுமுன்னர், முன்னேற்றம் மற்றும் நவீனம் என்ற பதங்களுக்கான சரியான அர்த்தத்தை நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

பொதுவான முன்னேற்றம் என்பது கல்வி மற்றும் பொருளாதாரம் சார்ந்ததாகவே அளவிடப்படுகிறது. அவ்வகையில் பார்த்தால், கல்வி கற்ற பெண்களின் எண்ணிக்கையும், பொருளீட்டும் பெண்களின் எண்ணிக்கையும் அவர்கள் ஈட்டும் பொருளின் அளவும் கணிசமான வளர்ச்சியைக் கண்டிருக்கிறது என்பது உண்மையே.

ஆனால், கல்வி மற்றும் பொருளாதார வளர்ச்சி என்பது முன்னேற்றத்தின் சிறு கூறுதானே தவிர, அதுவே முன்னேற்றம் ஆகாது. ஏனென்றால் இந்த வளர்ச்சிகளால் பெண் களுக்குச் சமத்துவத்தை உறுதிப்படுத்த வியலாது. சுயமரியாதையை வழங்கவியலாது. பிற்போக்குத் தனங்களில் இருந்து விடுவிக்க வியலாது. இந்த வளர்ச்சி, அடக்குமுறை மற்றும் வன்முறைகளில் இருந்து பெண்களை ஒருபோதும் மீட்பதில்லை.

கல்வியும் பொருளாதாரமும் மறுக்கப் பட்டு வீடுகளுக்குள் முடங்க நிர்ப்பந்திக்கப் பட்ட பெண்களைப் போலவே கல்வியும் பொருளாதார சுயசார்பும் கைவரப்பெற்ற இந்தியப் பெண்கள், தினம் தினம் பாலியல் வன்முறைகளுக்கும் பிற கொடூரமான குற்றங்களுக்கும் பலியாகும் சமூக எதார்த்தமே இதற்கு சான்று.

தொழில்நுட்பத்திலும் கல்வியிலும் எவ்வளவு முன்னேற்றத்தைக் கண்டாலும் இந்நாடு சக பாலினத்தின் மீதான தனது வன்மத்தை குறைத்துக் கொள்ளவே இல்லை என்பதிலிருந்து தான் முன்னேற்றம் என்பதன் பொருளை நாம் விளங்க முற்பட வேண்டும். பாருங்கள், எங்கேயும் பெண்கள் எல்லாத் துறைகளிலும் பெண்கள். அவர்களுக்கு தான் வாய்ப்புகள் கிடைக்கின்றன. அவர்களுக்குத் தான் தொழில்முறை வளர்ச்சி சிறப்பாக இருக்கிறது என வாதிடுவோர் அதிகம். இதில் உண்மை இருந்தாலும், இதன் மற்றொரு பக்கத்தையும் நாம் கணக்கில் கொள்ள வேண்டும். தேசியக் குற்றப் பதிவு ஆணையத்தின் 2015ஆம் ஆண்டைய அறிக்கை கடந்த பத்தாண்டுகளில் இந்தியாவில் பெண்கள் மீதான வன்முறை இருமடங்கிற்கும் மேல் அதிகரித்திருப்பதைச் சுட்டிக் காட்டுகிறது.

**கல்வி மற்றும் பொருளாதார வளர்ச்சி என்பது முன்னேற்றத்தின் சிறு கூறுதானே தவிர, அதுவே முன்னேற்றம் ஆகாது. ஏனென்றால் இந்த வளர்ச்சிகளால் பெண்களுக்குச் சமத்துவத்தை உறுதிப்படுத்த வியலாது. சுயமரியாதையை வழங்கவியலாது.**

அதாவது, முந்தைய பத்தாண்டை விட, 2014-2015 வரையிலான பத்தாண்டுகளில் சுமார் 20 இலட்சம் குற்றங்கள் அதிகமாக நிகழ்ந்திருக்கின்றன. அதில் சுமார் 10 இலட்சம் குற்றங்கள் கணவன் மற்றும் குடும்ப உறுப்பினர்களால் நிகழ்த்தப்படுவதாக இப் புள்ளி விவரம் குறிப்பிடுகிறது. ஆக, கல்வி அறிவோ, பொருளாதாரச் சுய சார்போ பெண் களை வீடுகள் மற்றும் வீதிகளில் நடந்தேறும் அடக்குமுறைகளிலிருந்து விடுவிக்க வில்லை.

தகவல் தொழில்நுட்பத்துறை திறந்து விட்ட வேலை வாய்ப்புகளின்படிப் பார்த்தால் இதற்கு முந்தைய தலைமுறைப் பெண்களை விடவும் இந்த தலைமுறைப் பெண்களுக்கு, கடந்த பத்தாண்டுகள் பொருளாதார ரீதியாக ஒரு பொற்காலம். பெண் கல்வி குறித்த விழிப்புணர்வு அதிகரித்த காலகட்டமாகவே அதைக் கருத வேண்டும். தகுதியான மாப்பிள்ளைக்காக படிக்க வைக்கப்பட்ட பெண்கள், கை நிறைய சம்பாதிப்பதற்காகக் கல்லூரிகளுக்கு அனுப்பப்படும் சமூக மாற்றம் நிகழ்ந்த தலைமுறை இது. இத்தகைய மாற்றம் நடுத்தர வர்க்கப் பெண்களிடையே பொருளாதார சுயசார்பை உருவாக்கியது. ஆனால் ஏட்டுக் கல்வியோ பொருளாதாரமோ எவ்வகையான பாகுபாட்டையும் அழித்து விடாது என்பதைத்தான் இங்கே பெருகிக் கொண்டே இருக்கும் குற்றங்களும் வன்முறைகளும் நிருபிக்கின்றன.

முன்பு வீட்டிலிருந்து குடும்பத்தை கவனித்துக் கொண்ட பெண்கள், இன்று பொருளீட்ட வேலைக்குச் செல்லுமளவிற்குக் காலமாற்றம் நிகழ்ந்திருக்கிறது. ஆனால், அவர்களின் குடும்பச் சுமையைப் பங்கிட்டுக் கொள்ள ஆண்கள் தயாராக இல்லை.

வரதட்சணை வாங்காமல் எத்தனை பேர் திருமணம் செய்து கொள்கின்றனர்? கணவன் தான் என்றாலும் முடியாத பொழுதுகளில் உடலுறவை மறுக்கும் உரிமை எத்தனை பெண்களுக்குக் கிடைத்திருக்கிறது? கணவனால் பலாத்காரம் என்பது இந்தியாவில் இன்றளவிலும் தொடருகிறது. பாலினத்தைக் கண்டறிவது குற்றம் என்றாலும் எப்படியாயினும் தெரிந்து கொள்ளத் துடிக்கின்றனர். காதலை நிராகரித்தால் ஒருதலைக் காதல் கொலை; காதலை ஏற்றுக் கொண்டால் கவுரவக் கொலை, பாலியல் சீண்டல்கள், குடும்ப வன்முறைகள் என, எது தான் மாறியிருக்கிறது? இந்த அத்தனை கொடுமைகளின் சமீபத்திய புள்ளி விவரங்களை சோதித்துப் பாருங்கள்! எதிலுமே பின்னடைவு இருக்காது.

ஐ.ஏ.எஸ். அதிகாரி, மருத்துவர், விஞ்ஞானி, மாநிலத்தை ஆளும் முதலமைச்சர் என எத்தகைய உயரத்திற்குப் பறந்தாலும் பெண்ணை ஒரு பாலியல் பண்டமாகவும் அடிபணிய வேண்டியவளாகவும் இச்சமூகம் நடத்துகிறது. இதற்கான காரணமென்ன என்பதை ஆராய்ந்து தீர்வை எட்ட வேண்டிய கால நெருக்கடிக்கு நாம் தள்ளப்பட்டிருக்கிறோம். சுதந்திரத்தைப் பெற்று விட்டதாக நம்பும் பெண்கள் தாம் ஏன் மீண்டும் மீண்டும் தாக்கப்படுகிறோம், சீண்டப்படுகிறோம், சுரண்டப்படுகிறோம் என்பதற்கான விடை தெரியாமல் விழிக்கின்றனர். பதிலாக ஆணாதிக்கம் மாறவில்லை. ஆண்கள் திருந்தவில்லை என ஆண்களுக்கு எதிராகக் களமிறங்குகின்றனர். இது ஆண் பெண் நல்லிணக்கத்தை மென்மேலும் பாழ்படுத்தி, பிரச்சனையைத் தீவிரப்படுத்துகிறது.

33% அரசியல் ஒதுக்கீடு, 100% கல்விப் புரட்சி, 50% பொருளாதாரப் புரட்சி என பெண்கள் முன்னேற்றத்துக்கான இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. ஆனால், சமூகப் புரட்சியில் ஒரு சதவீத முன் நகர்தலுக்கான இலக்கையேனும் நாம் கொண்டிருக்கிறோமா? நிச்சயமாக இல்லை. கல்வி, பொருளாதார, அரசியல் தளங்களில் பெண்கள் தமக்கான இடத்தைச் சம அளவில் பெறுவதென்பது அவர்களுக்குச் சுதந்திரத்தை உறுதி செய்து தரும். அவ்வாறே தந்து கொண்டிருக்கிறது. ஆனால் சமத்துவத்தை? இம்மூன்று நிலைகளிலும் அடைந்த விழிப்புணர்வும் முன்னேற்றமும் பெண்களுக்குச் சமத்துவத்தை உறுதி செய்து தர முடியவில்லை. அது சமூகப் புரட்சியால் மட்டுமே சாத்தியப்படும்.

சுதந்திரத்தைப் பெறுவதாலேயே தமக்கு சமத்துவம் கிடைத்து விடுவதாகப் பெண்கள் தவறாக நினைத்துக் கொண்டிருக்கின்றனர். அதனால் பெண்ணியவாதங்கள் அனைத்தும் சுதந்திரத்தை மையப்படுத்தியதாகப் பேசவும் எழுதவும் படுகின்றன.

உண்மையில் சமத்துவம் இருந்தால் மட்டுமே சுதந்திரம் அர்த்தப்படுகிறது. சமத்துவமில்லாத இடத்தில் கிடைக்கும் சுந்திரம் ஆபத்தானதும்கூட! மருத்துவ மாணவி நிர்பயா இரவுப் பொழுதில் தனது நண்பருடன் பயணிப்பதற்கு தனக்கு எவ்வித தடையுமில்லை என நினைத்தார். அதற்கான சுதந்திரம் தனக்கு இருப்பதாக நம்பினார். ஆனால், மணமாகாத பெண் அதிலும் ஓர் அந்நிய ஆணுடன் இரவுப் பொழுதில் வெளியே செல்ல அனுமதியில்லை என்ற பாடம் கொடூரமான எச்சரிக்கையாக்கப்பட்டது. இவ்வாறே காதலிக்கத் தனக்கு உரிமை இருப்பதாக நம்பும் பெண்கள் ஆணவக் கொலைக்கு பலியாகின்றனர். காதலை மறுக்க தனக்கு உரிமையிருப்பதாக நம்பும் பெண்கள் ஒருதலைக் காதலர்களால் கொல்லப்படுகின்றனர். என்ன வேண்டுமானாலும் படி, எவ்வளவு வேண்டுமானாலும் சம்பாதி. ஆனால் இங்கே பெண்ணுக்கென விதிக்கப்பட்ட எந்த விதிமுறையையும் மீற நினைக்காதே. எந்த எல்லையையும் தாண்ட முயலாதே என்ற சட்டம் பல நூற்றாண்டுகளாய் அமலில் இருக்கிறது.

சமத்துவத்தை விதைப்பதற்கான சமூக மாற்றம் ஏட்டுக் கல்வி பரவலாக்கத்தாலோ, சில ஆயிரங்களைச் சம்பாதிப்பதாலோ வந்து விடாது என்ற சமூக அறிவைக் கால் நூற்றாண்டு கால உலகமயமாக்கல் அனுபவத்தின் விளைவாக நாம் பெற்றாக வேண்டிய கட்டாயம் உருவாகி இருக்கிறது. படித்த சமூகம் தனது முந்தைய தலைமுறையினர் கொண்டிருந்த மூட நம்பிக்கைகளையும் அடிமை - ஆதிக்கக் கருத்தியல்களையும், பிற்போக்குத் தனங்களையும் விட்டொழிந்து ஓரடிகூட முற்போக்கை அடையவில்லை. அதுகூடப் பரவாயில்லை, கல்வியறிவு மற்றும் தகவல் தொழில்நுட்பத்தின் உச்சபட்சப் பலன்களை அனுபவிக்கும் இந்த தலைமுறை அறிவியல் ஆற்றல் அனைத்தையும் கொண்டு அத்தனை பிற்போக்குத்தனங்களையும் நவீனப்படுத்தி நியாயமும்படுத்துகிறது.

ஜோசியம், கம்ப்யூட்டர் ஜோசியமானதைப் போல, நல்லநேரம் பார்த்து சிசேரியன் செய்யப் படுவதைப்போல, கணினிக்கு ஆயுதபூஜை செய்வதைப்போல, எல்லா நவீனங்களையும் முன்னேற்றங்களையும் தனது பிற்போக்குச் சட்டகத்திற்கு இழுத்து அடைத்து கலாச்சாரம் என்ற பெயரில் கட்டிக் காக்கும் சமகால அவலம் பரவி நிற்கிறது. இந்த மூட நம்பிக்கைகளின் கொடூர நீட்சியாக, பெண்ணை ஒடுக்கும் சாதியமும் மதவாதமும் ஆணாதிக்கமும் மீட்டுருவாக்கம் செய்யப்படுகின்றன.

மநுநீதி வலியுறுத்திய அதே விதிமுறை களை நச்சுக் கிருமிகளைப்போல எங்கெங்கும் பரவி இருக்கும் இந்துத்துவவாதிகள் புதிய சட்டங்களாக முழங்கத் தொடங்கி இருக்கின்றனர்.

இந்துத்துவ அமைப்புகளையும் கட்சி களையும் சேர்ந்தவர்கள் இத்தேசம் விட்டொழித்த பல ஆணாதிக்கக் கருத்தியல் களுக்கு மதத்தின் பெயரால் புத்துயிரூட்டும் வேலையைச் செய்து கொண்டிருக்கின்றனர். பெண்கள் வெறும் மனைவியராக இருக்க, ஆண்கள் மட்டும் வேலைக்குச் செல்ல வேண்டும். இதிலிருந்து விலகும் பெண்களை ஆண்கள் விட்டொழிக்கலாம் என்று சொன்ன ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத் மநு நீதியின் பெண்ணடிமைத்தனத்தை இந்தியாவின் பண்பாடாக மாற்றப் படாதபாடு படுகிறார்.

சுதந்திரமாக உடை அணிவது தொடங்கி இருட்டிய பின் வெளியே இருப்பது வரை எல்லாமே புதிதாகக் கேள்விக்குட்படுத்தப்படு கின்றன. இந்து வெறியர்களால் தொடர்ச்சியாக விடுக்கப்படும் மிரட்டல்கள், தன் பெண் பிள்ளைகளுக்கு ஓரளவுக்கு சுதந்திரம் கொடுத்திருந்த பெற்றோருக்கு கலக்கத்தை உண்டாக்கியது. பெண் குழந்தைகளை சுதந்திரமாக வளர்க்க வேண்டுமென பெற்றோர் நினைத்தாலும் சமூகச் சூழல் அதற்கு ஒத்துழைக்கவில்லை. கல்வியிலும் வேலை வாய்ப்புகளிலும் பெண்களுக்குச் சுதந்திரத்தை அளிக்கத் தயாராக இருக்கும் குடும்பங்கள் தனக்கான துணையை தேர்ந்தெடுக்கும் சுதந்திரத்தைப் பெண்களுக்கு வழங்கத் தயாராக இல்லை. சாதி மறுப்புத் திருமணம் செய்த கவுசல்யாவின் கண்ணெதிரே அவரது கணவர் சங்கர் வெட்டிச் சாய்க்கப்பட்டார். சாதி, மதக் கோட்பாடுகள் பெண்ணை அடிமைப்படுத்து வதன் மூலமே கட்டிக் காக்கப்படுகின்றன. ஆண்

**ஆணாதிக்கத்தை**
**ஆணின் ஆதிக்கமென**
**சுருக்கிப் பார்க்கும் பார்வையில் இருந்து**
**விலகி, அடிப்படையில்**
**மதக் கோட்பாடுகளாலேயே அது**
**வளர்த்தெடுக்கப்படுகிறது என்ற**
**சமூகப் புரிதலை எட்ட வேண்டும்.**

அதன் கருவி. அவ்வளவே. ஆக, பாலினச் சமத்துவத்தை நிலைநிறுத்த விரும்பும் சமூகம் அடிப்படையில், சாதியத்தையும் மதவாதத்தை யும் அழித்தொழிக்க வேண்டும். அதுதான் இங்கே உண்மையான சமூகப் புரட்சியாகிறது.

இந்த மண்ணில் பெரியார் நிகழ்த்திக் காட்டிய சமூகப் புரட்சியும் அதுதான். அவர் பெண்ணடிமைத்தனத்திறகு காரணமாக ஆண்களைப் பழிக்கவில்லை. மதக்கோட் பாடுகளையே சாடினார். இந்துமதம் பெண்களை எவ்வாறு இழிவுபடுத்துகிறது. இராமாயணம், மகாபாரதம் போன்ற புராணக் கதைகள் எவ்வாறு அடிமைப்பெண்களை முன்னுதாரணமாக்குகின்றன. கடவுள் குறித்த கதைகளின் மூலமாகப் பெண்கள் மீது நிறுவப்படும் ஆபாசம் என அவர் எல்லா வற்றையும் அம்பலப்படுத்தினார். மதங்களில் இருந்து தம்மை விடுவித்துக் கொண்டு பகுத்தறிவையும் சுயமரியாதையையும் எட்டுவது ஒன்றே பெண் விடுதலைக்கான ஒரே வழி என சூளுரைத்தார்.

பெரியார் ஆற்றியதில் கால்வாசியளவுகூட இவ்வுண்மையை இச்சமூகத்திற்கு உரக்கச் சொல்லும் தலைவர்களோ இயக்கங்களோ இன்றில்லை. அதனாலேயே கல்வியறிவு பெற்ற பெண்கள் மதப் பற்றுள்ளவர்களாகத் தம்மைக் காண்பித்துக் கொள்வதை இந்தியப் பண்பாடு என்பதோடு சேர்த்துக் குழப்பிக் கொண்டனர். மதப்பற்று, சாதிப் பிடிப்பு எல்லாவற்றையும் வைத்துக் கொண்டு, ஆணாதிக்ககம் மட்டும் வேண்டாம் என்றால் எப்படி? மதமிருந்தால், சாதியுமிருந்தால் இலவச இணைப்பாக ஆணாதிக்கமும் கூடவே வரும் என்பதுதான் விதி. தாய் வழிச் சமூகம் அழிக்கப்பட்ட புதிய கற்காலத்தில் ஆணாதிக்கத்தை நிறுவ மதமே உதவியது. மதத்தைப் பாதுகாக்க ஆணாதிக்கம்

ஒரு கருவியாக்கப்பட்டது. உண்மை இப்படி யிருக்க மதக் கோட்பாடுகளை நேர்மறையான தாகவும், ஆணாதிக்கத்தை எதிர்மறையான தாகவும் சித்தரித்து ஒன்றைக் காத்து, மற்றது அழிய வேண்டுமென நினைப்பதை விடவும் அறியாமை வேறெதுவுமில்லை.

பெரியார் இதைத்தான் உறுதியாக எடுத்துரைத்தார். ஆனால், அரை நூற்றாண்டுக் காலம் தெருத் தெருவாக அலைந்து பெண் விடுதலையை மையப்படுத்தி அவர் செய்த பகுத்தறிவுப் பிரச்சாரத்தின் பலன் அடுத்த தலைமுறைக்குக்கூட கடத்தப்படவில்லை. ஆண்களை விடவும் பெண்கள் கடவுள் நம்பிக்கையும் மதப்பற்றும் அதிகம் கொண் டிருக்கக் கற்பிக்கப்படுகின்றனர் என்றாலும் கல்வியின் பயனால் சிந்திக்கும் திறன் அதிகரித்திருக்குமானால் இந்நேரம் அது தகர்க்கப்பட்டிருக்க வேண்டும். வீட்டுக்குள் முடங்கியிருந்த பெண்கள் எப்படிப் பிற்போக்காக இருக்க வைக்கப்பட்டனரோ அதைப் போலவேதான் பெரும் சாதனைகளைப் புரியும் பெண்களும்!

ஒலிம்பிக்கில் வெள்ளிப் பதக்கம் வென்று வரலாற்று சாதனைப் படைத்த பி.வி. சிந்து ஊர் திரும்பிய கையோடு திருப்பதிக்கு வந்து வெங்கடேசுவரனுக்குக் காணிக்கை செலுத்தினார். இதுபோன்ற பெண்கள், இது போன்ற நடவடிக்கைகளால் இந்த சமூகத்திற்கும் சக பெண்களக்கும் சொல்ல வரும் செய்தி என்ன? பொதுவாக மதப்பற்று எல்லாரையும் பலவீனமானவர்களாகவே வைத்திருக்கும் என்பதே உளவியல்.

பலவீனமே அடிமைத்தனத்திற்கு வழி வகுக்கிறது எனும்போது இந்தத் தொடர்ச்சியைப் புரிந்து கொள்ள மறுக்கும் பெண்கள் சாதித்தாலும் அது அடிமையின் சாதனையாகவே அடையாளம் பெறுகிறது. மத நம்பிக்கைக் கொண்ட பெண்கள் தனிப்பட்ட வாழ்க்கையில் பிரச்னை வரும்போது பெரும்பாலும் எதிர்த்து நிற்காமல், தப்பிக்கும் வழி அறியாதவர்களாகவே இருக்கின்றனர். அவர்களது மதம் அவர்களுக்கு அதையே கற்பிக்கிறது.

பகுத்தறிவு மற்றும் சமத்துவப் பரவலாக்கம் இங்கே நிகழ வேண்டுமெனில் சாதி மதத்திற்கு எதிரான சமூகப் புரட்சி நடந்தாக வேண்டும். ஆணாதிக்கத்தை ஆணின் ஆதிக்கமென சுருக்கிப் பார்க்கும் பார்வையில் இருந்து விலகி, அடிப்படையில் மதக் கோட் பாடுகளாலேயே அது வளர்த்தெடுக்கப்படுகிறது என்ற சமூகப் புரிதலை எட்ட வேண்டும். இந்தியச் சமூகத்தின் பெரும்பான்மை இந்துக் களுக்கு அவர்களது மதம், சாதி மற்றும் ஆணாதிக்கம் என இரண்டு கருவிகளாலேயே இயங்குகிறது என்பது நன்கு தெரியும். அதனால் தான் அவ்விரண்டையும் பலவாறான வன்முறைகள் மூலமாக அதை கட்டிக் காத்துக் கொண்டே இருக்கின்றனர்.

இந்தியச் சமூகத்தின் ஈடற்ற பெண்ணுரிமைப் போராளியான பெரியார், ஆணாதிக்கத்திற்கு ஆண்களே காரணம் என்றும், அதனால் ஆணாதிக்கத்தை ஒழிக்க வேண்டுமெனில் ஆண்களை ஒழிக்க வேண்டும் என எங்கேயுமே குறிப்பிடவில்லை. ஆனால், இன்றைய பெண்களுக்கு புரிதல் அவ்வாறான குறுகிய விவாதங்களுக்குள் சிக்கி உழல்கிறது. அதோடு, இன்றைய படித்த பெண்கள் தம்மை தீவிர மதப் பிடிப்பாளர்களாக முன்னிறுத்தியபடியே ஆணாதிக்கத்தை வேரறுத்துவிட முடியுமென நம்புகின்றனர். அதுதான் வேதனையான வேடிக்கை.

‘தலைமுடியை வெட்டியெறியுங்கள்; அலங்காரத்தை நிறுத்துங்கள்; உடைகளை மாற்றுங்கள்; தேவைப்பட்டால் கருப்பையையும் அறுத்தெறியுங்கள்’ என்று பெரியாரின் அத்துமீறல்கள் அனைத்தும் மதக் கட்டுப்பாடுகளிலிருந்து பெண்களை விடுவிக்கும் முயற்சியே. ஏனென்றால் இவையனைத்துமே ஓர் அடிமைப் பெண்ணுக்கான அறிகுறிகள்.

இந்துக்கள் அதிகரிக்க, இந்துப் பெண்கள் நான்கிற்கும் மேற்பட்ட குழந்தைகளை பெற்றுக் கொள்ள வேண்டுமென மோகன் பகவத் போன்றவர்கள் இந்த முன்னேறிய காலத்திலும் உளறுவார்கள் என்ற அவதானிப்பில்தான் கருப்பையே வேண்டாம் உங்களுக்கு எனக் கோபப்பட்டார் பெரியார். இந்து மதத்தைக் காக்க இந்துப் பெண்கள் பிள்ளைப் பெற்றுத் தரும் எந்திரமாக இருக்க வேண்டுமென்ற கருத்து ஆணாதிக்கச் சிந்தனையா, மத ஆதிக்கச் சிந்தனையா? எதிர்க்கப்பட வேண்டியது மதமா? ஆணா? எது?

பெண்ணை வெறும் உடலாக்கி, அதையே சிலையாக்கியதுதான் மதம் மற்றும் ஆண்களின்

சூழ்ச்சி. அதனாலேயே பெண்கள் உடல் குறித்த சிந்தனைகளைத் துறக்க வேண்டுமெனப் பெரியார் வலியுறுத்தினார். பெண்கள் மதிப்பற்றுப் போவதற்கும், அவர்கள் வெறும் போகப் பொருள்தான் என்று ஆண்கள் கருதி நடப்பதற்கும் முக்கிய காரணமே பெண்கள் ஆபாசமாகத் தங்களைச் சிங்காரித்துக் கொள்வதேயாகும். (விடுதலை 15.6.1943)

தங்களை நாகரிக நாரிமணிகள் என்று கருதிக்கொள்ளும் பெண்கள் எல்லாம்கூட, நல்ல முறையில் ஆடை அலங்காரம் செய்து கொள்வதையும், நைசான நகைகள் போட்டுக் கொள்வதையும், சொகுசாகப் பவுடர் பூசிக் கொள்வதையும் தான் நாகரிகம் என்று கருதி வருகிறார்களே தவிர - ஆண்களுக்குச் சரிநிகர் சமானமாக வாழ்வது தான் நாகரிகம் என்பதை உணர்ந்திருக்கவில்லை (விடுதலை 11.10.1948) என, உடலரசியலை பெரியார் அளவுக்குப் புறக் காரணிகளோடு பிணைத்து எடுத்துரைத்தவர் யாருமில்லை. திருமணம் குறித்தும்; பாலியல் சுதந்திரம் குறித்தும் இன்று பேசும் யாரையும்விட மிக மிக முன்னோக்கி சிந்தித்தவர்.

இந்துமதம் ஒரு பக்கம் பெண்ணுடலைத் தீட்டாக்கி மறுபக்கம் பெண்ணைப் புனித மாக்கிச் செய்து கொண்டிருந்த குழப்படிகளி லிருந்து பெண்களை வெளியே இழுத்து சுயமரியாதை எனும் தெளிவை விதைத்தவர். கொண்டாடுவதற்கு உடலில் ஏதுமில்லை என்ற அவரது நிலைபாட்டிலிருந்து விலகி, நவீனப் பெண்ணியவாதிகள் உடலைக் கொண்டாடத் தலைப்பட்டனர். உடலைக் கொண்டாடுதல் என்பது ஓர் ஆண் மனநிலை.

பெண்ணியப் போராளிகள் உடலைப் போற்றி எழுதத் தொடங்க ஆணுலகம் அதை ரசிக்கத் தொடங்கியது. நம் வேலையைப் பெண்களே பார்க்கின்றனர். பரவாயில்லை என வேடிக்கைப் பார்க்கத் தொடங்கினர். உடலைக் கொண்டாட வேண்டுமா? கடக்க வேண்டுமா? என்றால் கடக்க வேண்டும் என்பதே விடுதலைக்கான பதில். உடலைக் கொண் டாடுதல் ஓர் அகவயப்பட்ட நிலை. ஆனால், கடத்தல் என்பது புறவயப்பட்ட போர். ஆம், அதுவொரு சமூகப் போர். அந்தப் போரை நிகழ்த்தாமல் பெண்ணியம் உடலைக் கொண் டாடுதல் என்ற சிற்றின்பத்தில் நிம்மதியடைந் திருக்கிறது.

இந்து மதத்தின் வருணாசிரமம் பெண்களை சூத்திரர்களாகவே கருதுகிறது. இன்றும் பெண் ஒரு தீட்டுப் பிறவிதான். 70 ஆண்டுகளுக்கு முன்னர் இந்து மதத்தை அக்குவேறு ஆணி வேறாகப் பிரித்துப் போட்டுப் பெண்ணடிமைத்தனத்திற்கான காரணங்களின் மீது வெளிச்சம் பாய்ச்சிய பெரியார், நாகரிகச் சமூகத்தின் தந்தை என எக்காலத்திலும் சொல்லலாம்.

ஆனால் நாகரிகம் என்ற சொல்லுக்கான விளக்கம் இங்கே திரிபட்டுக் கிடக்கிறது. பாரம்பரியப் பழக்கவழக்கங்களைக் கைவிட்டு சமகால மாற்றங்களுக்கேற்ப தன்னைத் தகவமைத்துக் கொள்ளுதலே நாகரிகம் என்ற சொல்லுக்கான விளக்கமாக முன்வைக்கப்படு கிறது.

இந்த விளக்கத்தை அப்படியே விழுங்கிக் கொண்டவர்கள் மேற்கத்திய உடை அணி வதையும், பேசுவதையும், கணினியைக் கையாள் வதையும், செல்போனில் சுழல்வதையும், மால்களுக்குப் போவதையும், குளிர்பானங்கள் குடிப்பயையும் நாகரிகம் என்றாக்கி, தம்மை முன்னேறியவர்களாகக் கருதிக் கொள்கின்றனர். உண்மையில் நாகரிகமடைதல் என்பதற்கான விளக்கம் வேறு.

முந்தையத் தலைமுறைகளில் பின்பற்றப் பட்ட பிற்போக்குக் கருத்தியல்களைக் கைவிட்டு ஒரு சமூகம் பண்படுதலே நாகரிகம். மனித அறம் குறித்தும், சக மனிதர் குறித்தும், விழிப்போ டிருந்து எதிர்காலத் தலைமுறை பண்போடு வாழ வழியமைத்தலே நாகரிகத்தின் பயன். கடந்த காலத்தின் கொடுமைகளையும் மூடத்தனங்களை யும் கேள்விக்குட்படுத்தாமல் வெறுமனே உடைகளில் புரட்சி செய்யும் சமூகத்தை ஒரு போதும் நாகரிகமானதாகக் கருத முடியாது.

பெண்ணை மதச் சட்டகத்திற்குள் அடைத்து வைத்திருக்கும் வரையில்தான் ஆணாதிக்கம் இங்கே பிழைத்திருக்கும். ஆக, மதத்தையும் சாதியத்தையும் வேரறுப்பதில் ஒவ்வொருவரும் - ஒவ்வொரு பெண்ணும் பெரியாராகும்போது ஆணாதிக்கமென்ன, அத்தனை ஆதிக்கங்களும் தகர்ந்து விழும்.

இந்த விழிப்புணர்வும் புரிதலுமே இங்கே வளர்த்தெடுக்கப்பட வேண்டும். அதுவொன்றே பெண்களுக்கான விடுதலையை உறுதிப் படுத்தும்.

- 'தமிழ்த் தேசிய விடுதலைக்கான வாழ்வியல் பண்பாடு'
நூலில் இடம் பெற்ற கட்டுரை

***மா**ர்க்ஸ் – ஏங்கல்ஸ் சமதர்ம அறிக்கையை 1931லேயே 'குடிஅரசு' வெளியீடாக பெரியார் வெளியிட்டார். அதற்கு பெரியார் எழுதிய முன்னுரையில் வேறு நாடுகளில் இல்லாத இந்தியாவில் கூடுதலாக ஜாதி என்ற அமைப்பு இருப்பதை எடுத்துக்காட்டி ஜாதி முதன்மையானதாகவும் பணக்கார – ஏழை தத்துவத்துக்குக் கோட்டையாகவும் இருக்கிறது என்பதையும் சுட்டிக்காட்டி யுள்ளார். பெரியார் தீட்டிய முன்னுரை:*



தற்காலம் உலகில் ரஷியாவிலும், ஸ்பெயினிலும், மற்றும் சைனா முதலிய இடங்களிலும் சமதர்மம், பொதுவுடைமை தர்மம் ஆகியவைகளின் பேரால் அரசாட்சிகளும் கிளர்ச்சிகளும் நடைபெற்று வருவது யாவரும் அறிந்த ஒரு உண்மையாகும்.

இவ்வுணர்ச்சியானது ரஷியாவில் தான் முதல் முதல் தோன்றியதாக

# இந்தியாவில் ஏன் புரட்சி நடக்கவில்லை?

நமது மக்களில் அனேகர் கருதிக் கொண்டிருக்கின்றார்கள். சமதர்ம உணர்ச்சி சம்பந்தமான சரித்திரத்தைக் கவனித்து ஆராய்ந்து பார்ப்பவர்களுக்கு இக்கருத்து சரியானதல்ல என்பதாகத் தோன்றும். ஏனெனில், உலகில் சமதர்ம உணர்ச்சி என்பதானது பல நூற்றாண்டு களுக்கு முன்பே தோன்றியிருப்பதற்கு அத்தாட்சிகளிருக்கின்றன.

சமதர்ம உணர்ச்சி ஒரு எண்ணமாய் ஏற்பட்டு அதன் தத்துவங்களைப் பற்றியும், கொள்கைகளைப் பற்றியும் வெளியில் எடுத்து மக்களுக்குத் தெரியும்படியாக மகாநாடுகள் மூலமும் அறிக்கை மூலமும் வெளிப்பட்டிருப்பதாக நமக்கு விளங்கும்படியாய் காணப்படும் காலமே இன்றைக்கு சுமார் 80, 90 வருஷங்களுக்கு முன்பு என்று தெரிகின்றது. அதாவது 1847 ம் வருஷத்திலேயே லண்டன் மாநகரத்தில் உலகத்திலுள்ள சமதர்மவாதிகளுடைய மகாநாடு (காங்கிரஸ்) ஒன்று நடந்திருப்பதாகவும், அதன் பயனாய் அறிக்கை வெளியிடப்பட்டிருப்பதாகவும் தெரிய வருகின்றது. ஆனால் அதை சீக்கிரத்தில் கையாளப்படவும் அனுபவத்திற் கொண்டு வரவும் முயற்சித்த நாடு ரஷியாவாக ஏற்பட்டு விட்டது.

இது சம்பந்தமாக நமக்குக் கிடைத்த ஒரு அறிக்கை சரித்திரத்தில் சமதர்ம உணர்ச்சி பெற்றவர்களில் முதன்மையான முக்கியஸ்தர்கள் ஜெர்மனியர்களாயிருந்தாலும், அதற்காக மகாநாடு கூடினது லண்டன் பட்டணமாய் இருந்தாலும், அதற்கு அப்பொழுதே கிளர்ச்சி நடந்தது பிரான்சு தேசமாயிருந்தாலும், அது முதல் முதல் அனுபவத்தில்

கொண்டுவர முயற்சிக்க வேண்டிய இடம் ரஷியா வாகவே ஏற்பட்டுவிட்டது சிலருக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கக் கூடியதாயிருந்தா லும் அந்தப்படி ஏற்படுவதற்கு நியாயம் இல்லாமலில்லை.

என்ன நியாயமென்று வாசகர்கள் கேட்பார் களேயானால் அதற்கு நமது சமாதானமானது எங்கு அளவுக்கு மீறிய தாங்க முடியாத கொடுமை நடைபெறுகின்றதோ அங்கு தான் சீக்கிரத்தில் பரிகார முயற்சி வீறு கொண்டு எழவும் சீக்கிரத்தில் இரண்டிலொன்று காணவுமான காரியங்கள் நடைபெறும்.

எனவே இந்த நியாயப்படிப் பார்ப்போ மானால் உலக அரசாங்கங்களிலெல்லாம் ரஷிய ஜார் அரசாங்கமே மிக்கக் கொடுங் கோன்மையாக நடைபெற்று வந்திருக்கின்றது. அதனாலேயே அங்கு சமதர்மமுறை அனுப வத்திற்கு கொண்டுவர வேண்டியதாயிற்று. இந்த நியாயப்படி பார்த்தால் அவ்வித சமதர்ம உணர்ச்சி உலகில் ரஷியா தேசத்தை விட இந்தியாவுக்கே முதன் முதலாக ஏற்பட்டு இருக்கவேண்டியதாகும். ஆனால் அந்தப்படி ஏற்படாமல் இருப்பதற்கு இங்கு அனேகவித சூட்சிகள் நடைபெற்று வந்திருப்பதாலும், சூட்சிக்காரர்கள் இந்திய மக்களை வெகு ஜாக்கிரதையாகவே கல்வி, அறிவு, உலக ஞானம், சுயமரியாதையுணர்ச்சி முதலியவைகள் பெறுவதற்கு மார்க்கம் இல்லாமல் காட்டு மிராண்டித் தன்மையில் வைத்து வந்ததோடு, கடவுள் பேராலும் மதத்தின் பேராலும் ஏற்படுத்தப்பட்ட உணர்ச்சியானது அடிமையாக இருப்பதே கடவுள் சித்தமென்றும், மோட்ச சாதனமென்றும் புகட்டி வந்ததாலும், அதே சூட்சிக்காரர்கள் அடிக்கடி வேற்றரசர்களை அழைத்து வந்து மக்களை மிருகத்தனமான ஆதிக்கத்தால் அடக்கி ஆளச் செய்து வந்ததாலும் உலகில் சமதர்ம உணர்ச்சி முதன் முதல் இந்தியாவிலேயே ஏற்பட்டிருக்க வேண்டியது மாறி ரஷியாவுக்கு முதல் ஸ்தானம் ஏற்பட வேண்டியதாயிற்று.

ஆன போதிலும்கூட இப்போது உலகில் மற்றும் எல்லாப் பாகங்களிலும் ஏற்பட்டு விட்டதின் காரணமாய் இந்தியாவிலும் ஏற்பட வேண்டியது தவிர்க்க முடியாத அவசியமாய் போய்விட்டதால் இங்கும் தலை காட்ட ஆரம்பித்து விட்டது. ஆனால் உலகில் சமதர்ம உணர்ச்சிக்கு விரோதமான தன்மைகளில் மற்ற தேசத்திற்கும் இந்தியாவுக்கும் ஒரு முக்கிய வித்தியாசம் இருந்து வருகின்றது. அதென்ன வென்றால் மற்ற நாடுகளில் ஒரு விஷயம் தான் முக்கியமாய் கருதப்படுகின்றது. அதாவது முதலாளி (பணக்காரன்) வேலையாள் (ஏழை) என்பதுவேயாகும். ஆனால் இந்தியாவிலோ மேல் ஜாதியார்- கீழ் ஜாதியார் என்பது ஒன்று அதிகமாகவும் முதன்மையானதாகவும் இருப்பதால் அது பணக்காரன், ஏழை தத்துவத்திற்கு ஒரு கோட்டையாக இருந்து காப்பாற்றிக் கொண்டு வருகின்றது. ஆதலால் இங்கு சமதர்மத்திற்கு இரட்டிப்பு அதிகமான எதிர்ப்பு இருந்து வருவது கொண்டு சமதர்ம உணர்ச்சி தலை தூக்க முடியவில்லை.

இவ்விபரங்கள் இந்த அளவில் நிற்க, முன் குறிப்பிட்டதான அதாவது சமதர்மக் கொள்கை சம்பந்தமாக அந்தக்காலத்தில் வெளியான ஒரு அறிக்கையை மக்கள் உணரும்படியாக வெளிபடுத்தலாம் என்று நாம் கருதுவதால் அதை மொழிபெயர்த்து வெளியிடலாம் என்கின்ற கருத்துக்கு மேல்கண்ட வாக்கியங் களை முகவுரையாக எழுதினோம். இனிமேல் வருபவைகள் முழுவதும் அவ்வறிக்கையின் மொழிபெயர்ப்பேயாகும். அதில் நமதபிப்பிராயம் என்பது சிறிதும் இல்லை. ஆகையால் வாசகர்கள் அதை 1847-டு ல் இரண்டு ஜர்மனியர்களுக்கு ஏற்பட்ட அபிப்பிராயம் என்பதாகவே கருதி வாசிக்க வேண்டும் என்று விரும்புகின்றோம்.

பெரியார்

'குடிஅரசு' நூல் முகவுரை - 04.10.1931

**சுயமரியாதையும் பொதுவுடைமையும் [2]**

# சுயமரியாதை இயக்கத்தின் அரசியல் கொள்கை

*'கற்பனை-விஷமப்' பிரச்சாரங் களை மறுத்து சுயமரியாதை இயக்கத் தின் அரசியல் கொள்கையை விளக்கி பெரியார் வெளியிட்ட அறிக்கை.*

சுயமரியாதை இயக்கத்தைப் பற்றி அதன் சமுதாய சம்மந்தமான கொள்கைகளின் எதிரிகளால் கிளப்பிவிடப்பட்ட பலவிதமான கற்பனைச் சேதிகளாலும் விஷமப் பிரசாரங் களாலும் பொது மக்களுக்குள் சில தப்பு அபிப்பிராயங்கள் பரவி வருவதாகத் தெரிகின்றது.

இதைப்பற்றி பல சமயங்களில் நாம் பொது ஜனங்களுக்கு விளக்கி இருந்தும் சில பகுதிகளில் அவ்வித தப்பு அபிப்பிராயங்கள் மாறியதாகத் தெரியவில்லை. ஆதலால் முன்பு விளக்கியவை களையே மறுபடியும் விளக்க வேண்டியிருக் கிறது.

சுயமரியாதை இயக்கத்தின் முக்கியமான கருத்தெல்லாம் தாழ்த்தப் பட்ட மக்களுக்கும், பெண்களுக்கும், ஏழை மக்களுக்கும் நன்மை செய்வதற்கு உழைப்பதேயாகும். அதாவது அவர்களை தற்போது இருக்கும் கஷ்டமான நிலையிலிருந்து விடுவித்து சமூகத் துறையிலும் பொருளாதாரத் துறையிலும் சமத்துவமாக வாழச் செய்ய வேண்டும் என்பதே.

இந்தக் கருத்து வெற்றி பெற வேண்டு மானால் அரசியல், சமுதாய இயல், பொருளாதார இயல் ஆகிய மூன்று துறைகளிலும் கவலை எடுத்து உழைத்து வந்தாலொழிய பயனேற் படாது. ஆதலால், சுயமரியாதை இயக்கமானது முக்கியமாய் இத் துறைகளில் உழைத்து வரவேண்டியதாகிறது.

எனவே, இம் மூன்று துறை உழைப்பிலும் இயக்கத்தின் திட்டம் என்ன என்பதை ஒருவாறு பொது ஜனங்களுக்கும், அரசாங்கத்திற்கும், இயக்கத்தைக் குறை கூறுகின்ற நண்பர்களுக்கும் விளங்குவதற்காக கீழே விவரிக்கின்றேன்.

**அரசியல்**

சுயமரியாதை இயக்கம் ஆரம்ப காலத்தில் அரசியல் துறையில் பிரவேசிக்கக் கூடாது என்கின்ற ஒரு அபிப்பிராயத்தைக் கொண் டிருந்த போதிலும், அரசியலின் பெயரால் காங்கிரஸ் என்னும் ஒரு ஸ்தாபனத்தை பார்ப்பனர்கள் கைப்பற்றி அதைத் தங்கள் ஆதிக்கத்திற்கு அனுகூலமான ஆயுதமாக பயன்படுத்திக் கொண்டு வந்து இந்நாட்டில் எவ்விதமான சமுதாய சீர்திருத்தமும், பொருளாதார சீர்திருத்தமும் ஏற்பட முடியாமல் அவ்விரண்டுக்கும் முட்டுக்கட்டையாகவே இருந்து வந்ததால், குறிப்பாகவும், தெளிவாகவும் சொல்ல வேண்டுமானால் காங்கிரசை சுயமரியாதைக் கொள்கைகள் முழுவதற்குமே விரோதமாக வேலை செய்வதற்கே பயன்படுத்தி வந்ததால், அப்படிப்பட்ட காங்கிரசை எதிர்க்க வேண்டியதும், அதன் ஆதிக்கம் குறைக்கப்பட வேண்டியதற்கு எவ்வித முறையையும் கையாள வேண்டியதும் அவசியம் என்னும் தன்மையில் அரசாங்கத்துடன் ஒத்துழைப்பது அவசிய மானால் அந்தப்படியும் செய்வது என்றும் கருதி வந்திருக்கிறது என்பதோடு இனியும் அந்தக் கருத்தையே கொண்டிருக்கிறது.

ஆதலால் சுயமரியாதை இயக்கம் அரசியலில் பிரவேசிக்கிறது என்று சொல்லப்படுமானால், பார்ப்பன ஆதிக்கத்தை குறைப்பதற்காகவும் காங்கிரசை பார்ப்பனர்கள் சுயமரியாதை இயக்கத்திற்கு விரோதமாய் உபயோகப்படுத்தி பயன் பெறாமல் இருப்பதற்காகவுமே ஒழிய மற்றபடி அரசாங்க சட்டதிட்டங்களை எதிர்க்கவோ அவற்றிற்கு மாறாக நடக்கவோ என்பதற்காக அல்லவென்று தெரிவித்துக் கொள்ளுகிறோம். இதே அபிப்பிரா யத்தை இதற்கு முன்னும் பல தடவை தெரியப்படுத்தியு மிருக்கிறோம்.

அன்றியும், சுயமரியாதை இயக்கக் கொள்கைகள் பல அமுலுக்கு வர வேண்டு மானால் அரசாங்கத்தின் மூலம் பல சட்டத் திட்டங்கள் ஏற்பட வேண்டி இருப்பதால் அதை உத்தேசித்தும் அரசியலில் தலையிட வேண்டியது அவசியமாகிறது.

ஆகவே சுயமரியாதை இயக்கம் ஏதாவது எப்போதாவது அரசியலில் தலையிட்டது என்று சொல்ல வேண்டிவருமானால் அரசாங்க சட்ட திட்டங்களை மீறவோ, அவைகளுக்கு இடையூறு உண்டாக்கவோ அல்ல என்பதை அறிய வேண்டுகிறேன்.

**பொருளியல்**

நாட்டு மக்களின் பொது நலத்துக்கும், ஏழை மக்களின் வாழ்க்கை உயர்வுக்கும் பொருளாதார நிலையை விருத்தி செய்து அது எல்லா

மக்களுக்கும் ஒரு அளவுக்காவது சமமாய் பரவப்படும்படியாயும் ஒரே கையில் ஏராளமாய் குவியாமலும் பார்த்துக் கொள்ள வேண்டியது முக்கியமானதும் அவசியமானதுமான காரியமாகும். ஆதலால் அந்த அளவுக்கு பயன் ஏற்படும்படி செய்ய வியாபாரம், லேவாதேவி, விவசாயம் முதலிய துறைகளில் சில மாற்றம் செய்ய வேண்டியது அவசியம் என்பது யாவரும் ஒப்புக் கொள்ளத்தக்கதாகும்.

அப்படிச் செய்வதிலும் பலாத்காரம் செய்வதோ திடீரென்று தலைகீழ் புரட்சியான காரியங்களால் மனித சமூகத்தில் பயமும், அதிருப்தியும், சமாதான பங்கமும் ஏற்படும்படி செய்து, சட்டம், சமாதானம் சீர்குலையும்படி செய்வதோ ஆகிய காரியங்கள் இல்லாமல் பொதுஜன உபயோககரமான தொழில் சாலைகள், வியாபாரங்கள், லேவாதேவி முதலான காரியங்களை அரசாங்க நிருவாகத்திற்குள்ளாகவே கொண்டு வரும்படி செய்வதும், அரசாங்க நேர்பார்வை நிர்வாகத்திற்குட்பட்ட கூட்டுறவு முறையின் கீழ் அவை நடைபெறும்படி செய்து லாப நஷ்டங்கள் எல்லா மக்களுக்கும் சமமாய் இருக்கும்படி செய்வது முதலான சமதர்மக் கொள்கையே இயக்கத்தின் பொருளாதாரத் தத்துவமாகும்.

**சமூக இயல்**

மக்கள் அரசியலிலாகட்டும், பொருள் இயலிலாகட்டும் கீழ்மைப்பட்டும், இழிவு படுத்தப்பட்டும் கிடப்பதற்கு சமுதாயத்துறையிலுள்ள பழக்க வழக்கங்களும், மதத் துறையிலுள்ள பேத உணர்ச்சிகளும், பிரிவினைகளும் பெரியதொரு அளவுக்குக் காரணமாய் இருப்பதால் ஜாதி மத சம்பந்தமான மூடக் கட்டுப்பாடுகளும் குருட்டு நம்பிக்கைகளும் ஒழிக்கப்பட வேண்டியது மிகவும் அவசியமாகும். இதை சுயமரியாதை இயக்கம் ஆதியிலிருந்தே வற்புறுத்தி வந்திருக்கிறது.

ஆகவே இந்தக் காரியங்கள் செய்வதற்கு வகுப்பு பேதங்கள், ஜாதி பேதங்கள் ஆகியவைகளை அறவே ஒழிக்க முயற்சிப்பதும், ஜாதி வகுப்பு முதலியவைகளுக்கு ஆக்கமளிக்கும் மதங்களின் தன்மைகளை வெளிப் படுத்துவதும், நியாயமான முறைகளில் ஜாதி, வகுப்பு, மதம் ஆகியவைகளின் தத்துவங்களைக் கண்டிப்பதுமான காரியங்கள் செய்ய வேண்டியது அவசியமென்றும் கருதுகிறது.

இப்படிச் செய்வதில் ஜாதி வகுப்புத் துவேஷங்களை உற்பத்தி செய்ய வேண்டுமென்பதோ, எந்த ஜாதி, எந்த மதம் ஆகியவற்றைச் சேர்ந்தவர்களுக்குள் துவேஷமோ, மனவருத்தமோ உண்டாகும்படி செய்வதோ அல்லது வேண்டுமென்றே அவமானப்படுத்துவது என்பதோ சிறிதும் லட்சியமல்ல என்பதோடு அதை ஒரு நாளும் இயக்கம் ஒப்புக் கொள்ளுவதும் இல்லை.

**முடிவு**

எனவே சுயமரியாதை இயக்கத்தின் அரசியல் கொள்கையானது பார்ப்பன ஆதிக்கக் காங்கிரசை எதிர்ப்பதும் அதற்காக எவ்வளவு அவசியப் பட்டாலும் அவ்வளவு அரசாங்கத்துடன் ஒத்துழைப்பதும் சமுதாய இயலில் ஜாதிமத பேதங்களை அகற்றுவதும் மூட நம்பிக்கைகளை ஒழிப்பதும் பொருளியலில் சமதர்மமுமேயாகும். இவைகளைப் பற்றிய விஷயங்களை மக்களிடை பிரசாரம் செய்யவும், அமுலுக்குக் கொண்டு வரச் செய்யவுமான காரியங்கள் நடைபெற வேண்டுமானால் காங்கிரஸ் ஆட்சியைவிட பிரிட்டிஷ் ஆட்சியே மேலானது என்பது என்னுடைய வெகு நாளைய அபிப்பிராயமாகும்.

பெரியார், ‘குடி அரசு’ 10.03.1935

**சுயமரியாதையும் பொதுவுடைமையும் [3]**

## சுயமரியாதை இயக்கத்தின் மீதான அடக்குமுறைகள்

*சமதர்மப் பிரச்சாரத்துக்காக சுயமரியாதை இயக்கத்தையே முடக்க பிரிட்டிஷ் ஆட்சி முயற்சிகள் மேற்கொண்ட நிலையில் பெரியார் சமதர்மப் பிரச்சாரத் திட்டங்களை தள்ளி வைப்பது என்ற நிலையை எடுத்தார். அதற்கான காரணங்களை விளக்கி பெரியார் எழுதிய கட்டுரை இது.*

உண்மை விளக்கம் பிரஸ் பதிப்பாசிரியரான

தோழர் ஈ.வெ. கிருஷ்ணசாமி அவர்கள் மீதும், தோழர் ப. ஜீவானந்தம் அவர்கள் மீதும் காலஞ்சென்ற பகத்சிங்கால் எழுதப்பட்ட “”நான் ஏன் நாஸ்திகன் ஆனேன்?” என்ற புஸ்தகத்தை முறையே பிரசுரித்ததற்காகவும், மொழி பெயர்த்ததற்காகவும் இந்தியன் பினல் கோர்ட் 124ஏ செக்ஷன்படி ராஜ துவேஷக் குற்றம் சாட்டி கைதியாக்கி சிறையில் வைத்து வழக்குத் தொடர்ந்திருந்தது வாசகர்கள் அறிந்த தாகும்.

அவ்வழக்கு மேல்கண்ட இரு தோழர் களாலும் ராஜ துவேஷத்தை உண்டாக்கவோ, அதைப் பிரசாரம் செய்யவோ எண்ணங் கொண்டு அப்புத்தகம் பிரசுரிக்கவில்லை என்று அரசாங்கத்திற்குத் தெரிவித்து ராஜதுவேஷம் என்று கருதத்தகுந்த காரியங்கள் பதிப்பிக்கப் பட்டு விட்டதற்காக மன்னிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டதின் பேரில் அரசாங்கத்தார் வழக்கை வாபீஸ் வாங்கிக் கொண்டு தோழர்கள் ஈ.வெ.கி., ப.ஜீ. அவர்களை விடுதலை செய்து விட்டார்கள்.

இந்தப்படி இந்த இரு தோழர்களும் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு விடுதலை யடைந்தார்கள் என்பதற்கு அவர்களே முழு ஜவாப்தாரிகள் அல்ல என்பதையும் பெரும் பான்மையான அளவுக்கு நானே ஜவாப்தாரி என்பதையும் முதலில் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இந்த மன்னிப்பு கொடுக்கப்பட்டதும், அதை சர்க்கார் ஏற்றுக் கொண்டதும் ஆகிய இரண்டு காரியமும் மிகுதியும் இந்தக் கேசையே பொறுத்தது மாத்திரமல்ல என்பது இதில் முக்கிய விஷயமாகும். விளக்கமாகச் சொல்ல வேண்டுமானால் சுயமரியாதை இயக்கத்தைப் பற்றி சர்க்காரார் மனதில் எப்படியோ தப்பு அபிப்பிராயம் ஏற்பட்டு எப்படியாவது சுயமரியாதை இயக்கத்தை அடக்கி அழித்துவிட வேண்டும் என்று தீர்மானித்து விட்டார்கள் என்பதாக நான் கொஞ்ச நாளைக்கு முன்பே தெரிந்து கொண்டேன்.

அன்றியும் நான் ரஷியாவில் கொஞ்ச காலம் தாமதித்து அங்கு இருந்து திரும்பி வந்த பிறகு, என் விஷயத்தில் சர்க்கார் எனக்கு ரஷ்யாவில் இருந்து பணம் வருவதாகவும், நான் ரஷ்ய ஒற்றனென்றும் சந்தேகப்பட்டு அதிக கவலை எடுத்து எனக்காக தனியாக ஒரு சுருக்கெழுத்து சி.ஐ.டி. சப் இன்ஸ்பெக்டர் மாதம் 200 ரூபாய் செலவிலும், எனது தபால்களை எல்லாம், வருவதையும், போவதையும், இரகசியமாய் உடைத்துப் பார்ப்பதற்கென்று ஒரு சி.ஐ.டி. சப் இன்ஸ்பெக்டரும் என் வீட்டு வாசலிலும், ஆபீசு வாசலிலும், போலீஸ் சேவகர்களும், நான் செல்லுமிடங்களிலெல்லாம் என் பின் தொடர்ந்து எனது போக்குவரத்தை கவனிக்க சில போலீஸ் கான்ஸ்டேபிள்கள் பின் தொடரவும் நியமிக்கப்பட்டு, அவர்கள் மூலம் சில அறிக்கை இடும் காரியங்கள் நடந்து கொண்டே இருந்தன இன்னமும் இருந்து வருகின்றன.

இவை தவிர பல தடவை ஆபீசும், வீடுகளும் சோதனை இடப் பட்டதுடன் என்னுடன் நெருங்கிப் பழகுகின்றவர்களுக்கும் இம்மாதிரி கவனிப்பும் அவர்களது தபால்களை உடைத்துப் பார்த்தல் ஆகிய காரியங்களும் நடந்து வந்தன.

உதாரணமாக தோழர் சர். ஆர்.கே. ஷண்முகம் அவர்களுடைய தபால்களைக்கூட சி.ஐ.டி. போலீசார் உடைத்துப் பார்த்து வந்திருக்கிறார்கள் என்றால் மற்றவர்கள் விஷயத்தைப் பற்றி எழுத வேண்டியதில்லை என்றே நினைக்கிறேன். மற்றும் நான் மேல்நாட்டுச் சுற்றுப் பிரயாணத்தில் இருந்து வந்த பிறகு, தமிழ் ஜில்லாக்களில் சுமார் 175 சுயமரியாதைக் கிளைச் சங்கங்கள் பல பெயர்களின் பேரால் ஏற்பட்டு ஏதோ சிறிது வேலை செய்து வந்ததை, சர்க்கார் C.I.D. இன்ஸ்பெக்டர்கள் ஆங்காங்கு சென்று அங்கத்தினர்கள் பயப்படும்படியான மாதிரியில் பல விசாரணைகள் வெளிப்படையாகவும், இரகசியமாகவும் நடத்தி தடபுடல் செய்ததின் மூலம் பல சங்கங்கள் பயந்து மூடப்பட்டும் யாதொரு வேலையும் செய்யாமலும் இருக்கவும் நேர்ந்துவிட்டது.

இயக்க சம்மந்தமுள்ள பல பெரிய ஆட்கள் என்பவர்களும், சர்க்கார் உத்தியோகம் முதலியவைகளில் சம்பந்தமுள்ள சிலர்களும், இதை அறிந்து இயக்கத்திலிருந்தும், சங்கத்தி லிருந்தும் விலகிக் கொள்ளவும் பாராமுகமாய்

இருக்கவும் ஆரம்பித்ததோடு "சுயமரியாதை இயக்கம் ஆபத்தான இயக்க"மென்று சொல்லவும் ஆரம்பித்துவிட்டார்கள்.

இவை ஒருபுறமிருக்க, இயக்கத்தில் கலந்து வேலை செய்து கொண்டு இருந்த தொண்டர்களில் பலர் தங்கள் உற்சாகத்தைக் காட்டிக் கொள்ளும் முறையில் தலைகால் தெரியாமல் வேகமாகப் பேசுவதும், பாடுவதும் அதைப் பார்த்த போலீசார் அங்கொன்றும் இங்கொன்றுமாக குறித்து சர்க்காருக்கு அனுப்பி நடவடிக்கை எடுத்துக் கொள்ளத் தூண்டுவதுமான காரியங்களும் எனது தகவலுக்கு அவ்வப்போது சில வந்து கொண்டே இருந்தது. அன்றியும் என் பேரிலும் என் தங்கை பேரிலும் இயக்கத்தை அடக்க வேண்டுமென்ற கருத்தோடே செய்ததாக எண்ணும்படி பல வழக்குகள் தொடுத்து காவல் தண்டனை, அபராதங்கள் முதலிய தண்டனைகளும் விதிக்கப்பட்டோம்.

இதனால் எல்லாம் நம்முடய விரோதிகள் பலரும் இயக்கத்தில் பொறுப்பில்லாமல் கலந்து விளம்பரம் பெற்று வாழ்ந்து வந்த சிலர் மாத்திரம் "பேஷ் பேஷ்" என்று நம்மை உற்சாகப்படுத்துகிற மாதிரியில் பேச முடிந்ததே ஒழிய மற்றபடி இயக்கம் வளர்ச்சியடைய முடியாமல் போகவும் சர்க்காரின் கடுமையான அடக்குமுறைக்கு ஆளாகுமே என்கின்ற பயத்திற்கும் இடம் தந்ததால் இயக்கப் பிரமுகர்களில் இரண்டொருவர் யோசனைக்கு இணங்கி இதைப்பற்றி சர்க்காரிலேயே சில பொருப்புள்ள அதிகாரிகளைக் கண்டு பேச வேண்டிய அவசியத்திற்கு உள்ளானேன்.

அப்படிப் பேசியதில் எனக்கும் இரஷியாவுக்கும் பணப்போக்குவரத்தோ, பிரசார சம்பந்தமோ ஏதும் இல்லை என்று விளக்க வேண்டி இருந்ததோடு சுயமரியாதை இயக்கம் சட்டமறுப்பு இயக்கமல்லவென்றும், சர்க்காரோடு ஒத்து உழையா இயக்கமல்லவென்றும், சட்டத்தையும் சமாதானத்தையும் மதியாத இயக்கமல்லவென்றும் எடுத்துச் சொன்னதோடு அதன் ஆரம்பகால முதல் நாளது வரை பல சமயங்களில் வெளியிடப்பட்டும், பல மகாநாடுகளில் தீர்மானிக்கப்பட்டும் இருக்கும் வேலைத் திட்டம், தீர்மானங்கள் முதலியவைகள் எல்லாம் சட்ட வரம்பிற்கு உட்பட்டு நடத்தும் காரியங்களாகவேதான் இருந்து வருகிறதென்றும் விளக்கிக் காட்டினேன்.

மற்றும் சட்ட விரோதமாக அல்லது ராஜத் துவேஷமுண்டு பண்ணுவதற்கு ஆக பதிப்பிக்கப்பட்டதென்றோ, பேசப்பட்டதென்றோ ஏதாவது காட்டப்படுமானால் அதற்குப் பதில் சொல்ல கடமைப்பட்டிருப்பதாகவும் ஒப்புக் கொண்டேன்.

இந்த நிலைமையில் பிரஸ்தாப வழக்கு சம்மந்தப்பட்ட விஷயங்கள் எனக்குக் காட்டப்பட்டன. அதைக் கண்ட பிறகு அது ராஜத் துவேஷமான விஷயம் என்று சர்க்கார் முடிவு செய்து விட்டார்கள் என்பதையும், அது எப்படியும் ராஜத் துவேஷமான விஷயம் என்று தீர்ப்புப் பெறும் என்பதையும் விவகாரம் பேசுவதில் பயன் ஏற்படாது என்பதையும் உணர்ந்தேன். உணர்ந்ததும் உடனே அதை மன்னித்து விடுங்கள் என்று சொல்லிவிட்டேன். அதிகாரிகளும் அந்தப்படியே ஒப்புக் கொண்டார்கள்.

ஆகவே இந்த சம்பவமானது இயக்க சம்பந்தமாய் சர்க்காருக்குள்ள தப்பபிப்பிராயத்தை நீக்க வேண்டும் என்பதற்காகவே ஏற்பட்டது என்பதை தெரிவித்துக் கொள்ளவே இதை எழுதுகிறேன்.

நம் இயக்கம் (சுயமரியாதை இயக்கம்) சமூகத் துறையில் உள்ள குறைகளை நிவர்த்திப்பதற்கென்றே ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வந்ததும், சர்க்கார் அதிகாரிகள் முதல் அனேக செல்வவான்களும் இயக்கத்தில் கலந்து வேலை செய்து வந்ததும் எவரும் அறியாததல்ல. ஆனால், சிறிது காலம் சென்றபின் மக்களுக்குள்ள சமுதாயக் கொடுமை தீர வேண்டியது எவ்வளவு அவசியமோ அது போலவே மக்களுக்குள்ள பொருளாதாரக் கொடுமையும் தீர வேண்டியதும் மிகவும் அவசியமென்று கருதியதால், பொருளாதார சம்பந்தமாக நாம் சிறிது பிரசாரம் செய்ய ஆரம்பித்தோம் என்றாலும் அதன் பிறகே அரசாங்கத்தார் தப்பபிப்பிராயங் கொண்டு இயக்கத்தை அடக்க அடக்குமுறை பிரயோகம் ஆரம்பித்து விட்டார்கள் என்று உணருகிறேன்.

இதையேதான் அதிகாரிகள் முன்பும் தெரிவித்துக் கொண்டேன்.

ஆனால் ஒரு அளவுக்கு சர்க்காருடன் ராஜி ஏற்படுத்திக் கொள்ளலாம் என்கின்ற ஆசையின் மீதே பொருளாதார விஷயத்தில் சமதர்மக் கொள்கையை பிரசாரம் செய்வதில் சர்க்காருக்கு ஆட்சேபணை இல்லை என்றும், ஜாதி மத சம்பந்தமான விஷயங்களில் வேறு ஜாதி மதக்காரர்கள் மனம் புண்படும்படியோ அவமானம் ஏற்படும்படியோ என்று இல்லாமல் ஜாதி மத கண்டனங்கள் செய்து கொள்ளலாம் என்றும் முடிவுக்கு வந்தோம். சர்க்காரோடு இந்த மாதிரியான ஒரு சமாதான முடிவுக்கு வராத பட்சம் சர்க்காருக்கும் நமக்கும் வீண் தொந்தரவும் மனக்கசப்பும் ஏற்பட்டுத் தீரும் என்கின்ற நிலையில் மற்ற ஆதாரங்களும் முயற்சிகளும் நிலைமைகளும் இருந்ததால் நான் இந்த சமாதானத்துக்கு வரவேண்டியதாயிற்று. ஆகவே இதன் பலன் என்னவானாலும் அதற்கு நானே பொறுப்பாளி என்றுதான் சொல்ல வேண்டும்.

சில இளைஞர்களுக்கு இது கேவலமாகத் தோன்றலாம்; என்றாலும் நாம் இயக்க சம்பந்தமாக நமது கொள்கைகளிலோ திட்டங் களிலோ எதையும் விட்டுக் கொடுத்து சமாதானம் செய்து கொண்டதாக எனக்குப் படவில்லை; ஆதலால் யார் எப்படி நினைத் தாலும் நமக்கு ஒன்றும் முழுகிப் போய்விடாது என்று தைரியமாகச் சொல்லுகிறேன்.

சுயமரியாதை இயக்கம் சட்ட வரம்புக்கு உட்பட்ட இயக்கம் என்பதையும், நாம் சட்ட வரம்புக்கு உட்பட்டு பிரசாரம் செய்கிறவர்கள் என்பதையும் ஈரோடு சுயமரியாதை இயக்கம் சமதர்மக் கட்சி வேலைத் திட்டத்திலேயே கடைசி பாராவில் தெளிவாய்க் காட்டி இருக்கிறோம்.

செங்கல்பட்டு மகாநாட்டின்போதும் இயக்க நோக்கம் வகுத்த போதும் நம் இயக்கம் சட்ட வரம்பிற்குட்பட்ட ஸ்தாபனம் என்றே குறிப்பு காட்டி இருக்கிறோம். மத்தியிலும் பல தடவையிலும் எனது வழக்கு ஸ்டேட்மெண்டி லும் குறிப்பு காட்டி இருக்கிறேன். மற்றும் ஆரம்ப முதல் காங்கிரஸை எதிர்த்து வந்திருப்பதோடு தென்னாட்டில் காங்கிரசின் ஆதிக்கத்தை சிறிதாவது குறையும்படி செய்த பெருமைக்காக நம்மை நாமே பல தடவை பாராட்டிக் கொண்டே வந்திருக்கிறோம்.

இனியும் நாம் காங்கிரசை பார்ப்பனர் கோட்டையென்றும், அதன் செல்வாக்கு அழிக்கப்பட வேண்டும் என்பதையும் முக்கிய நோக்கங்களில் ஒன்றாய் கருதிக் கொண்டும் இருக்கிறோம்.

இன்றும் அன்றாடம் நித்திய நடவடிக்கை களில் காங்கிரசின் பேரால் நடக்கும் சூழ்ச்சி களைக் கண்டு ஆத்திரம் காட்டி அவ்வப்போது கண்டித்துக் கொண்டு தான் வந்திருக்கிறோம்.

சுயராஜ்ஜியம் என்பது அர்த்தமற்றதும் பாமரர்களை ஏமாற்றுவதுமான வார்த்தை என்றும், தேசாபிமானம் என்பதும் தேசீய என்பதும் சிலருக்கு வயிற்றுப் பிழைப்பு நாடகம் என்றும், யோக்கியப் பொறுப்பற்ற காரியம் என்றும் ஆரம்ப முதலே சொல்லிக் கொண்டு வந்திருக்கிறோம்.

“இந்தியா பூராவுமே” பகிஷ்கரித்த சைமன் கமிஷனைக்கூட வரவேற்கச் செய்து அக் கமிஷனுக்கு உண்மை தெரியச் செய்தோம்.

இந்தக் காரியங்களால் ஒரு கூட்டத்தாரால் நாம் “தேசத் துரோகி’, “சர்க்கார் தாசர்’ என்ற பெயரைக்கூட வாங்கினோம்.

இதனால் எல்லாம் கெட்டுப் போகாத அழிந்து போகாத சுயமரியாதை இயக்கமும் அதன் பிரமுகர்களும் அதில் கலந்திருந்த தொண்டர்களும் இந்த அறிக்கையினாலோ சர்க்காருடன் சமாதானம் செய்து கொண்டதாலோ அழிந்து போகும் என்று யாராவது நினைப்பார்களானால் அவர்களுக்கு சமாதானம் சொல்லி கொண்டு நேரத்தைக் கெடுத்துக் கொள்வதை விட சற்று பொறுமையாய் இருந்து பாருங்கள் என்று சொல்லிவிடுவது புத்திசாலித் தனமான காரியமாகுமென்றே நினைக்கிறேன்.

சுதந்திர எண்ணம் தோன்றிய வாலிபர்கள் என்பவர்கள் என்னுடைய இந்த அபிப் பிராயத்துக்காக வெட்கப்படுவதாகக்கூடச்

சொல்லலாம். இயக்கத்தில் இருப்பதே தங்கள் சுயமரியாதைக்கு அழகல்லவென்றும் சொல்ல லாம். இதைப் பற்றி ஊரார் சிரிக்கிறார்கள் என்றும் பலர் சொல்லலாம். பலர் இயக்கத்தை விட்டுப் போய் விடுவதாகவும் சொல்லலாம்.

இவை எல்லாம் எந்த எப்படிப்பட்ட இயக்கத்துக்கும் ஒவ்வொரு சமயங்களில் இயற்கையேயாகும். பழைய வாலிபர்கள், ஆட்கள் கழிதலும் புதிய வாலிபர்கள் ஆட்கள் புகுதலும் குற்றமல்ல, கால இயற்கையேயாகும்.

அது மாத்திரமல்லாமல் இயக்கத்தில் முக்கியஸ்தர்களாக கருதப் பட்டு வந்தவர்களே இயக்கத்தையும் இயக்கத்தில் முக்கியமாய் வேலை செய்து கொண்டு இருப்பவர்களையும் குற்றம் சொல்லுவதும் இயற்கையேயாகும்.

எந்த இயக்கத்தை எடுத்துக் கொண்டு பார்த்தாலும் இது விளங்கும். ஜஸ்டிஸ் கட்சியில் தாசானு தாசர்களாய் இருந்தவர்கள் இன்று அந்தக் கட்சியை வைது கொண்டு அழிக்க முற்பட்டுக் கொண்டு திரிவது நமக்குத் தெரிய வில்லையா? காங்கிரசில் தாசானுதாசர்களாய் காந்தியாருக்குத் தாசானுதாசர்களாய் இருந்தவர்கள் காங்கிரசை வைதுகொண்டும், காந்தியாரை வைதுகொண்டும் இவை ஒழிந்தாலொழிய நாட்டுக்கு சேமமில்லை என்று சொல்லுகின்றவர்களையும் நாம் பார்க்க வில்லையா? பெசண்டு அம்மையாரை குருவாக வும், "தெய்வமாகவும்", அந்த ஸ்தாபனத்தைத் "தெய்வீக" ஸ்தாபனமாகவும் கொண்டாடி யவர்கள் இன்று அந்த அம்மையாரையும், அந்த ஸ்தாபனத்தையும் பயனற்றது என்றும் ஹம்பக் என்றும் சொல்லுகின்றதை நாம் பார்க்க வில்லையா?

மற்றும் சைவன் சைவ மதத்தையே வைவதும் விட்டுப் போவதும், வைணவன் வைணவ மதத்தையே வைவதும் விட்டுப் போவதும், கத்தோலிக்கன் கத்தோலிக்க மதத்தையே வைவதும் விட்டுப் போவதும், முஸ்லீம் முஸ்லீம் மதத்தையே வைவதும் விட்டுப் போவதும் இவற்றிற் கெல்லாம் புது ஆட்கள் வந்து சேர்ந்து கொண்டு இருப்பதும் ஆன காரியங்களை "தெய்வத் தன்மை பொருந்திய" மத விஷயங் களில்கூட நாம் தாராளமாய் தினமும் பார்த்து வர வில்லையா? ஆகவே இவற்றாலெல்லாம் ஸ்தாபனங்கள் ஆடிப்போகும் என்று கருதுவது அனுபவ ஆராய்ச்சி இன்மையே ஆகும். எவ்வித மாறுதலும், இறக்கமும், ஏற்றமும் பிற்போக்கும் முற்போக்குமான விஷயமாய் இருந்தாலும் திடமான மனதுடன் உண்மையான முடிவுடன் ஏற்பட்டதானால் ஒற்றை ஆளாயிருந்தாலும்கூட ஒரு நாளும் ஆடிப் போகாது என்பது உறுதி.

ஆனால் ஊரார் என்ன சொல்லுவார்கள் எதிரிகள் என்ன சொல்லு வார்கள் என்பதையே முக்கிய குறிப்பாய் வைத்து, அதற்கு அடிமையாகி மாற்றங்கள் செய்வதனால் மாத்திரம் அவற்றிற்கு அதிக ஆயுள் இருக்குமென்று கருத முடியாதே தவிர, மற்றபடி உண்மையும் துணிவும் உள்ள காரியத்தில் எவருக்கும் யாரும் பயப்பட வேண்டியதில்லை என்றே கருதுகிறேன்.

ஆகவே இயக்க சம்மந்தமாகவும் திட்டங்கள் சம்மந்தமாகவும், வழக்கு சம்மந்தமாகவும் சர்க்கார் நிலைமை சம்மந்தமாகவும் ஏற்பட்டுள்ள நிலைமையையும் அவசியத்தையும் விளக்கவே இதை எழுதுகிறேன்.

பெரியார், 'குடிஅரசு' தலையங்கம் 31.03.1935

**சுயமரியாதையும் பொதுவுடைமையும் [4]**

## 'மே' நாளைக் கொண்டாடுங்கள்!

*பெரியார் சமதர்ம பிரச்சாரத்தைத் தள்ளி வைப்பதாக அறிவித்த பிறகுதான் அதே ஆண்டு தொழிலாளர் தினமான 'மே' தினத்தைக் கொண்டாடுமாறு அறிக்கை வெளியிட்டார். அந்த அறிக்கை இது.*

சர்வ தேசங்களிலுமுள்ள தொழிலாளர்கள், ஆண்களும், பெண்களும் மே மாதம் 1ம் தேதியை "தொழிலாளர் தின"மாகக் கொண்டாடி வருகிறார்கள்.

ரஷிய சமதர்மத் தொழிலாளர்கள், தாங்கள் வெற்றி பெற்றுவிட்டதின் சந்தோஷத்தையும், பூரிப்பையும் அதன் பலனையும் எடுத்துக் காட்டுகிற தோரணையில் மே தினத்தை ரஷியாவில் கொண்டாடுகிறார்கள்.

பிற தேசங்களில், தொழிலாளர்களின் குறைபாடுகளை பகிரங்கப்படுத்தி, பரிகாரம் வேண்டுகிற முறையிலும் தொழிலாளர்களின் சுபீக்ஷ வாழ்க்கை, சமதர்ம முறையாலும், தொழில் நாயக அரசாலும் அதாவது தொழிலாளர் குடிஅரசாலுமே சித்திக்குமெனத் தீர்மானிக்கும் முறையிலும் மே தினம் கொண் டாடப்படுகிறது.

இந்தியாவிலும், சில வருஷங்களாக மே தினம் இங்கொரு இடத்தில், அங்கொரு இடத்திலுமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. சென்ற வருஷத்தில், இந்தியாவில் பல இடங்களில் கொண்டாடப்பட்டது. ஆனால் தமிழ்நாட்டிலோ, இவ்விழா மே மாதம் முதல் தேதி கொண்டாடப்பட்டது. பின் நமது பிரத்யேக வேண்டுகோளின்படி மே மாதம் 21ம் தேதி தமிழ் நாடெங்கணும் கொண்டாடப் பட்டது.

சு.ம. வீரர்களே! சம தர்மிகளே! தொழி லாளர்களே! தொழிலாளிகளின் தோழர்களே! இந்த வருஷத்தில் மே தினத்தை மே மாதம் முதல் தேதியில் தமிழ்நாட்டின் ஒவ்வொரு ஜில்லா விலும் உள்ள நகரங்கள் தோறும், ஆயிரக் கணக்கான தொழிலாளர்களைத் திரட்டி, வெகு விமரிசையாகக் கொண்டாட வேண்டுகிறேன்.

தேசம், மதம், ஜாதி என்கின்ற தேசீய உணர்ச்சிகளை மறந்து உலகத் தொழிலாளர் எல்லாம் ஒரே சமூகமாய் ஒன்றுபட்டு எல்லா தேச, மத, ஜாதி மக்களுக்கும் வாழ்க்கையில் சம உரிமையும், சம சந்தர்ப்பமும் கிடைக்கும்படி கொண்டாட வேண்டும் என்றும், தொழிலாளர் சமதர்ம ராஜ்ஜியம் ஏற்பட வேண்டும் என்னும் ஒரே அபிப்பிராயம் ஏற்படும்படி தொழி லாளர்களிடையில் பிரசாரம் செய்யவும், வேறு சாதகங்கள் பெறவும், இம் முயற்சியில் ஈடுபட வேண்டும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இங்ஙனம்
ஈ.வெ. ராமசாமி,
‘குடிஅரசு’ 28.04.1935

## தேர்தலைப் புறக்கணித்தார்; இயக்கத்தால் சாதித்தார்!

*‘பொதுவுடைமையரின் வருங்காலம்?’ என்ற தலைப்பில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் தோழர் தா. பாண்டியன் ஒரு நூல் எழுதியுள்ளார். இந்தியாவில் பொதுவுடைமை இயக்கம் ஏன் வளராமல் போயிற்று என்ற விரிவான ஆய்வை விவாதத்துக்கு உள்ளாக்கியிருக்கிறது அந்நூல். கம்யூனிஸ்ட் கட்சி என்பது தேர்தல் வெற்றி தோல்விக்கானது அல்ல; அது ஒரு இயக்கம் என்பதை கட்சி உறுப்பினர்களுக்கு வலியுறுத்த வேண்டும் என்று வலியுறுத்துகிறார், தோழர் தா. பாண்டியன்.*

*“கம்யூனிஸ்ட் கட்சி எந்த வழியிலும் எவருடன் சேர்ந்தாவது விரைவில் ஆட்சியைப் பிடிக்க வேண்டும் என்று போராடும் கட்சி அல்ல என்பதை உணர்த்த வேண்டும். அதாவது இலட்சியத்தை நோக்கிப் பயணம் செய்வது விரிவானது. அதற்குப் பெயர்தான் இயக்கம்” என்று வலியுறுத்தும் தோழர் தா. பாண்டியன், இதற்கு உதாரணமாக பெரியாரைக் குறிப்பிடுகிறார்:*

*“திராவிடர் கழகத்தை அமைத்த தந்தை பெரியார், தன் இயக்கம் தேர்தலில் போட்டியிடாது என அறிவித்தவர். மூட நம்பிக்கை ஒழிப்பு உயர் ஆதிக்க சாதி எதிர்ப்பு என்பதை முக்கிய கோரிக்கைகளாக வைத்து சமுதாய சீர்திருத்த இயக்கம் நடத்தியவர். அவர், இதே தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்டோருக்கு இட ஒதுக்கீடு செய்வது இந்திய அரசியல் சட்டத்துக்கு முரணானது என நீதிமன்றம் தீர்ப்பளித்ததால், அதை ரத்து செய்து, பிற்படுத்தப்பட்டோருக்கு இடஒதுக்கீடு செய்வதை மீண்டும் சட்டத்திருத்தத்தின் மூலம் உறுதிப்படுத்துக என்ற போராட்டத்தை நடத்தினார். அதாவது 1. நீதிமன்ற தீர்ப்பு ரத்து செய்யப்பட வேண்டும். 2. அதேபோல் இடஒதுக்கீட்டை சட்ட விதியில் சேர்க்க வேண்டும். இவைதான் அவரது கோரிக்கை.*

*இதை அடைய எழுதினார்; பேசினார்; மக்களைத் திரட்டி முழக்கம் எழுப்ப வைத்தார். அவரது கோரிக்கையை முன் மொழிவதற்குக்கூட நாடாளுமன்றத்தில் அவரது இயக்கப் பிரதிநிதிகள் இல்லை. வழி மொழியவும் ஆளில்லை. இருந்தும், அவர் கோரிய சட்டத் திருத்தம் மக்களின் இயக்கமாக விரிவடைந்ததால், அன்றைய பிரதமர் சட்டத்திருத்தம் கொண்டு வந்தார்; நிறைவேற்றி முடித்தார். இடஒதுக்கீடு 25 விழுக்காடு எனத் தொடங்கி தற்போது 69 விழுக்காடாக வளர்ந்துள்ளது.*

*இந்த சாதனையை தேர்தல் முறையைப் புறக்கணித்த திராவிடர் கழகம் செய்து முடித்திருக்கிறது என்பதை எவராலும் மறுக்க முடியாது.”*

தோழர் தா. பாண்டியன் நூலிலிருந்து

*மே தினக் கொண்டாட்டத்தில் ஏனைய நாடுகளுக்கும் இந்தியாவுக்கும் உள்ள வேறுபாட்டை எடுத்துக்காட்டிய பெரியாரின் உரை.*

தோழர்களே!

மே தினம் என்பதைப் பற்றி இங்கு இதுவரை 5, 6 தோழர்கள் எடுத்துச் சொல்லி விட்டார்கள். நான் முடிவுரை என்கின்ற முறையில் ஏதாவது பேச வேண்டுமென்று எதிர்பார்க்கிறீர்கள்.

மே தினம் என்பது இன்று உலகமெங்கும் ஒவ்வொரு தேசங்களிலும் கொண்டாடப்படுவதானாலும் ஒவ்வொரு தேசத்தில் ஒவ்வொரு விதமாகக் கொண்டாடப்படுகின்றது என்பதில் உண்மை இல்லாமல் இல்லை. ரஷ்யாவில் கொண்டாடப்படுவதுபோல் இங்கிலாந்தில்



# இந்தியாவுக்கு ஏற்ற மே தினம் எது?

கொண்டாடப்பட மாட்டாது. ஸ்பெய்னில் கொண்டாடப்படுவது போல் பிரஞ்சில் கொண்டாடப்பட மாட்டாது.

அதுபோலவே தான் மேல் நாடுகளில் ஐரோப்பா முதலிய இடங்களில் கொண்டாடப்படுவது போல் இந்தியாவில் கொண்டாடத்தக்க நிலைமை இல்லை.

ஏனெனில் ஒவ்வொரு தேசத்தின் நிலைமை வெவ்வேறான தன்மையில் இருந்து வருகின்றது. எல்லா தேசமும் ஒரே விதமான பக்குவத்தை அடைந்துவிடவில்லை.

ஆரம்ப தசையில் இருக்கிற தேசமும் முடிவை எட்டிப் பார்க்கும் தேசமும் ஒரே மாதிரி கொண்டாட வேண்டும் என்று கருதுவதும் புத்திசாலித்தனமாகாது.

இன்று ரஷ்யாவில் மே தினத்தைக் கொண்டாடுவதின் முக்கிய நோக்கம் பெரிதும் தங்கள் தேசத்தை மற்ற தேசங்கள் பின்பற்ற வேண்டும் என்கின்ற ஆசையைப் பொருத்ததாகும்.

இங்கிலாந்து, பிரஞ்சு முதலிய தேசங்களில் கொண்டாடுவதன் நோக்கம் ரஷியாவைப் பல விஷயங்களில் பின்பற்ற வேண்டும் என்கின்ற கருத்தைக் கொண்டு அதற்கு பக்குவம் செய்வதற்கு ஆசைப்படுவதாகும்.

எப்படி இருந்தாலும் அடிப்படையான நோக்கத்தில் ஒன்றும் பிரமாத வித்தியாசம் இருக்காது. அனேக துறைகளில் சிறப்பாக

சமுதாயத்திலும், பொருளாதாரத்திலும் ஒடுக்கப்பட்டு தாழ்த்தப்பட்டு இம்சைப் படுத்தப்பட்ட அடிமை மக்கள் சுதந்திரத்தையும் சமத்துவத்தையும் அடைய வேண்டும் என்கின்ற உணர்ச்சியே மே தினக் கொண்டாட்டத்தின் முக்கிய அம்சமாகும்.

அந்த உணர்ச்சி எல்லா மக்களுக்கும் ஏற்பட்டால் பிறகு அந்தந்த நாட்டு நிலைமைக்குத் தக்கபடி முயற்சியும் கிளர்ச்சியும் தானாகவே வந்துவிடும்.

ஒடுக்கப்பட்டுத் தாழ்த்தப்பட்ட அடிமை மக்கள் என்பவர்கள்கூட ஒவ்வொரு தேசத்தில் ஒவ்வொரு விதமாகவே இருக்கிறார்கள்.

மேல் நாடுகளில் இருக்கும் ஒடுக்கப்பட்ட மக்கள் என்பவர்கள் தொழிலாளிகள் என்கின்ற பெயரால் அவர்களது தொழில் நிலையையும் செல்வ நிலையையும் பொருத்து இருக்கிறார்கள்.

அதனாலேயே இந்தக் கிளர்ச்சிக்கு தொழிலாளி, முதலாளி கிளர்ச்சி யென்றும் வகுப்புப் போர் என்றும் சொல்லப்படுகின்றது.

ஆனால் இந்தியாவில் ஒடுக்கப்பட்டு தாழ்த்தப்பட்டு அடிமைப் படுத்தப்பட்ட மக்கள் என்பது தொழில் நிலையையும், செல்வ நிலையையும் முக்கியமாய்க் கொள்ளாமல் மக்களின் பிறவி நிலையையே பிரதானமாய்க் கொண்டு பெரும்பான்மையான மக்கள் ஒடுக்கப் பட்டும், தாழ்த்தப்பட்டும், அடிமைப்படுத்தப் பட்டும் இருப்பதால் தொழில் நிலைமையையும் செல்வ நிலைமையையும் நேரே நோக்கிக் கிளர்ச்சியோ புரட்சியோ செய்வது முக்கிய மானதாய் இல்லாமல் பிறவி பேதத்தையே மாற்ற கிளர்ச்சியும், புரட்சியும் செய்ய வேண்டியது முக்கியமாய் இருக்கின்றது. ஆதலால் தொழிலாளி முதலாளி கிளர்ச்சி என்கின்றதை விட மேல் ஜாதி, கீழ் ஜாதி புரட்சி என்பதே இந்தியாவுக்கு பொருத்தமானதாகும்.

ஏனென்றால் இந்தியாவில் தொழிலாளி என்று ஒரு ஜாதியும் அடிமை என்று ஒரு ஜாதியும் பிறவியிலேயே மத ஆதாரத்தைக் கொண்டே பிரிக்கப்பட்டு விட்டது.

நாலாவது வருணத்தான் அல்லது கீழான ஜாதியான் அல்லது சூத்திரன் என்று சொல்லப்படும் பிரிவே தொழிலாளி. அதாவது சரீரத்தால் உழைத்து வேலை செய்வதன் மூலம் மற்ற ஜாதியாருக்கு வாழ்நாள் முழுவதும் தொண்டு செய்ய வேண்டும் என்கின்ற நிபந்தனைக்குக் கட்டுப்பட்டதாகும்.

ஐந்தாவது ஜாதியான பஞ்சமன் அல்லது சண்டாளன் என்று சொல்லப்பட்ட ஜாதியான் என்பவன் வாழ்நாள் முடிய மற்ற ஜாதியாருக்கு அடிமையாய் இருந்து தொண்டாற்ற வேண்டும் என்கின்ற நிபந்தனைக்குக் கட்டுப்பட்டவன்.

இந்த இரு கூட்டத்தாரிடமும் கூலி கொடுக்காமலே வேலை வாங்கும் உரிமை மேல் ஜாதியானுக்கு உண்டு. அதுவும் மத சாஸ்திர பூர்வமாகவே உண்டு.

இது இன்றைய தினம் நிர்ப்பந்தத்தில் இல்லை என்று சிலர் சொல்லக் கூடுமானாலும் ஒரு சிறு மாறுதலோடு அனுபவத்தில் இல்லை என்று யாரும் சொல்லிவிட முடியாது.

பஞ்சம வகுப்பைச் சேர்ந்த மக்களாகிய சுமார் 6, 7 கோடி மக்களில் 100க்கு 99 பேர்கள் இன்று அடிமையாக இழி மக்களாக நடத்தப்பட வில்லை என்று யாராவது சொல்ல முடியுமா? என்று யோசித்துப் பாருங்கள். அதுபோலவே பார்ப்பனரல்லாதார் என்கின்ற இந்து மக்கள் ஆண், பெண் அடங்கலும் சூத்திரர்கள் அதாவது சரீர வேலை செய்யும் வேலை ஆட்கள் என்ற கருத்தோடு அழைக்கப்படுவது மாத்திர மல்லாமல் ஆதாரங்களில் குறிக்கப்படுவதோடு அந்தச் சூத்திரர்கள் என்கின்ற வகுப்பார்களே தான் இன்று சரீரப் பிரயாசைக்காரர்களாகவும், கூலிகளாகவும், உழைப்பாளிகளாகவும், ஏவலாளர்களாகவும், தொழிலாளர்களாகவும் இருந்து வருகின்றார்களா இல்லையா என்று பாருங்கள்.

மற்றும் ஜாதி காரணமாகவே, தொழிலாளி களாகவோ, சரீரப் பிரயாசைப்படும் உழைப்பாளிகளாகவோ இல்லாமலும் சரீரப் பாடுபடுவதைப் பாவமாகவும் கருதும்படியான நிலையில் சில ஜாதியார்கள் இருக்கிறார்களா இல்லையா என்றும் பாருங்கள்.

இந்தியாவில் தொழிலாளி முதலாளி அல்லது எஜமான் அடிமை என்பது பிரதானமாக பிறவி ஜாதியை அடிப்படையாகக் கொண்டிருப்பதால் இந்தியாவில் மே தினக் கொண்டாட்டம் என்பது பார்ப்பான் சூத்திரன்

பஞ்சமன் அல்லது சண்டாளன் என்கின்ற ஜாதிப் பிரிவுகள் அழிக்கப்பட வேண்டும் என்கின்ற நிலையில் தான் பெரியதொரு கிளர்ச்சியும் புரட்சியும் ஏற்பட வேண்டும் என்கின்ற கருத்தோடு இன்று கொண்டாட வேண்டியதாகும்.

இந்தியாவில் வகுப்புப் போர் என்பதற்குப் பதிலாக வேறு ஏதாவது சொல்ல வேண்டு மானால் ஜாதிப் போர் ஏற்பட வேண்டும் என்பதாகத்தான் சொல்ல வேண்டும்.

இந்தியாவில் ஒரு ஜாதியார் 100க்கு 99 பேர்கள் நிரந்தரமாக தொழிலாளியாகவும், அடிமையாகவும், ஏழைகளாகவும், மற்றவர் களுக்கே உழைத்துப் போடுகின்றவர்களாகவும் இருப்பதற்குக் காரணம் பிறவியில் வகுக்கப்பட்ட ஜாதிப்பிரிவே அல்லாமல் வேறு என்ன? இதை அடியோடு அழிக்காமல் வேறுவிதமான கிளர்ச்சிகள் எது செய்தாலும் தொழிலாளி முதலாளி நிலை என்பது அனுபவத்தில் இருந்துதான் தீரும்.

இன்று முதலாளி தொழிலாளி என்பதற்கு நாம் என்ன வியாக்கியானம் செய்கிறோம்? பாடுபடாமல் ஊரான் உழைப்பில் பதவி அந்தஸ்துடன் வாழுவதையும் பாடுபடுகின்றவன் ஏழையாய் இழிமக்களாய் இருப்பதையும் தான் முறையே சொல்லுகின்றோம்.

ஆகவே ஜாதியையும் அதற்கு ஆதாரமான மதத்தன்மையையும் அழிக்காமல் வேறு எந்த வழியிலாவது முதலாளி, தொழிலாளித் தன்மையை மாற்றவோ அல்லது அதன் அடிப்படையை அணுகவோ நம்மால் முடியுமா என்று பாருங்கள்.

இந்தியாவில் ஏழை மக்களுக்கு ஆக தாழ்த்தப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்களுக்கு ஆக பாடுபடுகின்றேன் என்று சொல்லுகின்றவர்கள் யாரானாலும் அதற்கு ஆதாரமும் அடிப்படை யுமான ஜாதிப் பாகுபாட்டையும் மதத் தன்மை யையும் ஒழிக்க சம்மதிக்கவில்லையானால் அவர்கள் எல்லோரும் யோக்கியர்கள் என்று நாம் சொல்லிவிட முடியாது. அரசியல் தலைவர் களில் எவரும் இதற்குச் சம்மதிப்பதில்லை.

ஏதாவது ஒரு தொழில்சாலையில் நித்திய கூலிக்கோ மாதச் சம்பளத்துக்கோ பாடுபடுகின்ற நான்கு தொழிலாளிகளைக் கூட்டி வைத்து பேசி விடுவதினாலேயே அல்லது அத் தொழிலாளிகள் விஷயமாய்ப் பேசி விடுவதினாலேயே அல்லது அவர்களுக்கு தலைமை வகிக்கும் பெருமையை சம்பாதித்துக் கொண்டதினாலேயே எவரையும் உண்மையான தொழிலாளிகளுக்குப் பாடுபட்டவர்களாகக் கருதிவிடக் கூடாது. அவர்களெல்லாம் அரசியல் தேசியம் ஆகியவற்றின் பேரால் வயிற்றுப் பிழைப்பு வியாபாரம் செய்வது போல் தொழிலாளிகளின் பேரால் வயிற்றுப் பிழைப்பு வியாபாரம் நடத்துகின்றவர்களாகவே பாவிக்கப்பட வேண்டியவர்களாவார்கள்.

இந்து மக்களின் மதமும் அவர்களது ஜாதிப் பிரிவும் தொழிலாளி முதலாளி தன்மையின் தத்துவத்தை நிலைநிறுத்தவே ஏற்படுத்தப்பட்ட தாகும். இந்தக் காரணத்தாலேயேதான் மற்ற நாட்டு மே தினக் கொண்டாட்டத்திற்கும், இந்நாட்டு மே தினக் கொண்டாட்டத்திற்கும் பெருத்த வித்தியாசம் இருக்கின்றது என்று சொல்லுகின்றேன்.

இந்த முதலாளி தொழிலாளி நிலைமைக்கு வெள்ளையர் கருப்பர்கள் என்கின்ற நிற வித்தியாசத்தைக் காரணமாகச் சொல்லிவிட முடியாது. ஏனெனில் தொழிலாளி முதலாளி வித்தியாசம் ஒழிக்கப்பட வேண்டும் என்கின்ற கருத்தை இந்தியர்கள் கவனத்துக்கு கொண்டு வந்தவர்களே வெள்ளையர்களேயாகும். அந்த முறை மாற்றப்படக் கூடாது என்பதை மதமாகக் கொண்டிருக்கிறவர்களே கருப்பர்களாகும்.

ஆகையால் இதில் வெள்ளையர் கருப்பர் என்கின்ற கருத்துக்கு இடமில்லை. ஆனால் பார்ப்பனர் பார்ப்பனர் அல்லாதார் என்பதைத் தான் முக்கியமாய் வைத்துப் பேச வேண்டி யிருக்கிறது.

இந்திய தேசியம் என்பதுகூட ஜாதியையும் மதத்தையும் காப்பாற்றுவதையே முக்கியமாய்க் கொண்டிருப்பதினால்தான் அப்படிப்பட்ட தேசியம் ஒருநாளும் தொழிலாளி முதலாளி நிலைமைகளை ஒழிக்க முடியாது என்பது மாத்திரமல்லாமல் இந்தத் தேசியம் தொழிலாளி முதலாளி தன்மை என்றும் நிலைத்திருக்கவே பந்தோபஸ்து செய்து வருகிறது என்று அடிக்கடி சொல்லி வந்திருக்கிறேன்.

இன்று நம் நாட்டில் உள்ள பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் என்கின்ற கிளர்ச்சி பெரிதும் தொழிலாளி முதலாளி கிளர்ச்சியே யாகும். இந்தக் கிளர்ச்சியின் பயனாகவே வருண தருமங்கள் என்பது அதாவது பிறவியிலேயே தொழிலாளி முதலாளி வகுக்கப்பட்டிருப்பது ஒரு அளவு மாறி வருகின்றது.

இந்தக் காரணத்தினால் தான் முதலாளி வர்க்கம் அதாவது பாடுபடாமல் ஊராரின் உழைப்பில் பலன் பெற்று வயிறு வளர்க்கும் ஜாதியாகிய பார்ப்பன ஜாதி அடியோடு அனேகமாய் எல்லோருமே இந்த பார்ப்பன ரல்லாதார் கிளர்ச்சிக்கு பரம எதிரிகளாய் இருந்து கொண்டு துன்பமும் தொல்லையும் விளைவித்து வருகிறார்கள்.

இக்கிளர்ச்சியை வகுப்புத் துவேஷம் என்றுகூட சொல்லுகிறார்கள். பார்ப்பனர்கள் பார்ப்பனரல்லாதார்கள் என்கின்ற இரு ஜாதியார்களுக்கும் பார்ப்பனர்கள் ஏற்படுத்தி வைத்திருக்கிற நிபந்தனைகளைப் பார்த்தால் வகுப்புத் துவேஷம் வகுப்புக் கொடுமை என்பவைகள் யாரால் செய்யப்பட்டு இருக்கிறது, செய்யப்பட்டும் வருகிறது என்பது நன்றாய் விளங்கும்.

நிற்க, தோழர் நீலாவதி அம்மையார் சொன்னதுபோல் முதலாளி தொழிலாளிக் கொடுமை ஒழிய வேண்டும் என்பதில் ஆண் பெண் கொடுமையும் ஒழிய வேண்டியது அவசியமாகும். ஆண்கள் முதலாளிகளாகவும், பெண்கள் தொழிலாளிகளாகவும், அடிமை களாகவும்தான் நடத்தப்பட்டு வருகிறார்கள். இதுவும் வெறும் பிறவி காரணமாகவே ஒழிய மற்றபடி இதில் வேறு காரணம் ஒன்றுமே இல்லை. ஆண், பெண் என்பதற்கு பிறவி காரணமாய்க் கற்பிக்கப்பட்டிருக்கிற பேதங்கள் நிபந்தனைகள் அடியோடு ஒழிக்கப்பட்டாக வேண்டும்.

இதற்கும் பெண் மக்கள் பெரியதொரு புரட்சிக்குக் கிளர்ச்சி செய்ய வேண்டும். ஆண் மக்களோடு தைரியமாய்ப் போர் தொடுக்க வேண்டும். பெண்கள் போர் தொடுக்க ஆரம்பித்தால் ஆண் மக்கள் சரணாகதி அடைந்தே தீருவார்கள்.

நிற்க, இந்த மே தினத்தை நாம் ஒரு பெரிய பண்டிகை போல் கொண்டாட வேண்டும். ஏனெனில் நமது பண்டிகைகளில் அனேகம் இம்மாதிரி வெற்றிகளை ஞாபகப்படுத்துவதே யாகும். தீபாவளி, ஸ்ரீராம நவமி முதலிய பண்டிகைகள் எல்லாம் இந்நாட்டில் ஆரியர்கள் திராவிட மக்களை வென்ற நாள்களையும் வென்ற தன்மைகளையும் கொண்டாடுவதைத் தவிர வேறொன்றுமே முக்கியமாய் இல்லை. இதெல்லாம் தெரிந்த பலர் கூடி இப்பண்டிகை களைக் கொண்டாடுவது இன்னாட்டில் மக்கள் உற்சாகத்திற்கு வேறு மார்க்கம் இல்லாததே ஒழிய மற்றபடி மதம், பக்தி, சுயமரியாதை அற்ற தன்மை என்பவைகளே அல்ல.

பெண்களையும் வேலை ஆள்களையும் சிறிதுகூட ஓய்வில்லாமல் அடிமை போல் நடத்துகிறோம். அவர்களுக்கு பண்டிகை, உற்சவம் ஆகியவைகள் தான் சிறிது ஓய்வும் சந்தோஷமும் கொடுக்கின்றன.

தண்டவாளப் பெட்டியில் வைத்துப் பூட்டி வைப்பதுபோல் பெண் ஜாதிகளைப் பூட்டி வைக்கும் சிப்பாய்களெல்லாம் உற்சவம் பண்டிகை என்றால் சிறிதாவது தாராளமாய் வெளியில்விட சம்மதிக்கிறார்கள். உற்சவங்களில் அவர்கள் நிலை எப்படி ஆனாலும் கவலைப் படுவதில்லை. கண்ணெதிரிலேயே நசுக்கப்படு வதையும், கசக்கப்படுவதையும் பார்த்துக்கூட சகிக்கிறார்கள். ஆதலால் நம் பெண்களுக்கும், தொழிலாளிகளுக்கும் எவ்வளவுதான் நாம் பகுத்தறிவையும், சுயமரியாதைக் கொள்கைகளை யும் போதித்தாலும் உற்சவமும், பண்டிகையும் அவர்களை விட்டு விலகவே முடியாது. எனவே நாம் இப்படிப்பட்ட பண்டிகைகள் சிலதை கொண்டாட ஏற்பாடு செய்தோமேயானால் மத சம்மந்தமான பண்டிகை, உற்சவம் ஆகியவைகளை மக்கள் கைவிடுவதற்கு அனுகூலமாயிருக்கும்.

ஆகவே தோழர்களே, இதுவரை நாங்கள் சொன்ன ஒவ்வொன்றையும் சிந்தித்துப் பார்த்து, தங்களுக்கு சரியென்று தோன்றியபடி நடக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொண்டு, இக் கூட்டத்தை முடித்து விடுகிறேன்.

**குறிப்பு:** 01.05.1935 ஆம் நாள் காரைக்குடியில் நடைபெற்ற மே நாள் விழாக் கொண்டாட்டத்தில் தலைமையேற்று ஆற்றிய முடிவுரை.

பெரியார், 'குடி அரசு' 12.05.1935



# பார்ப்பன மரபை எதிர்த்த – உலகம் கொண்டாடும் நாட்டியக் கலைஞர்

***இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற நடன–இசைக் கலைஞர் பாலசரஸ்வதி. பார்ப்பனரல்லாத சமுதாயத்தில் பிறந்தவர். வழிவழியாகக் கையளிக்கப்பட்ட பரதக் கலையை சாஸ்திரத்துக்கு உள்ளே அடைக்கும் முயற்சியை எதிர்த்தவர். இன்று அவரது மாணவர்கள் உலக நாடுகள் பலவற்றிலும் பரவி, பாலசரஸ்வதியின் புகழை உலகுக்குச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். பாலசரஸ்வதியின் நூற்றாண்டு கொண்டாடப்படும் வேளையில், பாலசரஸ்வதி வரலாற்றை 'பாலசரஸ்வதி: அவர் கலையும் வாழ்வும்' நூலாக எழுதியவரும் அவருடைய மருமகனும் (மகளை மணந்தவர்) மிருதங்கக் கலைஞருமான டக்ளஸ் எம். நைட்டுடன் ஒரு பேட்டி.***

*பாலசரஸ்வதி உங்களுக்கு எப்படி அறிமுகமானார்?*

1968-ல் அமெரிக்காவின் வெஸ்லீயன் பல்கலைக் கழகத்தில் படித்துக் கொண்டிருந் தேன். சிறு வயதிலிருந்தே எனக்கு நாடகத்தின் மீது ஆர்வம். கூடவே, மற்ற கலை வடிவங்கள் மீதும் மற்ற கலாச்சாரங்களின் இசை வடிவங்கள் மீதும் எனக்கு ஆர்வம் இருந்தது. எனது ஆசிரியர்களில் தஞ்சாவூர் ரங்கநாதனும் ஒருவர். பாலாம்மாவின் தம்பி அவர். ஒருமுறை ரங்கநாதனைப் பார்க்க அமெரிக்காவுக்கு பாலாம்மா வந்திருந்தார். அப்போதுதான் அவரைச் சந்தித்தேன். அப்போதுதான் அவரது நாட்டிய நிகழ்வை முதன்முறையாகப் பார்த்தேன், பரதநாட்டியத்துக்கு மிருதங்கம் வாசிக்கப்பட்டதையும் கண்டேன். அடிப்படை யில் நான் மிருதங்கக் கலைஞன். அப்போது, பாலாம்மா என்னையும் அவர்களின் பரத நாட்டியத்துக்கு மிருதங்கம் வாசிக்கும்படி ஊக்குவித்தார். ரொம்ப நல்ல அனுபவம் அது. அதற்குப் பிறகு மூன்று ஆண்டுகள் பாலாம்மாவின் மகள் லெட்சுமிக்காக நான் மிருதங்கம் வாசித்தேன். 1973-ல் இந்தியாவுக்கு வந்தேன். ஓராண்டு கழித்து ஒரு கச்சேரிக்காக முதன்முறையாக மிருதங்கம் வாசித்தேன். பாலாம்மா, லட்சுமி, பாலாம்மாவின் இன்னொரு தம்பி புல்லாங்குழல் விஸ்வநாதன் இவர்களுடன். பாலாம்மா வீட்டில்தான் அப்போது தங்கியிருந்தேன். என்னுடன் மிகவும் இனிமையாகப் பழகினாலும் எனக்கு உதவினாலும்கூட அவர் ஒரு தனிமைவிரும்பி என்பதை உணர்ந்தேன். நான் வெளி நாட்டுக்காரன் என்பதால் பாலாம்மா செய்யும் பல விஷயங்கள் எனக்குப் புரியாது. எனினும், அவரிடம் நான் எதையும் கேட்க மாட்டேன். வாயை மூடிக்கொண்டு கவனிப்பதுதான் பெரிய பயிற்சி. லெட்சுமியிடம் மட்டும் நிறைய கேள்விகள் கேட்பேன். ஒருவகையில் எனக்கும் பாலாம்மாவுக்கும் நடுவில் மொழி பெயர்ப்பாளர்போல லெட்சுமி இருந்தார்.

இப்படித்தான் அவருக்கும் எனக்கும் இடையே உறவு உருவானது.

**லெட்சுமிக்கும் உங்களுக்கும் இடையிலான காதலுக்குப் பிறகு, உங்களுக்கும் பாலசரஸ்வதிக்கும் இடையிலான உறவு எப்படி இருந்தது?**

கொஞ்சம் சிக்கலாகத்தான் இருந்தது. அம்மாக்கள் எப்போதும் அம்மாக்கள்தானே! ஒரு மருமகனாக என்னைக் குறித்து அவருக்கு நிறைய தயக்கங்கள் இருந்தன. மற்றபடி இசைக் கலைஞராக எனக்கும் அவருக்கும் இடையிலான உறவில் எந்தப் பிரச்சினையும் இல்லை. உண்மையில் பாலாம்மா உயிரோடு இருந்த போது அவரை நான் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. 2001-ல் என் மனைவி லெட்சுமி இறந்த பிறகுதான், பாலாம்மாவைப் பற்றிய புத்தகத்தை எழுதுவதற்கான தேடலில் ஈடுபட்டு பலரிடமும் பேசுகையில் பாலாம்மா எவ்வளவு உன்னதமான பெண்மணி-கலைஞர் என்பதை என்னால் முழுமையாக உணர்ந்துகொள்ள முடிந்தது.

**தமிழ்க் கலையுலகில் பாலசரஸ்வதி புறக்கணிக்கப்படுவது அவரது நூற்றாண்டிலும் கூட தொடர்கிறதே?**

மேலைநாடுகளில் பாலசரஸ்வதி முறையாக அங்கீகரிக்கப்பட்டிருக்கிறார். 'அமெரிக்காவின் ஈடிணையற்ற நடன பொக்கிஷங்கள்: முதல் நூறு பேர்' என்ற புகழ்பெற்ற பட்டியலில் சேர்க்கப்பட்ட மேற்குலகைச் சேராத ஒரே கலைஞர் பாலாம்மாதான். ஆனால், இங்கே நிலைமை வேறு. பத்ம விருதுகளைத் தாண்டி வாழ்ந்த காலத்திலேயே அவருக்கான அங்கீகாரங்கள் ஏதுமில்லை. அவர் மறைவுக்குப் பிறகு இந்தப் புறக்கணிப்பானது மேலும் அதிகமானது. இந்த நூற்றாண்டு தருணத்திலும்கூட நாங்கள் எவ்வளவோ முயற்சிகள் எடுத்தும் மத்திய, மாநில அரசுகள் கண்டுகொள்ளவே யில்லை. பாலாம்மாவின் பெயர் தொடர்ந்து மறைக்கப்படுவதன் பின் பெரிய அரசியல் இருக்கிறது. பாலாம்மாவின் பெயரே நடனத் துறையில் பலருக்கும் அச்சத்தை ஏற்படுத்துவது. பரதநாட்டியம் என்ற கலை மீது செய்யப்பட்ட ஆக்கிரமிப்புக்கு எதிரான பெயர் அவருடையது. அதனால்தான் இந்த அச்சம். இந்தக் கலையை ஒரு குறிப்பிட்ட வட்டத்துக்கு மட்டுமே உரியதாக ஆக்கிய 'பிராமணிய' ஆக்கிரமிப்பை பாலாம்மா எதிர்த்தார். இன்றும் அவருடைய மரபு அதற்கு எதிரானது. அதன் விளைவாகவே புறக்கணிப்பை எதிர்கொள்கிறார். அதேபோல, பாலாம்மாவின் பெண்ணான லெட்சுமிக்கோ, பேரனும் என் மகனுமான அநிருத்தாவுக்கோ ஆடுவதற்கான வாய்ப்புகள் அவ்வளவாகக் கிடைத்ததில்லை. எனினும், அதுபற்றியெல்லாம் கவலைப்படாமல் பாலாம்மாவின் உள்ளம் விரும்பிய பணிகளை முன்னெடுப்பதில் மட்டும் சளைக்காமல் ஈடுபட்டுவருகிறோம். உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால் இதில் நானே ரொம்பவும் அவநம்பிக்கைக் குள்ளாகித் தளர்ந்துவிட்டேன். அநிருத்தா நம்பிக்கையுடன் ஓடிக்கொண்டிருக்கிறான்.

**பாலசரஸ்வதியின் தனித்துவம் என்று எதனைச் சொல்வீர்கள்?**

ஒருவகையில் பாலாம்மாவையும் 'எலைட்' என்றுதான் சொல்ல வேண்டும். தனித்துவக் கலைஞர். அபூர்வமான ரசனை கொண்டவர்களால் மட்டுமே அவரை ரசிக்க முடிந்தது. ஏழு தலைமுறையின் பயிற்சி பாலாம்மாவுக்குள் ஒன்றாக ஊறியிருந்ததாலும், இரண்டு வயதிலிருந்து பாட்டிலும் நடனத்திலும் முழு மூச்சோடு அவர் பயிற்சி மேற்கொண்டதாலும் அவர் இப்படிப்பட்ட உன்னதமான கலை நிலையை அடைந்திருந்தார். ஆனால், இந்த 'எலைட்' தன்மையானது கலைஞர்களிடமிருந்துதான் வர வேண்டுமேயொழிய 'எலைட்' ரசிகர்கள் குழு என்று செயற்கையாக உருவாக்கப்படும் ஒன்றிலிருந்து வரக் கூடாது.

**பாலசரஸ்வதி பற்றி நீங்கள் எழுதிய புத்தகத்துக்கு வரவேற்பு எப்படி?**

ஆங்கிலத்தில் நல்ல வரவேற்பு. என்றாலும் பாலாம்மாவின் மொழியில் இந்த நூல் வெளியானதில்தான் எனக்குப் பெரிய மனநிறைவு. இந்த வரவேற்பையெல்லாம் தாண்டியும் அழுத்தமான ஒரு மௌனத்தை என்னால் உணர முடிகிறது.

நன்றி: 'தமிழ் இந்து'

# அலிகார் பல்கலையை வேட்டையாடிய காவிகள்

● ம.கி. எட்வின் பிரபாகரன்



உத்திரபிரதேசத்தில் செயல்பட்டு வரும், அலிகர் முஸ்லிம் பல்கலைக் கழகத்துக்குள் புகுந்து, துப்பாக்கி, தடி, கத்தி போன்ற ஆயுதங்களைக் கொண்டு மாணவர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல், நாடெங்கும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

அறுபதுக்கும் மேற்பட்ட மாணவர்கள் இதனால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த கொடூரமான தாக்குதலுக்கு பல கல்வியாளர்களும், மாணவர் அமைப்புகளும் கடும் கண்டனங்களை போராட்டங்களின் மூலம் தெரியப்படுத்தியுள்ளனர். இந்த தாக்குதலை நடத்தியது "ஹிந்து யுவவாஹினி" என்ற சங்பரிவார் அமைப்பாகும்

**தாக்குதலின் பின்னணி**

ஆர்.எஸ்.எஸ். ஷாகாக்கள் என்பது, ஹிந்துத்துவ வெறியர்களை உருவாக்குவதற்கு நடத்தப்படும் பயிற்சிகளாகும். இந்தியாவில் பல பல்கலைக்கழகங்களில் ஆர்.எஸ்.எஸ். ஷாகாக்கள் நடைபெற்று வருகின்றன. ஷாகா பயிற்சிகளால், பல வன்முறைகள் நாட்டில் நடந்துள்ளன. பனாரஸ் பல்கலைக் கழகத்தில் உருவாக்கப்பட்ட ஆர்.எஸ்.எஸ். அலுவலகம், 1976 ஆம் ஆண்டு, நெருக்கடி நிலை பிரகடனப்படுத்தப்பட்டபோது, அடித்து நொறுக்கப்பட்டது. இத்தகைய மதவெறியூட்டும் ஷாகாக்களை, அலிகார் முஸ்லிம் பல்கலைக்கழகத்தில் நடத்த, பல்கலைக் கழக துணைவேந்தர் தாரிக் மன்சூரிடம் அனுமதி கோரப்பட்டது. அனுமதி கோரியவர், ஆர்.எஸ்.எஸ்.ஸின் இஸ்லாமிய அணியான "முஸ்லிம் ராஷ்ட்ரிய மஞ்சை" சேர்ந்த மொஹம்மத் அமீர்ரஷித் ஆவார். ஆனால், ஆர். எஸ். எஸ்ஸின் இந்த விஷம பிரச்சாரங்களுக்கு அனுமதி அளிக்க துணைவேந்தர் மறுத்து விட்டார்.

இதனால் விரக்தியடைந்த அலிகர் தொகுதி பா.ஜ.க. எம்.பி. சதீஷ் கவுதம், ஒரு புதிய சிக்கலைக் கிளப்பிவிட்டார்.

"அலிகர் பல்கலைக் கழக மாணவர் சங்க அலுவலகத்தில், இந்தியாவை பிரித்து பாகிஸ்தானை உருவாக்கிய மொஹம்மது அலி ஜின்னாவின் படம், எண்பது ஆண்டுகளாக எப்படி இருக்கலாம்?" என்று கேள்வி கேட்டு சலசலப்பை ஏற்படுத்தினார். இதற்கு பதிலளித்த பல்கலைக் கழகச் செய்தித் தொடர்பாளர் பேராசிரியர் ஷக்வேகிட்வை, "ஜின்னா எங்கள் பல்கலைக் கழகத்தை உருவாக்கியவர்களுள் ஒருவர்; ஆயுட்கால உறுப்பினருங்கூட. ஆயுட்

கால உறுப்பினர்களின் படங்கள், மாணவர் சங்க அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளன. எனவே, ஜின்னா படமும் உள்ளது" என்று விளக்கினார். இந்த நியாயமான விளக்கத்தை ஏற்க மறுத்த சங்பரிவார்அமைப்புகள், "ஓடுமீன் ஓட, உறுமீன் வரும்வரை காத்திருந்ததாம் கொக்கு" என்பதை போல நேரம் பார்த்து காத்திருந்தன.

**மாணவர்கள் மீது தாக்குதல்**

2018 மே 2ஆம்நாள், பல்கலைக்கழக மாணவர் சங்கத்தின் "ஆயுட்காலஉறுப்பினர் ஆவதற்காக, முன்னாள் குடியரசு துணைத் தலைவர் ஹமீத்அன்சாரி, கல்லூரி வளாகத்துக்கு வந்திருந்தார். இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்ட, ஹிந்து யுவவாஹினி குண்டர்கள், துப்பாக்கி உள்ளிட்ட பயங்கர ஆயுதங்களோடு கல்லூரி வளாகத்துக்குள் நுழைந்தனர். எதிர்த்து நின்ற மாணவர்களை கண்மூடித்தனமாக தாக்கினர். மாணவர்களை "வந்தே மாதரம், ஜெய் ஸ்ரீராம்" என்றெல்லாம் சொல்லச் சொல்லி கட்டாயப்படுத்தினர். காவல்துறையோ வேடிக்கைப் பார்த்தது. ஆயுதகும்பலின் குறி, முன்னாள் குடியரசு துணைத் தலைவர் ஹமீத் அன்சாரி மீதே இருந்தது. அவர் தங்கியிருந்த விருந்தினர் மாளிகையை நோக்கியே சுட்டபடி நகர்ந் துள்ளனர். ஏற்கனவே, இந்தியாவில் இஸ்லாமியர்களின் பாதுகாப்பை குறித்து கேள்வி எழுப்பியவர் ஹமீத் அன்சாரி. இதனால் பல எதிர்ப்புகளையும் பலகாலமாக சந்தித்து வருபவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆயுதம் தாங்கி, விருந்தினர் மாளிகையை நோக்கி முன்னேறிய மதவெறி கும்பலில் ஆறு பேர், மாணவர்களிடம் பிடிபட்டனர். காவல் துறையிடம் ஒப்படைக்கப்பட்ட அந்த ஆறு பேரில், ஒருவர் மீதுகூட எப்.ஐ.ஆர். பதிவு செய்யப்படவில்லை. காவல்துறையின் இந்த செயல், மாணவர்களை கொதிப்படையச் செய்தது. இதன் விளைவாக, ஆயிரக்கணக்கான மாணவர்கள், காவல் நிலையத்தை முற்றுகை யிட்டனர். காவல்துறையோ, ஹிந்துவாஹினி ரவுடிகளோடு இணைந்து, மாணவர்கள் மீது தடியடி நடத்தியது: கல் வீச்சும் நடந்தது. இதனால், பல மாணவர்கள் படுகாயமடைந் தனர். மாணவர் சங்கதலைவர் மஷ்கூர்அஹ்மத் கடுமையாக தாக்கப்பட்டுள்ளதால், மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

காவிகளின் வெறியாட்டத்தின் விளைவாக, பல்கலைக் கழக நிகழ்ச்சியும் நிறுத்தப்பட்டது. செமஸ்டர் தேர்வுகளும், வகுப்புகளும் 5 நாட்களுக்கு நிறுத்தப்பட்டன. மாவட்ட நீதிபதி பி. சிங் 144 தடை உத்தரவை பிறப்பித்தார். போராட்டத் தீ பரவுவதை தடுக்க நினைத்த மாவட்ட நிர்வாகம், இணைய சேவையையும் முடக்கியது. மாணவர்களைக் காக்க வேண்டிய உ.பி. முதலைமைச்சர் யோகி ஆதித்யனாத்தோ, "ஜின்னா இந்த நாட்டை துண்டாடியவர். அவருடைய சாதனைகளை எப்படி கொண்டாட முடியும்?" என்று கருத்து தெரிவித்து பிரச்சனைகளை திசை திருப்ப முயன்றார். மாணவர்கள் ஜின்னாவின் சாதனைகள் எதையும் கொண்டாட முயற்சிக்காத போதே, இப்படிப்பட்ட அவதூறுகளை ஒரு முதலமைச்சரே பரப்பினார். வட இந்திய மக்களிடம் இருக்கும் கண்மூடித்தனமான இஸ்லாமிய எதிர்ப்பை, மேலும் கூர்தீட்டும் விதமாக, இத்தகைய திசை திருப்பல்களை, சங்பரிவார் அமைப்பினர் காலங்காலமாக செய்து வருகின்றனர்.

அலிகர் பல்கலைக் கழக மாணவர்கள் தாக்கப்பட்டதையடுத்து, அரசின் அடக்கு முறையையும் எதிர்த்து, பல்வேறு மாணவர் அமைப்புகள் வடஇந்தியா முழுவதும் போராட்டகளத்தில் இறங்கின. தங்களிடம் இருக்கும் அதிகாரத்தை வைத்து, பல கல்வி நிலையங்களை காவி மயமாக்கிய பாஜகவினர், தங்களுக்கு அடிபணியாத கல்லூரிகள் மீது ஆயுத தாக்குதலை ஏவிவிட ஆரம்பித்திருப்பது மிக மோசமான முன்னுதாரணமாகும்.

இத்தகைய ஆயுத கலாச்சாரத்தை, கல்வி நிலையங்களில் பரவவிடாமல் தடுக்க, முற்போக்கு மாணவர் அமைப்புகளை, அனைத்து கல்வி நிலையங்களிலும் பலப்படுத்த வேண்டியது நம்முன் உள்ள சவாலாகும்.

கட்டுரையாளர்: பெரியாரிஸ்ட்

*புராணங்களிலும் வேதங்களிலும் அறிவியல் இருந்தது என்ற மோசடிப் பிரச்சாரத்தை எதிர்க்காமல் அறிவியலாளர்கள் மவுனம் சாதிக்கலாமா?*

# புராணப் புரட்டுகளுக்கு அறிவியல் முலாம்

"கோட்சேயும் சாவர்க்கரும் இந்தியாவில் ஆங்கிலேயரை எதிர்த்த சுதந்திரப் போராட்ட வீரர்கள், புரட்சியாளர்கள்!" "ஐன்ஸ்டீனின் சார்பு நிலை கோட்பாட்டை விட உயர்ந்த கோட்பாடுகள் வேதங்களில் உள்ளன என்று ஸ்டீபன் ஹாக்கிங் சொல்லியிருக்கிறார்." "ஆரியர்களின் தாயகமான வட துருவம் பீகாருக்கும் ஒரிசாவுக்கும் நடுவில் இருந்தது." "பசுவை வழிபடுவதும், கோமாதா வழிபாடும் குழந்தைகளின் அறிவு வளர்ச்சிக்கு ஆகப்பெரிய பங்களிப்பை செய்யும் சக்தியுடையது" - இது போன்ற பிதற்றல்களை, பாரத வரலாறு என்றும், உலக வரலாறு என்றும் நமது பள்ளி மாணவர்களுக்குச் சொல்லித் தர வேண்டும் என்பது ஆர்.எஸ்.எஸ். கும்பலின் மதவாதத் திட்டம். இவற்றின் அடிப்படையில் பள்ளி வரலாற்றுப் பாடங்களைத் திருத்துவதற்கு முன் தயாரிப்பாக, மோடியின் கலாச்சாரம் மற்றும் பண்பாட்டுத்துறை அமைச்சர் மகேஷ் சர்மா, 14 பேர் கொண்ட ஒரு கமிட்டி அமைத்திருக்கிறார். இந்த கமிட்டியின் தலைவரான கே.என். தீட்சித் ஒரு ஆர்எஸ்எஸ் உறுப்பினர்.

**ராய்ட்டர்ஸ் அம்பலபடுத்தியது**

2016-ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட இந்த கமிட்டி பற்றிய விபரங்களை ராய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்தைச் சேர்ந்த ரூபம் ஜெயின், டாம் லசெட்டர் ஆகிய இரு பத்திரிகையாளர்கள் அம்பலப்படுத்தியிருக்கிறார்கள். "இந்துக்கள் தான் இந்த நாட்டின் பூர்வகுடிகள், வேதங்களிலும் புராணங்களிலும் சொல்லப்பட்டிருப்பவை கதை அல்ல, வரலாற்று உண்மைகள்" என்று நிரூபிப்பதற்குப் பொருத்தமான வகையில் புதைபொருள் ஆதாரங்களையும், மரபணு ஆய்வுகளையும் தொகுத்து முன் வைப்பதுதான் இந்த கமிட்டிக்கு வழங்கப்பட்டிருக்கும் வேலை. "கமிட்டியின் அறிக்கையை நாடாளுமன்றத்தில் வைத்து நிறைவேற்றிய பிறகு, அதன் பரிந்துரைகளைப் பள்ளிக் கல்வியிலும், ஆராய்ச்சித் துறைகளிலும் சேர்க்குமாறு மனித வளத்துறை அமைச்சகத்துக்கு அனுப்பி வைப்போம்" என்று கூறுகிறார் கலாச்சார அமைச்சர் மகேஷ் சர்மா. "கலாச்சார அமைச்சகம் பரிந்துரைக்கும் எல்லா விஷயங்களையும் அக்கறையோடு அமல்படுத்துவோம்" என்கிறார் மனித வளத்துறை அமைச்சர் பிரகாஷ் ஜாவ்டேகர். ஆர்.எஸ்.எஸ். செய்தித் தொடர்பாளர் மன்மோகன் வைத்யாவை ராய்ட்டர்ஸ் செய்தியாளர்கள் தொடர்பு கொண்டபோது, "இந்திய வரலாற்றின் உண்மையான நிறம் காவி. கலாச்சார மாற்றங்களைக் கொண்டு வருவதற்கு வரலாற்றை மாற்றி எழுத வேண்டும்" என்று அவர் கூறியிருக்கிறார். ஆர்.எஸ்.எஸ். வரலாற்று ஆய்வுப் பிரிவின் தலைவர் பால்முகுந்த் பாண்டே, "இந்து நூல்கள் கற்பனை அல்ல, உண்மை என்று நிரூபித்து, இந்தியாவின் கடந்த காலப் பெருமையை நிலைநாட்ட வேண்டிய நேரம் இது" என்று கூறியிருக்கிறார்.

**இந்து மதம் தான் இந்தியா**

முஸ்லீம்களும், கிருத்துவர்களும் இந்து கலாச்சாரத்தை ஏற்று, இந்துக்களின் தயவில் வாழ வேண்டும் என்ற பாசிச அரசியலைத் திணிப்பதற்கு இந்து மதம்தான் இந்தியாவின் மதம் என்று நிரூபிப்பது அடிப்படை தேவையாக இருக்கிறது. இந்தியாவில் பல்வேறு தேசிய இனங்கள் இருப்பதையும், பழங்குடி மக்கள், உழைக்கும் மக்களின் வழிபாட்டு முறைகளை இந்துமதம் உள்வாங்கிச் செரிக்க முயற்சித்திருக்கிறது என்பதையும் மறைப்பது அவர்களுக்குத் தேவையாக இருக்கிறது.எனவேதான், உயர் ஜாதி இந்துக்களின் வேத பாராயணம் போல, ஆர்.எஸ்.எஸ். ஷாகாக்களில் எது அன்றாடம் போதிக்கப்படுகிறதோ, அதையெல்லாம் மாணவர்கள் அனைவர் மீதும் திணிப்பதன்

மூலம் எல்லாப் பள்ளிகளையும் ஆர்.எஸ்.எஸ். ஷாகாக்களாக மாற்ற முயற்சிக்கிறார்கள். “இந்துக்கள் இந்தியாவின் பூர்வகுடிகள் மட்டு மல்ல, உலகம் முழுவதற்கும் அறிவையும், ஞானத்தையும் கொண்டு சென்றவர்கள். பழங்கால இந்தியாவிலிருந்து அறிவு முதலில் எகிப்துக்குப் போய், அங்கிருந்து ரோமாபுரிக் கும், ஐரோப்பாவுக்கும் பரவி, இறுதியாக அமெரிக்காவைச் சென்றடைந்தது” என்று சாதிக்கிறார்கள். கிருஷ்ணனும், அர்ஜூனனும் அஸ்வதாரி (நீராவிக் கப்பல்) ஒன்றின் மீது ஏறிப் பாதாள உலகத்துக்குச் (அமெரிக்கா) சென்றனர். உலொபி என்ற பாதாள மன்னனின் மகளைத் திருமணம் செய்து கொண்டான், அர்ஜூனன் என்று மகாபாரதத்தில் இருப்பதால், அந்தக் காலத்து மக்கள் வெளிநாடுகளுக்கும், அமெரிக்காவுக்கும் போய் வந்திருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள்.அனுமார் என்பவர் இராமாயணத்தில் சஞ்சீவி மலையை இலங்கைக்குத் தூக்கிச் சென்ற பலசாலி என்று நம்பும் வைணவர்கள் பலர் இருக்கிறார்கள். அனுமான் ஒரு சிரஞ்சீவி, அவனுக்கு இறப்பே இல்லை. எங்கெல்லாம் இராமனின் கதை சொல்லப்படுகிறதோ அங்கெல்லாம் வந்து உட்கார்ந்து கேட்டுக் கொண்டிருப்பான் என்றும் அவர்கள் உறுதியாக நம்புகிறார்கள். அந்த நம்பிக்கை அவர்களது தனிப்பட்ட விவகாரம். யாருக்கும் பிரச்சனை இல்லை, ஆனால், பாபர் மசூதிக்குள் 1949இல் திருட்டுத் தனமாக வைக்கப்பட்ட ராமன் சிலையை, இந்து பக்தர்களின் வழிபாட்டுக்குத் திறந்து விடும் உத்தரவை 1986இல் பிறப்பித்த பைசலாபாத் மாவட்ட நீதிபதி (கே.எம்.பாண்டே), நீதிமன்ற அறையில் மேற்கூரையில் குரங்கு வடிவில் அனுமார் அமர்ந்திருந்தார் என்று நம்பும்போது, நீதிபதியின் அந்த நம்பிக்கை அல்லவா தீர்ப்பைத் தீர்மானிக்கிறது.“பிள்ளையாருக்கு யானைத் தலை பொருத்தப்பட்டிருப்பது நமது முன் னோர்கள் பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சையில் தேர்ச்சி பெற்றிருந்தார்கள் என்பதைக் காட்டு கிறது” என்று இந்திய அறிவியல் மாநாட்டில் பேசிய பிரதமர் மோடி, விஞ்ஞானிகளையும் அவ்வாறே நம்பச் சொல்வதுதான் சிக்கல்.

**வரலாற்றின் வரலாறு**

வரலாறு என்பது பைபிள், குரான் அல்லது வேத புராணங்களில் சொல்லப்படும் கதைகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படு வதல்ல. அறிவியல் அணுகுமுறையின் மூலம் பல்வேறு வரலாற்றுத் தரவுகளைச் சரிபார்த்து, அவற்றுக்கிடையேயான இணைப்புகளைப் பொருத்திப் பார்த்து, படிப்படியாக ஒவ்வொரு செங்கல்லாக அடுக்கி உருவாக்கப்பட்டதுதான் இன்று அறிஞர்களால் ஏற்றுக் கொள்ளப்படும் அறிவியல் பூர்வமான வரலாறு. வரலாற்று ஆய்வு என்பது இலக்கிய ஆதாரங்கள் (வேதங்கள், சங்க இலக்கியங்கள், இதிகாசங்கள், காப்பியங்கள்), கல்வெட்டுகள், புதைபொருள் ஆய்வில் கிடைத்த ஆதாரங்கள் ஆகியவற்றை ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுத்தி நிறுவப்படுவதாகும். சமீப காலங்களில் மரபணு ஆய்வு மூலமாகவும் மனித குலத்தின் வரலாற்று நகர்வுகள் பற்றிய முடிவுகள் முன் வைக்கப்படுகின்றன.இப்போதைய நமது வரலாற்று அறிவு என்பது கடந்த 300 ஆண்டு களாக உலகெங்கிலும் உள்ள வரலாற்று ஆய்வாளர்களின் ஆய்வுகளை உறுதி செய்தும், மறுத்தும், மற்ற ஆய்வாளர்களுடனான வாத பிரதிவாதங்கள், விமர்சனங்கள், கருத்து பரிமாற்றங்கள் ஆகியவற்றின் மூலம் மேம் படுத்தப்பட்டும் உருவாகியிருக்கிறது.

**சங் பரிவாரத்தின் திணிப்பு**

சங் பரிவாரம் கூறும் வரலாற்றின்படி இராமாயணம் நடந்த திரேதா யுகத்தைத் தொடர்ந்து 8.4 இலட்சம் ஆண்டுகள் துவாபர யுகம் நீடித்தது (மகாபாரதம்) பாண்டவர்களின் ஆட்சிக்குப் பிறகு தொடங்கிய கலியுகம் இப்போது நடந்து கொண்டிருக்கிறது. ஆனால், இதுவரை திரட்டப்பட்ட புதைபொருள் ஆய்வுகளோ, மனிதன் காட்டுமிராண்டி நிலையிலிருந்து நாகரீக நிலைக்கு மாறியதே சுமார் 10,000 ஆண்டுகளுக்கு முன்புதான் என்று கூறுகிறது.இத்தகைய சூழலில், பாரதத்தில் பல இலட்சம் ஆண்டுகளுக்கு முன்பு மனித நாகரீகம் இருந்தது என்று சொன்னால், உலகம் இந்தப் ஆர் எஸ் எஸ் கும்பலைப் பார்த்து சிரிக்கும். எனவேதான், மேலே சொன்ன கமிட்டியின் ஆய்வை 12,000 ஆண்டுகளுக்கு முந்தைய இந்து நாகரீகத்தைப் பற்றிய ஆய்வு என்று தன்னடக்கத்தோடு குறிப்பிடுகிறார்கள்.

**அவர்களின் திட்டம்**

வரலாற்றைத் திருத்தி எழுத வேண்டும் என்பது ஆர்.எஸ்.எஸ். வகுத்த புதிய திட்டம்

இல்லை. 1977ல் ஜனதா ஆட்சியில் பங்கேற்ற போதே இந்துத்துவாதிகள் தங்கள் நம்பிக்கைக் குப் புறம்பான வரலாற்று நூல்களைத் தடை செய்ய வேண்டும் என்று கோரிக்கை வைத்தனர். வாஜ்பாய் பிரதமராக இருந்த தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசில் முரளி மனோகர் ஜோஷி மனித வளத்துறை அமைச்சராக இருந்தபோது பாடப் புத்தகங்களில் வரலாற்றை மாற்றி எழுதும் முயற்சி தொடங்கப்பட்டது. அதில் சிந்து சமவெளி நாகரீகம் என்பதை சிந்து-சரஸ்வதி நாகரீகம் என்று மாற்றியிருந்தனர். சிந்து என்ற உண்மையான ஆற்றை, சரஸ்வதி என்ற அவர்களது கற்பனையோடு இணைத்துப் பள்ளிக் குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுக்க ஆரம்பித்திருந்தனர்.தீனாநாத் பத்ரா எழுதிய புத்தகங்கள் குஜராத்திலும் அரியானாவிலும் பாடப் புத்தகங்களாகப் பயன்படுத்தப்படு கின்றன. இராஜஸ்தானில் வரலாற்றுப் புத்தகங்கள் ஏற்கனவே திருத்தி எழுதப்பட்டு விட்டன. 19ஆம் நூற்றாண்டில் சனாதன பார்ப்பன மதத்தை இந்து மதம் என்ற புதிய மொந்தைக்குள் அடைத்தவர்களுள் முக்கிய மான ஒருவரான தயானந்த சரஸ்வதி, கிருத்துவ பாதிரியார்களை எதிர்த்து வாதிடுவதற்கு அறிவியல் கண்டுபிடிப்புகளைத் தனது தேவைக் கேற்ப பயன்படுத்திக் கொண்டார். பைபிள் சொல்லும் பரம்பரை காலக்கோடு ஒரு சில ஆயிரம் ஆண்டுகள் வரை மட்டுமே நீளும் போது, இந்து புராணங்களில் சொல்லப்படும் கல்பகோடி யுகங்கள், பூமி 400-500 கோடி ஆண்டுகளுக்கு முன்பு தோன்றியது என்று நிலவியல் (ஜியாலஜி) சொல்வதுடன் ஒத்துப் போவதை அவர் பயன்படுத்திக் கொண்டார். இப்படி இந்துத்துவவாதிகள் அறிவியலைத் தமது நோக்கத்துக்கு ஒருபுறம் பயன்படுத்திக் கொள்வார்கள். இன்னொருபுறம், வேதங்களின் காலம் 3,000 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று மொழியியல் அறிஞர்கள் சொன்னால், அதை ஐரோப்பிய கிருத்துவ சதி என்று கூக்குரல் எழுப்புவார்கள்.

**பொய்யும் புளுகும்**

புஷ்பக விமானம் பண்டைய இந்தியாவில் விமான போக்குவரத்து இருந்ததற்கான ஆதாரம், பிரும்மாஸ்திரம்தான் அணுகுண்டு என எல்லாமே வேதங்களிலும், இதிகாசங்களிலும் இருந்ததாக அவிழ்த்துவிடும் வேலையை மிகவும் திறம்படச் செய்தவர் செத்துப்போன மூத்த சங்கராச்சாரி, சந்திரசேகரேந்திர சரஸ்வதி. குவாண்டம் இயற்பியலின் நிச்சயமின்மை கோட்பாட்டை முன்வைத்த ஜெர்மனியைச் சேர்ந்த ஹைசன்பர்க், அதை வேதங்களில் இருந்துதான் கற்றுக் கொண்டார் என்றார் உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங். ஹைசன்பர்க் வேதங்களைப் படித்ததே இல்லை என்று சுட்டிக் காட்டியதும், அவர் தாகூரிடம் ஒரு முறை பேசியிருக்கிறார், அதிலிருந்து வேதங்களைப் பற்றித் தெரிந்து கொண்டார் என்று சாதித்தனர். ஆனால், ஹைசன்பர்க் தாகூரைச் சந்திப்பதற்கு 2 ஆண்டுகளுக்கு முன்பாகவே நிச்சயமின்மை கோட்பாட்டை உருவாக்கி வெளியிட்டிருந்தார். இப்போது ஐன்ஸ்டினின் சார்பியல் கோட் பாட்டை விஞ்சுகின்ற அறிவு வேதங்களில் இருக்கிறது என்று ஹாக்கிங் கூறியதாக அவிழ்த்து விட்டிருக்கிறார் அமைச்சர் ஹர்ஷ் வர்த்தன். ஹாக்கிங் இவ்வாறெல்லாம் சொன்ன தில்லை என்று இதற்கு மறுப்பு தெரிவித்திருக் கின்றனர் ஹாக்கிங் அறக்கட்டளையினர். அறிவியலாளர்கள் மாநாட்டில் ஹர்ஷ் வர்த்தன் இப்படி பேசியிருப்பது குறித்து நோபல் பரிசு பெற்ற வேதியியல் ஆய்வாளரும் இலண்டன் ராயல் சொசைட்டி ஆப் சயின்ஸின் தலைவருமான வெங்கி. ராமகிருஷ்ணனிடம் பத்திரிகையாளர்கள் கேட்டிருக்கிறார்கள்." நான் ஏதாவது கருத்து சொன்னால், உடனே என்னை மேற்கத்திய சிந்தனைக்கு அடிமையாகி விட்டவன் என்பார்கள். அறிவின் மிகப்பெரிய எதிரி, அறியாமையல்ல. தான் எல்லாம் அறிந்தவன் என்ற மயக்கம்தான் என்பார் ஹாக்கிங். அதைத்தான் நான் வலியுறுத்த விரும்புகிறேன். என்னிடம் கருத்து கேட்பது இருக்கட்டும். இந்தியாவில் ஒன்றுக்கு மூன்று அறிவியல் கழகங்கள் இருக்கின்றனவே, அமைச்சரின் பேச்சு பற்றி அவர்கள் என்ன சொல்கிறார்கள்? அவர்களைக் கேளுங்கள்" என்றாராம் ராமகிருஷ்ணன். இதுதான் நம் கவனத்துக்குரியது. பாடத்திட்டத்தை இந்துத்துவ மயமாக்குவது பற்றி ராய்ட்டர் எழுதுகிறது. ஹர்ஷ்வர்த்தனின் அறிவியல் சிதைப்பு பற்றி ராமகிருஷ்ணன் கருத்து சொல் கிறார். ஆனால், இங்கிருக்கும் அறிவியலாளர்கள் ஏன் மவுனம் சாதிக்கிறார்கள்? அவர்களுடைய மவுனம் பாசிசத்துக்கு வாசிக்கப்படும் வரவேற்புரையா?

(இணையத்திலிருந்து)

# வாசகர்களிடமிருந்து...




ந.பிரகாசு எழுதிய 'அய்.பி.எல்.லுக்கு தமிழ் நாட்டில் தடை கேட்டது அவமானமா' கட்டுரை அரிய தகவல்களைத் தந்தது. யாரையும் தொடாமல் விளையாடும் விளையாட்டாக கிரிக்கெட் இருப்பதுதான் பார்ப்பனர்கள், இந்த விளையாட்டை அதிகம் நேசிக்கக் காரணம் என்று ஆய்வாளர் இராமச்சந்திர குகா கூறியுள்ள கருத்து மிகவும் சரியானது. கிரிக்கெட்டையும் அரசியலையும் ஏன் இணைத்துப் பார்க்க வேண்டும் என்று கேட்போருக்கு, சூதாட்டப் புகாரில் சிக்கிய ஒரு விளையாட்டை தமிழ்நாட்டில் விளையாட அனுமதிப்பது தமிழ்நாட்டுக்கே அவமானமில்லையா என்று கட்டுரையாளர் அளித்த பதில் மிகவும் சிறப்பு.

**– மணிவண்ணன்,** திருச்சி

உச்சநீதிமன்ற தலைமை பார்ப்பன நீதிபதி தீபக் மிஸ்ரா மீதான ஊழல் குற்றச்சாட்டுகளை 'நிமிர்வோம்' இதழில் படித்த போது அதிர்ச்சியாக இருந்தது. அருணாசலப் பிரதேச ஆட்சியை மத்திய அரசு கலைத்தபோது முதல்வராக இருந்த காலிக் கோ புல்லின் 60 பக்கம் கடிதம் எழுதி வைத்துவிட்டு தற்கொலை செய்து கொண்டதும், அந்தக் கடிதத்தில் ஆட்சிக்கு ஆதரவாக தீர்ப்பளிக்க தீபக் மிஸ்ரா உறவினர்கள் இலஞ்சம் கேட்டதையும் துணிவுடன் 'நிமிர்வோம்' பதிவு செய்ததற்காக பாராட்ட வேண்டும்.

**– செல்வி,** வில்லிவாக்கம்

உங்களுடைய உரிமைகளை எந்த ஒரு பெரிய மனிதனின் பாதங்களில் முன் வைக்காதீர்கள். உங்களுடைய சமூக அமைப்புகளைச் சீர்குலைக்கக் கூடிய அதிகாரங்களை எந்தப் பெரிய மனிதனிடமும் அளிக்காதீர்கள் என்று ஜான்ஸ்டுவர்ட் கருத்தை மேற்கோள் காட்டி புரட்சியாளர் அம்பேத்கர் கூறியிருப்பது இந்தக் காலத்துக்கு அப்படியே பொருந்துவதாக இருக்கிறது. சமத்துவத்தை மறுக்கும் சமூக முரண்பாடுகளைக் களையாமல் போனால் நம்முடைய அரசியல் ஜனநாயகத்துக்கே ஆபத்தானதாக முடியும் என்று அம்பேத்கர் தந்த எச்சரிக்கை எவ்வளவு சரியானது என்பதை இப்போது நாம் அனுபவத்திலேயே உணர்கிறோம்.

**– நந்தகுமார், தூத்துக்குடி**

15ஆவது நிதிக் குழுவின் கொள்கைகளால் தென்னகம் வஞ்சிக்கப்படுவது குறித்த ஆழமான பொருளாதார ஆய்வுக் கட்டுரைகள் கடந்த இரண்டு இதழ்களாகத் தொடர்ந்து 'நிமிர்வோம்' வெளியிட்டு வருகிறது. இப்போது அரசியல் தலைவர்களும் தொலைக்காட்சி விவாதங்களிலும் இந்தக் கருத்துகள் விவாதங்களுக்கு உள்ளாகி வருவது மகிழ்ச்சி தருகிறது. நாட்டின் பொருளாதாரம் அதற்குப் பின்னால் உள்ள அரசியல் குறித்த பார்வையிலிருந்து தமிழர்கள் ஒதுங்கி நிற்க முடியாது. 'நிமிர்வோம்' இத்தகைய ஆழமான கட்டுரைகளை தொடர்ந்து வெளியிட வேண்டும்.

**– சரவணா,** மயிலாடுதுறை

'பெரியார் - உ.வே.சா சந்திப்பும் சொல்லாடலும்' கட்டுரை பல வரலாற்றுத் தகவல்களை இளைஞர்களுக்கு கூறியிருக்கிறது. பெரியார் குறித்த விமர்சனங்கள் அந்தக் கட்டுரையில் சில பகுதிகளில் இடம் பெற்றிருந்தும் 'நிமிர்வோம்' நேர்மையுடன் பதிவு செய்திருக்கிறது. தமிழ் அறிஞர்களிலேயே பார்ப்பனர் - பார்ப்பனரல்லாதார் பாகுபாடு நிலவியதை பெரியார் எழுத்து அருமையாகப் படம் பிடித்துக் காட்டியது. பெரியாரின் 'குடிஅரசு' மிக விரிவான தளங்களில் பயணித்திருக்கிறது. 'தமிழர் அன்பர் மாநாடு' குறித்து 1933இல் 'குடிஅரசு' விவாதங்களை நடத்தியிருக்கிறது என்பதையும் பார்ப்பனர்களுக்கு ஆதரவாக நின்ற தெ.பொ. மீனாட்சி சுந்தரம் போன்றவர்களுக்குக் கிடைக்க வேண்டிய நிதி உதவியைக்கூட உ.வே.சா. தட்டிச் சென்றார் என்பதையும் கட்டுரை சுட்டிக் காட்டி யிருக்கிறது. பெரியார் கதர் மூட்டைகளைச் சுமந்து விற்ற போது 'மேலாடை' இல்லாமல் மூட்டைகளோடு தொடர் வண்டியில் பயணித்திருக்கிறார் என்ற செய்தி நெஞ்சை உலுக்கியது.

**– பெரியார் பற்றாளன்,** விழுப்புரம்

'கீற்று' நந்தன் பா.ஜ.க.வின் பாலியல் குற்றங்கள் குறித்த தொகுப்பு மிகச் சிறந்த ஆவணம். அந்தக் கட்டுரையைத் துண்டறிக்கைகளாக அடித்து மக்களிடம் பரப்ப வேண்டும்.

**– அஜீத்,** காவலாண்டியூர்

கடந்த இதழில் மரணத் தருவாயிலும் பயணத்தை நிறுத்தாதவர்; பெரியார் பங்கேற்ற திரைப்பட விழா என்ற இரண்டு செய்திகளும் மிகச் சிறப்பு. உடல்நலம் குன்றிய நிலையிலும் தான் ஒப்புக் கொண்ட நிகழ்ச்சிக்குப் போக வேண்டும் என்று கூறிய 'நேர்மை' மெய்சிலிர்க்க வைக்கிறது. பெரியார் பெரியார் தான்.

**– ஜெயந்தி,** சென்னை

சமயச் சடங்குகளால் கொல்லப்படும் நதிகள், வரலாற்றில் வலங்கை-இடங்கை ஜாதி மோதல்கள் - சிலை உடைப்பு - அரசியல் உள்ளிட்ட அனைத்துக் கட்டுரைகளும் பயனுள்ளதாக இருந்தன. 'நிமிர்வோம்' இதழுக்குப் பாராட்டுகள்.

**– கார்த்திக், வேளச்சேரி**



# பதாகைகளோடு வருகிறார்கள், பாலச்சந்திரர்கள்

அப்பா!
எல்லா அப்பாக்களையும் போல்
நீயும் இருந்திருந்தால்
என் தாத்தாவும் பாட்டியும்

இந்நேரம் முசிறியில் மூச்சோடு
இருந்திருப்பார்கள்!

அப்பா!
எல்லா அப்பாக்களையும் போல் நீயும்
இருந்திருந்தால்
என் அக்கா அமெரிக்காவிலும்
என் அண்ணன் கனடாவிலும்
நான் இலண்டனிலும்
சொகுசாகப் படித்துக் கொண்டிருப்போம்!
என் அப்பாவா நீ... இல்லையப்பா
நீ நீ நீ எங்கள் அப்பா!
எங்கள் என்பது...
அக்கா அண்ணன் நான் மட்டும் இல்லை!
எங்கள் என்பது...
செஞ்சோலை காந்தரூபன் செல்லங்கள்
மட்டும் இல்லை!

எங்கள் என்பது... உலகெங்கிலும் உள்ள
என் வயது நெருங்கிய
என் அண்ணன்கள்
என் அக்காள்கள்
என் தங்கைகள்
என் தம்பிகள்
அனைவருக்குமானது!

ஆம்... அப்பா!
நீ எங்கள் அனைவருக்குமான
‘ஆண் தாய்’ அப்பா!
அதனால்தான் சொல்கிறேன்...
நான் மாணவனாக இருந்திருந்தால்
என் மார்பில் மதிப்பெண்களுக்கான
பதக்கங்கள் பார்த்திருப்பாய்!
நான் மானமுள்ள மகனாய்
இருந்ததால்தானே அப்பா
என் மார்பில் இத்தனை விழுப்புண்கள்
பார்க்கிறாய்!

சிங்கள வீரர் ஒருவரது மனைவியின்
வயிற்றில் வளர்ந்த கருவுக்கும் கூட
கருணை காட்டிய அப்பா!
உன் பிள்ளை
உலக அறமன்றத்துக்கு முன்
ஒரே ஒரு கேள்வி கேட்கிறேன்!

பன்னிரெண்டு வயது பாலகன் துப்பாக்கி
தூக்கினால் அது போர்க் குற்றம்!
பன்னிரெண்டு வயது பாலகன் மீது
துப்பாக்கியால் சுட்டால்...
இது யார்க் குற்றம்?
என்னைச் சுட்ட துப்பாக்கியில்
எவர் எவர் கைரேகைகள்?

உலக அறமன்றமே!
உன் மனசாட்சியின் கதவுகளைத் தட்டித் திறக்க
உலகெங்கிலுமுள்ள பாலச் சந்திரர்கள் அதோ
பதாகைகளோடு வருகிறார்கள்!
பதில் சொலுங்கள்!

**– அறிவுமதி**

தமிழ்நாட்டில் முசிறியில் ஒரு மருத்துவர் இல்லத்தில்தான் நீண்டகாலம் மேதகு பிரபாகரன் பெற்றோர் அவரது பராமரிப்பில் இருந்து வந்தனர்.

Printed by K.RAJENDRAN. Published and Owned by K.RAJENDRAN and Printed at BEAUTIFUL PRINTER, 27/65, Devaraj Street, Royapettah,Chennai-600014 and Published at Old No.29, New No.16, Ist Street, Journalists Colony, Srinivasapuram, Thiruvanmiyur, Chennai-600041. Editor:K.RAJENDRAN